KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT

VOLUME : 1 ISSUE : 5 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 116 / News / 2010



ஒளிரும் விளக்கு
ஒற்றுமையின் சின்னம்

உறங்கும்
உண்மைகள்


கடல்நீரால்
எரியும் தீபம்

www.kalaikesari.com / MAY 2010

| | | |
|---|---|---|
| INDIA...............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE...EUR 7.00 |

ISSN 2012-6824
9772012682008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


PUBLIC LIBRARY
JAFFNA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்







அட்டைப்படம்:
வெசாக் வெளிச்சக்கூடு


06 இடுப்பணிகள்

10 முக்கலைகளின் உச்சியைத் தொட்ட பாகவதர்

18 தொலைந்து போகும் தமிழர் பாரம்பரியங்கள்

30 உறையும் உண்மைகள்

36 கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுக்கி அடிக்க பாலாறு...

44 கடல்நீரால் எரியும் தீபம்

52 உலகின் உச்சியில் ஒரு முத்து

60 ஒளிரும் விளக்கு ஒற்றுமையின் சின்னம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பும் அஹிம்சையும் சாந்தியும் மனித குலத்தின் வேண்டுதல்கள்

அன்பார்ந்த வாசகர்களே வணக்கம்!

கலைக்கேசரி சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் தற்போது உங்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் என நம்புகிறோம். கன்னம் குழிவிழச் சிரிக்கும் தன் மழலையை வாரி எடுத்தணைக்கும் அன்னையைப் போல் கலைக்கேசரியை நீங்கள் ஆர்வமாக எடுத்துப் புரட்டிப் பார்ப்பது உண்மையில் எமக்குப் பெருமகிழ்ச்சியையும் புத்துணர்வையும் தருகின்றது. இந்த அன்பும், ஆதரவும் தொடரட்டும்.


நாளது ஒன்று போல் காட்டி உயிரீனும் வாளது உணர்வார்ப் பெறின் என்றார் வள்ளுவப் பெருந்தகை. நாள் ஆனது உயிரீனும் வாள் என்ற உண்மையை மனதில் நிறுத்தி நாள் என்பதை நமக்கும் பிறர்க்கும் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டிய மகத்தான கடமை மனிதர்களாகிய எமக்குண்டு. நேற்றிருந்தார் இன்றில்லை என்றவாறு கழித்து விடாமல் அந்த நேற்று எம் பெயர் சொல்லிக் கொள்வதாக ஆக்கிக் கொள்வதும் நம்கையில் தான் தங்கியிருக்கிறது.

நாட்கள் பற்றிச் சிந்திக்கும் போது திருநாட்களும் நம் சிந்தனைக்கு வந்து விடுகிறது. திருநாட்கள் பொதுவாக எக்காலமும் மாந்தர்க்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தருபவையாக இருக்கின்றன. மே மாதம் என்னும் இவ்வைகாசி மாதம் பெருமைமிக்க விசாகத் திருநாள் மாதமாக இந்து மக்களுக்கு அமைய, பௌத்தர்களைப் பொறுத்தவரை வெசாக் பெருநாள் மலரும் மாதமாக அமைந்து எங்கும் ஒளியைப் பரப்புகிறது.

கௌதம புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் பெற்றதுமான தினங்களாக வைகாசிப் பூரணைநாள் அமைந்து புனிதத்துவத்தைப் பரப்புகிறது. அன்பும் அஹிம்சையும் சாந்தியும் பௌத்த மதத்தின் உயிர் நாடிகளாகும். எக்காலத்தும் மனித குலத்தின் வேண்டுதல்கள் இவ்வரிய பண்புகளே.

இவை நம் நாட்டில் தழைத்தோங்க நாம் பிரார்த்திப்போம். மீண்டும் புத்தம் புது அம்சங்களுடன் கலைக்கேசரி வாயிலாகச் சந்திப்போம்.

வணக்கம்




**PUBLISHER**
**Express Newspapers (Cey) (Pvt) Ltd.**
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5322700
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**PHOTOS**
N. Joy Jeyakumar
S. M. Surendran
Sabita N.
Shehal Joseph
DushiYanthini K.

**CONTRIBUTORS**
Prof. S. Sivalingaraja
Kalaimamani Pon. Theivendran
Pathma Somakanthan

**LAYOUT**
S. Pressanna
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan

**CIRCULATION**
S. Alexandar

**PRODUCTION**
L. A. D. Joseph


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடுப்பணிகள்

தங்கத்தால் உருவான அணிகலன்களையும் ஆபரணங்களையும் அணிந்து தம்மை அலங்கரித்துக் கொள்வதில் மனிதர்கள் அளவற்ற ஆசை கொண்டவர்களாக உள்ளார்கள். அந்த வகையில் மகளிரைப் போல் ஆடவரும் பொன் அணிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டதாக சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தற்காலத்தில் ஒட்டியாணம் என்று அழைக்கப்படுகின்ற அணிகலன்களை பழங்காலத்தில் 'இடை அணி' என்று சிறப்பாக அழைத்ததாகத் தெரியவருகிறது. முற்காலத்தில் பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் இடுப்பணிகளை அணிந்திருந்தார்கள் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பெண்கள் இடுப்பில் அணியும் பொன் அணிகலன்களுள் முக்கியமான ஒன்றாக 'ஒட்டியாணம்' திகழ்கிறது. இதன் பழைய பெயர் 'உடைஞாண்' என்பதாகும். ஆண்கள் 'அரைஞாண்' அணிவது போல அக்காலத்துப் பெண்கள் 'உடைஞாண்' அணிந்திருந்தனர். அதுமட்டுமல்லாமல் 'உடைஞாண்' ஆபரணம் பெரும்பாலும் பொன்னால் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'உடைஞாண்' எனும் சொல் தற்போது பேச்சு வழக்கில் 'உடையாணம்' என்று திருத்தி வழங்கப்பட்டுள்ளது. 'உடைஞாணம்' என்ற சொல் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் 'ஒடையாணம்' என்று மருவி பின்னர் 'ஒட்யாணம்' எனவும் வழங்கப்படுகிறது. 'ஒட்யாணம்' என்ற சொல் இலக்கண அமைதி பெற்று தமிழில் 'ஒட்டியாணம்' என்ற சொல்லாக மருவியுள்ளது.

ஆண்கள் அணிந்த இடை அணிக்கு 'உதர பந்தம்' என்ற பதம் இலக்கியங்களில் காணப்படுகிறது. 'உதரம்' என்று சொன்னால் இடை அல்லது வயிறு என்று பொருள் கொள்ளமுடியும். முக்கியமாக இந்த இடை அணிகளை மன்னர்கள் மற்றும் முனிவர்கள் ஆகியோரும் அணிந்துள்ளதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆண், பெண் என இருபாலார் மட்டும் அல்லாமல் குழந்தைகளும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இடை அணிகளை அணிந்திருக்கிறார்கள். குழந்தைகள் அணிந்த இடை அணிகளை 'அரைத்தொடர்' என்று சிறப்பாக அழைத்தார்கள். பொதுவாக குழந்தைகளின் இடுப்பில் பொன் மற்றும் வெள்ளியால் ஆன சங்கிலிகளை இடையணிகளாக அணிவிப்பார்கள். இவற்றை 'இடுப்புச் சங்கிலி' என்றும் சொல்லலாம். தமிழ் இலக்கியங்கள் இதனை சிறப்பாக 'கிண்கிணி' என்று கூறுகின்றது.


கந்தர் அலங்காரத்தில்

'கிண்கிணி சிந்த விளையாடும் பிள்ளை
திருவரையில் கிண்கிணி ஓசை
பதினான்கு உலகமும் கேட்டதுவே'

எனக்கூறப்படுவதில் இருந்து அக்காலங்களில் குழந்தைகளின் இடையில் 'கிண்கிணி' என்று அழைக்கப்படும் இடுப்பணி அணிவிக்கப்பட்டமை தெரிய வருகிறது.

மேலும் பெண்கள் அணியும் இடை அணிக்கு பல்வேறு வகைகளான பெயர்கள் காணப்பட்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன. பொதுவாக ஒட்டியாணம் என்ற இடை ஆபரணத்தை 'மேகலை' என்று இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அந்த மேகலை எனும் ஆபரணம் பல மணிகள் கோர்க்கப்பட்டு வடங்களாக பூணப்பட்டதாகவும் மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விருச்சிகை போன்ற பெயர்கள் ஒரு கருத்துடைய பொருளைக் கொடுத்ததாகவும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

மேகலை என்ற இடுப்பு ஆபரணத்துக்கு ஏழு கோவைகள் என்றும், காஞ்சி என்ற இடையணிக்கு எட்டுக் கோவைகள் என்றும், கலாபம் என்ற இடையணிக்கு 16 கோவைகள் என்றும், பருமம் என்ற இடையணிக்கு 18 கோவைகள் என்றும், விருச்சிகை என்ற இடையணிக்கு 32 கோவைகள் என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இங்கு கோவைகள் என்று குறிப்பிடப்படுவதற்கு மணிகள் கோர்க்கப்பட்ட வடங்கள் என பொருள் கொள்ள முடியும்.



மேலே கூறப்பட்ட தரவுகள் தொடர்பாக சில இலக்கியங்களில் ஏற்றத் தாழ்வும் மாறுபாடு கொண்ட கருத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. 'பருமம்' என்று சொல்லுக்கு பொதுவாக இலக்கியங்கள் 18 வடங்கள் எனக் கூறுகின்றன. ஆனால் அதற்கு விதிவிக்காக திருவிளையாடல் புராணம் 'பருமம்' என்பதை ஈரேழு வடம் (14 வடங்கள்) என்று குறிப்பிடப்படுகின்றது. இதுதவிர மேகலைக்கு 8 வடங்களும் காஞ்சிக்கு இரண்டு வடங்களும் கலாபத்துக்கு 21 வடங்களும் விருச்சிகைக்கு 32 வடங்களும் இருந்ததாக வேறு சில இலக்கியங்கள் கூறப்பிடுகின்றன.

இலக்கியங்களில் இடையிலே அணியப்படும் ஆபரணங்கள் பற்றி பல குறிப்புக்கள் விரவிக்கிடக்கின்றன. 'பல்காசு நிறைத்த சில்காழ்' என்று திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியார் குறிப்பிடுகின்றார். இதற்கு அவர் உரை எழுத்தும்போது பல காசுகள் நிறைந்த சில்காழ் எனும்போது 7 வடமாகிய மேகலை என்று குறிப்பிடுகின்றார். 'பருமம் தாங்கிய பணிந்தென்றல்' என அதே திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள பருமம் என்ற இடையணிக்கு 18 வடங்கள் இருந்தது என்பதை அத்திருமுருகாற்றுப்படை எடுத்து உரைத்துள்ளது.

மேலும் இலக்கியங்களை நாம் எடுத்துப் பார்க்கும்போது 'காஞ்சி' எனும் இடை அணிக்கு இலக்கியம் இன்னும் ஒரு கதையை வலுவாகக் கூறுகிறது. காஞ்சிபுரம் என்னும் அழகிய கோவில் நகரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அன்னையின் உடலில் காணப்பட்ட ஆபரணங்கள் 64 துண்டுகளாக விழுந்து அன்னையின் சக்தி பீடங்களாக மாறின என்பது புராண வரலாறு ஆகும். அந்தவகையில் அன்னையின் இடையில் இருந்து அணி விழுந்த இடம் என்ற காரணத்தால் அதை 'காஞ்சிபுரம்' என்று சிறப்பாக அழைக்கிறார்கள். 'கொழிக்கும் காஞ்சி' என அமுதாம்பிகை பிள்ளைத் தமிழிலும் கூறப்படுவது காஞ்சிக்கு மேலும் மெருகு சேர்க்கிறது.

மேலும் 'பருமணி காலாபம்' என்ற வரி இராமாயணத்தில் வருகின்றது. இங்கு கூறப்பட்ட பருமணி கலாபம் என்பதற்கு இடைப்பட்ட மணி, பருமனான மணி என்று பொருள் கொள்ளமுடியும். இதற்கு முத்து, இரத்தினம், பவளம் போன்ற நவமணிகள் என்பவற்றை கோர்த்து அக்காலத்தவர்கள் அணிந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சித்திரபொற் காஞ்சி செறிந்த பேரழகு' எனவும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளதன் காரணமாக காஞ்சி என்ற இடையணியைப் பற்றி நாம் தெரிந்து கொள்கிறோம். மணிமேகலை என்ற இலக்கியத்தில் இடுப்பில் அணியப்படுகின்ற ஒலியை விட உயர்ந்தவள் பெண் என்று சொல்லுமளவுக்கு மணிமேகலை எனும் இடையணி உயர்ந்ததாக இருந்திருக்கின்றது.

அதேபோன்று பெண்களின் கால் தொடையில் அணியப்பட்ட ஆபரணம் ஒன்று காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது இவ்வகையான ஆபரணங்கள் அணியப்படாவிட்டாலும் கிருஷ்ணாபுரம் போன்ற சிற்ப தலங்களில் உள்ள சிற்பங்களை நோக்கும்போது இவ்வாறான ஆபரணங்கள் அணிந்திருந்தமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தொடைஆபரணத்திற்கு 'குறங்கணி' என்று பெயர் வழ்ங்கப்பட்டுள்ளது. இங்கு 'குறங்கு' என்பதற்கு தொடை என்று பொருள் கொள்ள முடியும். வாழை மரம் போன்ற தொடைகளைக்கொண்ட பெண்கள் அணிந்த அணியாக இக்குறங்கணிகள் விளங்குகின்றன. எனவே இவ்வாறான ஆபரணம் சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்தமையை இலக்கியங்களில் நமக்கு எடுத்துரைக்கின்றன.

எனவே பிள்ளைத்தமிழ், இராமாயணம், கந்தர் அலங்காரம் போன்றவற்றில் இடையணிகளைப்பற்றி குறிப்பிடப்பட்ட காரணத்தால் இவை எவ்வளவு காலத்தால் முந்தியவை என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். மேலும் கடவுளாகிய சிவன் மாத்திரமல்லாமல் மன்னர்களும் அணிந்த இடையணியாக 'உதரபந்தம்' விளங்கியுள்ளது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மன்னர்கள் என அனைவரும் இடையணிகளை காலங்காலமாக அழகிற்காகவும் ஆபரணத்தேவைக்காவும் அணிந்ததுடன் கடவுட்சிலைகளுக்கும் சிற்பங்களுக்கும் அணிவித்து மகிழ்ந்தார்கள். அத்துடன் பெண்களைப்பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப்படும்போது அப்பெண்ணிற்கு இடை என்பது உள்ளதா அல்லது இல்லையா என்பதில் தமிழ்ப் புலவர்களுக்கே சந்தேகங்கள் பல எழுந்துள்ளதை நாம் காணுகிறோம். இராமாயணத்தில் சீதையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'பொய்யோ எனும் இடையாளோடும்' என வர்ணிக்கப்படுகிறது. பொய் என்று சொல்லும்போது இல்லை எனப்பொருள் கொள்ள முடியும். எனவே ஒரு நூலையும் பெண்ணின் இடையையும் இணைத்துப் பார்க்கும்போது இடையைவிட நூல் பருமனாக உள்ளது என்பது வாதமாகும்.

இருவரியில் ஒரு காவியம் கொடுத்த திருவள்ளுவர்கூட

'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு
நல்ல படாஅ பறை'

என்று கூறுகிறார். அவளுக்காக நல்லபறை ஒலிக்கவில்லை. ஏனெனில் அவள் இடை ஒடிந்து வீழ்ந்துவிட்டாள். காரணம், அவள் அனிச்ச மலர்களைக் காம்பு நீக்காமல் தலையில் வைத்துக்கொண்டதுதான் என்பது அதன் கருத்துரையாகும். மென்மைக்கு உதாரணமாக திருக்குறளில் கூறப்படும் மலர் அனிச்சம் பூ ஆகும். அதன் காம்பைக் கிள்ளாமல் தலையில் வைத்த காரணத்தால் அவளின் இடை ஒடிந்தது என்பதில் இருந்து அந்தக்காலப் பெண்ணிண் இடை எவ்வளவு சிறுத்தது என்பது எமக்குப் புலனாக்கிறது.

மேலும் பெண்ணின் இடையை 'துடி' எனவும் சிறப்பாக அழைப்பார்கள். துடி என்றால் உடுக்கை எனப்பொருள் கொள்ள முடியும். இந்த உடுக்கை மேல் மற்றும் கீழ் பகுதிகளில் பருமனாகவும் நடுவிலே கை பிடிக்கின்ற பகுதி சிறுத்தும் காணப்படும். இக்காரணத்தாலே பெண்ணின் இடையை துடி என்று வழங்குகிறார்கள். எனவே இவற்றில் இருந்து தமது இடை அழகிற்காக அக்காலத்துப் பெண்கள் இடையணிகளைப் பயன்படுத்தினார்கள் என்ற கூற்றை நாம் ஏற்றுகொள்ள முடியும்.

**தகவல் : வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**
**தொகுப்பு : பிரியங்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முக்கலைகளின் உச்சியைத் தொட்ட பாகவதர்:

# மகனின் நடிப்பைக் கண்டு மயங்கி விழுந்த தாய்

2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியை இசையுலகம், நாடக உலகம், சினிமா உலகம் என்ற கவின் கலைகளை வளர்க்கும் இம் மூவுலகுமே ஒரு இசை, நடிப்பு மேதையின் நூற்றாண்டை நினைவு கூர்ந்தமை ஒரு இனிமையான செய்திதான்.

தங்க நிறமேனி, அதற்கேற்றாற் போன்ற நிறமுள்ள மேற் சட்டை, பளபளக்கும் சரிகை ஜொலிக்கும் அங்கவஸ்திரம், காதுகளிலும் கைகளிலும் மின்னும் வைரங்கள், நெற்றியில் சந்தனம் அதன் மேல் குங்குமப்பொட்டு, தோள்வரையான சுருண்ட முடி. பட்டு வேட்டி ஆகிய எடுப்பான தோற்றத்துடன் கம்பீரமாகக் காட்சி தரும் எம். கே. தியாகராஜ பாகவதர் இலங்கைக்கு இரு தடவைகள் வருகை புரிந்து ஒப்பாரும் மிக்காருமற்ற தன் இசை, நடிப்பு மேதைமையால் ரசிகர் உள்ளங்களையெல்லாம் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்.

அன்று யாழ்ப்பாணத்திலே இவரது 3 மணி நேரக் கச்சேரி நிறைவு பெற்றதும் விழாத் தலைவர் பாகவதரை மிக உச்சத்தில் வைத்துப் பாராட்டி மகிழ்ந்தார். பின்னர் உரையாற்றிய



பாகவதர், சம்பிரதாயமாகச் சில வார்த்தைகளைக் கூறிய பிறகு "விருந்து என்றால் கறி, கூட்டு, சாம்பார், பொரியல், அவியல், ரசம், தயிர், பாயாசம் என சுவையாகப் பலதும் இருக்க வேண்டுமே. இன்றைக்கு எனது கச்சேரி சிறப்பாக அமைந்த தென்றால் எனது பக்கவாத்தியக்காரர்களின் திறமைதான் காரணம்" எனப் பண்பாடாகப் பேசி தன்னோடு உடன் வாசித்தவர்களையும் பாராட்டினார்.

தஞ்சாவூரைச் சேர்ந்த முத்துவேல் ஆசாரியின் மகளான மாணிக்கத்தம்மாள், அதே குலத்தொழில் செய்யும் கிருஷ்ணமூர்த்தி என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு பிறந்த தியாகராஜன், கோவிந்தராஜன், சண்முகம், அமிர்தவல்லி, புஷ்பவல்லி, பங்கஜவல்லி என ஆறு குழந்தைகளில் மூத்தவராக 1910 மார்ச் மாதம் முதலாம் திகதி பிறந்தவரே பாகவதர் ஆவார். இவர் சிறுவனாயிருக்கும் போது அடுப்பெரிக்க மண்ணெண்ணெய் வாங்கி வரும்படி காசு கொடுத்துத் தாயார் கடைக்கு அனுப்ப, அப்பணத்திற்கு முறுக்கு வாங்கித் தின்று பசியைப் போக்கி விட்டுப் போத்தலில் தண்ணீரை நிரப்பிக் கொணர்ந்து தாயிடம் கொடுத்தார். அத்தனை வறுமையான குடும்பம் அது. 'மக்கள் நாயகனான' இந்த இசை மேதையின் இளமைக் காலம் கொடுமை யானதாகவே கழிந்தது.

பாலக்கரை என்ற ஊரில் பழைய ஜெபமாலை மாதாகோவிலிலே ஆரம்பக் கல்வி கற்ற தியாகராஜன் தந்தையின் கட்டளைப்படி நகைத் தொழிலையே பழகினான். இளமையிலேயே இசையில் நாட்டமும் வித்வத்தன்மையும் இயல்பாகவே அவனிடம் குடிகொண்டிருந்ததால் தூரிகையைக் கையில் தூக்கி, நகையைச் சுத்தம் செய்யும் போது வாய் பாடத் தொடங்கி விடும். அவன் இசைக்கும் காந்தர்வ கானத்தைக் கேட்க சனம் கூட்டம் கூடி விடும். சிறுவனும் உற்சாகத்துடன் மேலும் பாடத் தொடங்கி விடுவான்.

இதுவே அன்றாடப் போக்காக இருக்கவும், தந்தையார் கிருஷ்ணமூர்த்தி அலுத்துப் போய் எரிச்சலடைந்தார். அவருக்கு பாட்டு இசை எதிலுமே விருப்பமில்லை. ஆகையால் மகனைக் கண்டித்தார். பாடக் கூடாது எனத் தடை போட்டார். சிறுவனுக்கோ பாடாமல் இருக்க முடியவில்லை. வீட்டை விட்டு ஓடிப் போய்க் கோவில்களிலே நடக்கும் பஜனைக் கூட்டங்களோடு இணைந்து பாடத் தொடங்கி விட்டான்.

வீட்டில் மகனைக் காணாத தந்தை, தாயின் இடித்துரைப்பாலும் அவனைத் தேடத் தொடங்கினார். சனக்கூட்டத்தின் மத்தியிலே மகன் இனிமையாகப் பாடிக் கொண்டிருக்க கேட்போர் கிறங்கிப் போய் உட்கார்ந்திருப் பதைப் பார்த்த பின்னும் அவர் மகனைத் திட்டி ஏச முற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச் சூழ்ந்த மக்களே மகனின் அற்புதமான சாரீரத்தையும் இறைவன் அருளியுள்ள அந்த இசையையும் வளர்க்க வேண்டுமென புத்திமதி கூறிப் பாராட்டிய போதுதான் கிருஷ்ணமூர்த்தி தனது மகனின் திறமையை உணர்ந்தார். அதன் பின்னரே தியாகராஜனை இசை கற்க அனுமதித்தார்.

இன்று போல் தொழில் நுட்பம் ஒளி, ஒலி ஊடகங்கள் வளர்ச்சி பெறாத அக்காலத்திலே நேரடிக் கச்சேரிகளும் கிராமப் போன் இசைத் தட்டுகளுமே பிரபலம் பெற்றிருந்தன. நாடகம், இசை என்பனவே மக்கள் ரசனைக்கான ஓய்வுக்கான சொத்தாகவும் இருந்தன. நாடக உலகிலே அவ்வேளை கொடிகட்டிப் பறந்த எஸ்.ஜி. கிட்டப்பாவின் பாடல்களே மக்களைப் பெரிதும் கவர்ந்தன. தியாகராஜனும் கிட்டப்பாவின் விசிறியானான்.

'காயாத கானகத்தே' என்ற இனிய பாடலை இயற்றிய திருச்சியைச் சேர்ந்த நடேசையர் அமெச்சூர் நாடக அரங்கொன்றை நிறுவிப் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வந்தார். இந்நாடகங்களில் அநேகமானவற்றில் பாடும் வாய்ப்புத் தியாகராஜனுக்குக் கிட்டியது. நாடகங்களில் பாடுவதோடு நடிக்கவும் கூடிய திறமையை அவதானித்த நாடக இயக்குநர்கள் அரிச்சந்திரா நாடகத்தில் 'லோகிதாசனாக' தியாகராஜனை நடிக்க வைத்தனர். நாடகம் பெரும் பாராட்டைப் பெற்றது. இராஜ கம்பீரமான பொன்னிற இளமைத் தோற்றமும் கவர்ச்சிகரமான நடிப்பும் அந் நாடகத்திற்கு பெருந்தொகையான வசூலை ஏற்படுத்திக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகிதாசனாக நடித்த தியாகராஜன் நாடகத்தில் காட்டில் தர்ப்பைப் புல் அறுக்கும் போது பாம்பு தீண்டி இறந்த காட்சியை நடிக்கும் போது கண்ணுற்ற மாணிக்கத்தம்மாள் மகனின் தத்ரூபமான நடிப்பாலும் பாசத்தாலும் மயக்க முற்றுவிட்டார். தியாகராஜனே வந்து அவரது கன்னங்களைத் தடவி ''அம்மா நான் உயிருடனே உள்ளேன். எழும்புங்கள் கவலைப் படாதீர்கள்'' எனப் பல தடவைகள் ஆறுதல் கூறிய பின்னரே உணர்வு பெற்று எழுந்தார்.

பாடல்களை இயற்றுவதிலும் இசையமைப்பதிலும் இசைப்பதிலும் வல்லமை மிக்க தமது உறவினரான ராமசாமி பத்தரிடம் மகனை இசை கற்க ஒழுங்கு செய்தனர். இப்படி இன்னும் சிலரிடமும் தியாகராஜன் கர்நாடக இசையை நன்கு கற்றுத் தேறினான். பின் திருவையாற்றில் அக்கால முறைப்படி குருகுலவாசம் செய்து இசை கற்றான்.

திருச்சியிலே முதன் முதலாக 1926இல் 16 வயதில் பக்க வாத்தியங்கள் சகிதம் முதலாவது கச்சேரி நிகழ்த்த முற்பட்ட போது ''சே! இந்தச் சின்னப் பொடியனுக்குப் பெரும் வித்துவான்களாகிய தாம் பக்கவாத்தியம் வாசிப்பதா?'' எனப் பெரும் வித்துவான்கள் ஒதுங்கிக் கொண்டனர். சிலர் சாதியையும் தாக்கிப் பேசினர். தட்சணாமூர்த்தி ஆசாரியே மிருதங்கம் வாசிக்கத் தயங்கினார். இவரது குரு தட்சணாமூர்த்தி பிள்ளையே அன்று கச்சேரிக்குத் தலைமை தாங்குகிறார். அவர் தனது மாணவன் தட்சணாமூர்த்தி ஆசாரியிடம் கட்டாயம் அவரே மிருதங்கம் வாசிக்க வேண்டுமென கேட்கவும் குருவிற்குப் பயந்து அவர் வாசித்தார். கச்சேரி ஓகோ என்று களை கட்டியது. தலைமை வகித்தவரே ஆர்வமிகுதியால்



சபையிலிருந்து எழுந்து மேடைக்கு வந்து கஞ்சிராவை எடுத்து வாசிக்கத் தொடங்கிவிட்டார். ''அற்புதம்! அபாரம்! சபாஷ்!'' என எங்கும் கரகோஷ ஒலி. சபையோர் அனைவரும் அண்ணாந்து வியந்து இசையில் மூழ்கி மெய் மறந்திருந்தனர். சங்கீத விற்பன்னர்களே நிறைந்திருந்த சபை அது.

பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் வானைப் பிழந்தன. இச்சபையிலேயே 'பாகவதர்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்த தலைவர் தியாகராஜன் தனது பெட்டியைத் தங்கச்சாவி கொண்டுதான் திறப்பான் எனப் பாடகனின் திறமை, புகழ், கீர்த்தி இவற்றில் விளையும் செல்வம் யாவற்றையும் உள்ளடக்கி நீண்டதொரு வாழ்த்துரை தெரிவித்தார்.

இவரின் இசை பலரை மெய் மறக்கச் செய்தது. இசையோடு நடிப்பும் புலமையும் மிகுந்து இருந்ததால் 'பாய்ஸ்' கம்பெனியை நடாத்திய டி.கே.எஸ். சகோதரர்களின் 'வள்ளி திருமணம்' எனும் நாடகத்தில் இவர் நடித்தார். எதிர்பாராத வகையில் மிகப் பெருந் தொகையான வசூல் கிட்டியதால் பவளக் கொடி, வள்ளி திருமணம் எனத் தொடர்ந்து பல நாடகங்களிலும் தன் நடிப்பின் உச்சத்தை வெளிக் கொணர்ந்தார்.

புகழின் உச்சத்தில் மிதந்ததோடு, சாஸ்திரீய சங்கீதத்தைச் சாமானியர்களும் ரசித்துச் சுவைக்க வைத்த சங்கீத 'சாம்ராட்' நாடக நடிப்புகளின் பின் அம்மை நோயால் பீடிக்கப்பட்டார். பொலிவிழந்த நிலையில் தஞ்சை மாரியம்மன் கோவிலுக்குத்தன் குடுமியுடன் கூடிய முடியைக் காணிக்கையாக்கினார். கத்திரிக்கப்பட்ட தலை முடியுடன் கூடிய 'கிராப்'பின் அழகையே எல்லோரும் 'பாகவதர் கிராப்' எனக் கூறி அந்த முடிவெட்டும் அழகும் பிரபலமானது.

இசையிலும் நாடகத்திலும் முன்னணியிலிருந்த பாகவதர் சினிமாவிலும் ஒளிவிட்டுப் பிரகாசித்தார். அவ்வேளைகளில் சினிமா தொழில்நுட்பம் பெரிதாக முன்னேறவில்லை. ஆகையால் நடிகர்கள் அழகிய எடுப்பான தோற்றப் பொலிவு, குரல் வளம், இசைத் திறன் உள்ளவர்களாகவே இருக்க வேண்டிய அவசியம். இவற்றிற்கெல்லாம் மிகப் பொருத்தமானவராக அமைந்தவரே தியாகராஜ பாகவதர். எனவே பவளக் கொடி என்ற 60 பாடல்களை உள்ளடக்கிய படத்தில் பாகவதர் நடித்துப் பெரும் புகழீட்டினார். கதாநாயகர் கட்டாயம் பாடியே நடிக்க வேண்டுமென்ற நடைமுறை இவருக்குப் பெரிதும்கைகொடுத்தது.

1937இல் அஸ்வத்தாமாவுடன் இவர் நடித்த 'சிந்தாமணி' என்ற படம் தமிழ் நாட்டையே பிரமிக்க வைத்தது. படம் பார்த்த ரசிகர்கள் பலர் பைத்தியம் பிடித்து அலைந்த செய்திகளுமுண்டு. 1939இல் பெரு வெற்றியை ஈட்டிக் கொடுத்த படம் திருநீலகண்டம்.

தமிழ் நாட்டில் சமஸ்கிருத, தெலுங்குப் பாடல்களையே கச் சேரிகளில் இசைக்கும் முறைமையை மாற்றித் தமிழ் இசையை இசைக்க வேண்டுமென்ற இயக்கத்துடன் இணைந்து தமிழிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்குப் பெரிதும் பாகவதர் உதவினார். திருச்சி வானொலியில் பல மணிநேர இசைக் கச்சேரிகளையும் நடத்தினார்.

சுமார் 14 படங்களில் நடித்த பாகவதரின் 'ஹரிதாஸ்' படம் பெருத்த வெற்றியைத் தந்தது. 1000 நாட்கள் தொடர்ந்து ஓடிய முழு வெற்றிப் படமாகும். 'வாழ்விலே ஒரு நாள்', மன்மத லீலையை எனச் சாதாரண தெருக் கூட்டுவோர் கூலித் தொழிலாளர் உட்பட யாவருமே முணுமுணுத்துப் பாடி மகிழும் பாடல்களைக் கொண்ட படம் அது. பாகவதர் இலங்கைக்கு வந்திருந்த போது ஹரிதாஸ் நாடகத்தை யாழ். முத்திரைச் சந்தையிலே த்ம் குழுவினருடன் நடித்தபோது 'அன்னையும் தந்தையும் தானே' என்ற அர்த்தமுள்ள பாடல் இன்றும் தம் காதுகளில் ஒலிப்பதாக மனமுவந்து கூறும் பலர் உளர்.

'இந்து நேசன்' என்றொரு பத்திரிகை லட்சுமிகாந்தன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு அக் காலத்தில் வெளிவந்தது. அதில் அதன் ஆசிரியர் பல பிரபலங்களின், சினிமா நட்சத்திரங்களின் அந்தரங்க வாழ்க்கையை 'கிசு கிசு' பக்கங்கள் போல எழுதுவதுண்டு. அந்தப் பக்கங்களுள் அன்றைய பிரபலங்களான பாகவதர், N.S. கிருஷ்ணன் போன்றோரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இப்படிப் பலரது கோபத்துக்கும் ஆளாயிருந்த லட்சுமிகாந்தன் திடீரென இனந்தெரியாதவரால் கொலை செய்யப்பட்டுவிட்டார். இக் கொலை காரணமாக பாகவதர் விசாரிக்கப்பட்டு விடப்பட்டு பின் சுமார் ஒரு வருடகாலம் சிறையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளி வந்த பின்னர் அவருக்க சினிமா அதிகம் கை கொடுக்கவில்லை.

இசை, நாடகம், சினிமா என்ற முக்கலைகளின் உச்சியைத் தொட்ட பாகவதர், சர்க்கரை நோயால் வருந்தி கண் பார்வையை இழந்தார். வருத்தம் தாளாமல் சாமியாரொருவர் கூறிய கைமருந்தை மேற்கொண்டு ரசம் ஒன்றைப் பருகினார். வயிற்றில் வலியும் குழப்பமும் ஏற்பட 31.10.1959 இல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 01.11.1959 இல் இவ்வுலகை நீத்தார்.

இம் மேதையின் நினைவாகத் திருச்சியிலே சங்கிலியாண்டபுரத்தில் முற்றிலும் பற்றைகள் சூழ்ந்துள்ள அவரது சமாதியில் "வாழ்க்கையில் தங்கமும் வெள்ளியும் நிறையப் பார்த்துட்டேன். நான் நடித்துச் சேர்த்த பணமெல்லாம் ஜெயிலுக்குப் போனதும் போயே விட்டது. நம் கையில் எதுவும் தங்காது என்பதை அனுபவபூர்வமாகப் பார்த்து விட்டேன். எனக் கெதுவும் வேண்டாம். உங்கள் அன்பே போதும்" என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டுஇருந்தன. ஒரு தடவை இவருக்கு தங்கத் தட்டொன்றைப் பரிசாக அளித்தபோது அதனை அவர் கொடுத்தவர்களிடமே திருப்பிக் கொடுத்துக் கூறிய வாசகம்தான் இவை.

-பத்மா சோமகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையுடன் பாடுபட்டால் தமிழ் நாடகத்துறையை மேம்படுத்தலாம்

நாடகக் கலைஞர் கே.சந்திரசேகரன்



நாடகத்துறை தயாரிப்புகள் மேம்பட வேண்டுமானால் தங்களை இதன்மூலம் மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென எண்ணாமல் தமது சிற்சில தேவைகளுக்காக இத்துறையைப் பாவிக்காமல் உண்மையுடன் பாடுபட்டால் இலங்கை கலைத்துறை மென் மேலும் மெருகு பெறும் என்பது என் நம்பிக்கை என்கிறார் பிரபல மேடை, வானொலி, திரைப்பட தொலைக்காட்சி நாடகக் கலைஞரான கே. சந்திரசேகரன்.

கடந்த 44 வருடங்களாக நாடகத்துறையோடு ஒன்றி வாழும் இக் கலைஞரின் நடிப்பு மட்டுமன்றி அவரது கம்பீரமான குரலும் தனித்துக் குறிப்பிடத்தக்கது. அதுவே அவரை விளம்பரத் துறையிலும் காலூன்றி நிற்க வழி வகுத்திருக்கிறது பல்திறமை வாய்ந்த இக்கலைஞரை அண்மையில் சந்தித்த போது அவரைப் பற்றியும் மேலும் அறிந்துகொள்ள முடிந்தது. அவர் கூறினார்:

1963 ஆம் ஆண்டு முதல் வானொலி சிறுவர் நிகழ்ச்சியில் பங்குபற்றி வந்த நான் 1966 ஆம் ஆண்டு வானொலி நாடகக் கலைஞராக தெரிவு செய்யப்பட்டேன்.

அக்காலத்திலிருந்து என் நடிப்புப் பயணம் இடையீடின்றி தொடர்ந்து தொடர்கிறது. இதற்கு என் திறமையே காரணம் என நான் நம்புகிறேன். ஏராளமான வானொலி நாடகங்களில் இதுவரை நான் நடித்திருக்கிறேன்.

வானொலி தொடர் நாடகங்கள் எனப் பார்த்தால் அலைகள், கரையை தேடும் அலைகள், கோமாளிகள் ஆலமரத்தடி வீடு, துப்பறியும் கோமாளிகள், நீங்களும் துப்பறியலாம், விண்வெளியில் கோமாளிகள், தணியாத தாகம், இரையைத் தேடும் பறவைகள், கிராமத்துக் கனவுகள், இரவில் பாடும் பூபாளம், உறங்காத உறவுகள் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

அதுபோல சுமதி, ராஜத்துரோகி, வீர மரணம், புரோக்கர் கந்தையா, பார்வதி பரமசிங்கம், கிறேஸி கோமாளிகள், சதாசிவம் உட்படப் பல மேடை நாடகங்களில் நடித்திருக்கிறேன்.

இதேபோன்று தொலைக்காட்சி ஓரங்க நாடகங்கள், தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் திரைப்படங்கள் ஆகியவற்றிலும் நடித்திருக்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

இவர் நடித்த தொலைக்காட்சி நாடகங்கள பற்றிக் குறிப்பிடும்போது காலங்கள், மீண்டும் மீண்டும் கோமாளிகள், A-9, கல்யாணம் பண்ணிப்பார், தே கெத்தி முவ எத்தோ (சிங்களம்) கம்பித்தவில் (சிங்களம்), ஆத்மயென் ஆத்மயட்ட (சிங்களம்) ஆகியவை தாம் நடித்த தொலைக்காட்சி நாடகங்கள் எனக் கூறினார்.

இதுவுமின்றி சந்திரசேகரன் கோமாளிகள், இவளும் ஒரு பெண், புஞ்சி சுரங்கனாவி (சிங்களம்) இர சுமதியம (சிங்களம்) ஆகியவற்றில் நடித்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



தற்போது ஏதாவது நாடகங்களில் நடிக்கிறீர்களா? எனக் கேட்டதற்கு, ஆம் சக்தி எப்.எம். தயாரித்து வழங்கி வரும் வந்தியத் தேவன் என்ற நாடகத்தில் பெரிய பளுவேட்டரையர் என்ற பாத்திரத்தில் நடித்து வருகிறேன்.

அதுமட்டுமன்றி இன்டர் நியூஸ் தயாரிக்கும் சொர்க்கமே என்ற நாடகத்திலும் ஏயர் டி.வி. தயாரித்து வழங்கும் கண்ணகிபுரம் என்ற நாடகத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார்.

தவிரவும் சித்தி தமிழ் நாடகத்தை சிங்களத்தில் மொழி பெயர்த்தும் ஏ-9 நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்து கொடுத்தும் ஒளிபரப்ப உதவியிருக்கிறார்.

நாற்பது வருட காலமக நாடகத் துறையோடு மிகவும் நெருக்கமாக இருந்திருக்கிறீர்கள். கொழும்பு தமிழ் நாடகங்கள் தற்போது பெரும் வரவேற்புக் குரியனவாகத் தோன்றவில்லையே இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்ற கேள்விக்கு சந்திரசேகரன் பதில் தரும்போது,

1975 இல் இருந்து 1980ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழ் நாடகங்களுக்கு நாங்கள் டிக்கட்டை மக்களிடம் கொண்டு போய் விற்றதில்லை. ரசிகர்கள் நாடகம் நடக்கும் மண்டபத்துக்கு வந்து வாசலில் டிக்கட்டை வாங்கி நாடகத்தைப் பார்ப்பார்கள்.

இன்றைக்கு அப்படியில்லை. ஆனால் அதற்காக ரசிகர்களின் ரசனையின் குறை சொல்ல முடியாது. ரசிகர்களின் ரசனைக் கேற்ப படைப்புகள் செய்யப்படவில்லை என்றே கூற வேண்டும் என்று கூறினார்.

நீங்கள் டி.வி. நாடகங்கள் பலவற்றில் நடித்திருக்கிறீர்கள். நமது நாட்டு ரசிகர்களைப் பொறுத்தவரை தமிழகத்தின் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களுக்கு வழங்கும் அளவு ஆதரவை நமது நாட்டு தமிழ் நாடகங்களுக்கு வழங்குவதில்லை எனக் கூறப்படுகின்றதே இதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? என்ற வினாவுக்கு இக் கலைஞர் தந்த பதில் வருமாறு:

இதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஒரு சிலவற்றைக் கூறலாம்.

தொலைக்காட்சி நாடகத்தில் எனது அனுபவத்தைக் கூறுவதனால் நான் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தைச் செய்வதானால் அதற்குத் தோதான பாத்திரங்களைச் செய்யக்கூடியவர்களைத் தெரிவு செய்வதில்லை. சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பாத்திரத் தேர்வுகள் செய்யப்படும் போது நாடகங்கள் சோபிப்பதில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை அப்படியில்லை. விருப்பு வெறுப்பு கருத்து வேறுபாடுகள் தயாரிப்பாளர், இயக்குநர் மற்றும் கலைஞர்களிடையே இருக்கலாம். ஆனாலும் அவர்கள் ஒரு படைப்பில் சிறந்த அவுட்புட்டைத்தான் (output) நூற்றுக்கு நூறு வீதம் எதிர்பார்க்கிறார்கள். எனவே, அதற்கேற்றவாறு திறமையும் ஆற்றலும் கொண்டவர்களை பொருத்தமாக



பாத்திரங்களுக்குத் தேர்வு செய்கிறார்கள். எனவே நாடகங்களும் சோபிக்கின்றன.

இதற்கு திறமையை இனங்கண்டு அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இன்னொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட வேண்டும்.

அரசு ஆதரவும் தமிழ் நாடகத்துறைக்கு இருக்க வேண்டும். அரசில் செல்வாக்கு பெற்ற சில நாடகங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. உதாரணமாக காலங்கள் தொலைக்காட்சி நாடகத்தைக் குறிப்பிடலாம்.

மேடை நாடகங்களைப் பொறுத்த வரையிலும் கூட சில விடயங்களைக் கூற முடியும்.

நாடகங்களை மேடை ஏற்றுவதற்கு பொருளாதாரக் கஷ்டம் முக்கிய காரணந்தான். அதேவேளை திறமையையும் பார்க்க வேண்டும். முன்னர் கூறியது போல திறமையுள்ள கலைஞர்களை இனங்கண்டு, அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

முன்னர் மேடை நாடகங்களில் நடிக்க வருபவர்கள் நடிப்பில் நல்ல பயிற்சியை பெற்று நடிக்க வந்தார்கள். தற்போது நடிப்பில் பயிற்சி ஏதும் எடுக்காமல் நடிக்க வருகிறார்கள். பயிற்சியை பெற வேண்டும் என்ற உத்வேகமும் அவர்களிடையே இல்லை. சிலரைப் பொறுத்தவரை நடிப்பு ஆலோசனைகளை ஏற்கவும் தயாராக இல்லாமல் இருக்கின்றனர்.

நாடகத்தை தயாரிப்போர் குறைந்து போய்விட்ட நிலையில் ஓரிருவர் தான் விடாமல் அவ்வப்போதாயினும் நாடகங்களைத் தயாரிக்கிறார்கள். ஆர். ராஜசேகரனின் வெள்ளிநிலா கலாலயம், கே. செல்வராஜனின் சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேற் ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. இதில் மேலும் முயற்சி மேற்கொள்ளப்படாது போனால் எதிர்காலத்தில் தமிழ் நாடகத்துறை கேள்விக் குறியாகும். வானொலி நாடகத்துறையைப் பற்றி ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம்.

1983ஆம் ஆண்டுக்கு முன் வானொலி தமிழ் நடிகர்களுக்கு வேதனமாக வழங்கப்பட்ட நூறு ரூபாதான் இன்றும் தொடர்கிறது. தமக்கு நடிப்புக்கான வேதனத்தை அதிகரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டும் என அவர்கள் அதிகாரிகளிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால், தமிழ் கலைஞர்களுக்கு கிடைக்கவில்லை. நாங்கள் கேட்பாரற்ற பிள்ளைகள் போன்றே இருக்கின்றோம் எனக்கூறினார்.

கொழும்பில் மட்டுந்தான் மேடை நாடகங்களில் நடித்திருக்கிறீர்களா? எனக் கேட்டதற்கு அப்படி இல்லை. எங்கள் கிரேஸி கோமாளிகள் நாடகத்திற்கு நாடெங்கும் வரவேற்பு இருந்தது. முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, வேலணை எனப் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றினோம். எங்கும் நல்ல ஆதரவைத் தந்தார்கள். பார்த்து ரசித்து மகிழ்ந்தார்கள்.

ஆனால் 1983 இல் ஆடிக் கலவரத்திற்குப் பின் நிலைமை மாறிப்போய்விட்டது. நாடக நடிகர்கள் சிதறிப் போய்விட்டார்கள். பலர் வெளிநாடுகளுக்கும் சென்று விட்டார்கள். ஒன்றுபட்டுச் செயற்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது எனக் குறிப்பிட்டார்.

தமிழ் நாடகக் கலைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன தானே. திரைப்பட நடிப்புக்கு கூட கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். இந் நிலையில் பயிற்சி வாய்ப்பு இல்லை என்று கூறலாமா? என்று கேட்டதற்கு பயிற்சிப் பட்டறைகள் எப்போதாவது மேற்கொள்ளப்படுகின்றன தான். ஆனால் எந்தவொரு விடயமும் தொடர்ந்து நடத்தப்படுவதாகக் கூறுவதற்கில்லை என்றார் சந்திரசேகரன்.

தமிழ் நாடகக் கலைஞர்களின் நிலைமை மேம்பட்ட ஒன்றாக அதாவது பொருளாதார ரீதியில் திருப்திகரமாக இருப்பதாகத் தோன்றவில்லையே. இதுபற்றி உங்கள் கருத்து என்ன என்ற கேள்விக்குப் பதில் தரும்போது, இலங்கையில் நாடகக் கலைஞர்கள் தமது நடிப்புத் நாடகத் திறமையை நம்பி வாழ்தல் இயலாது. ஒவ்வொரு கலைஞனும் தனக்கென நிரந்தரமாக வேறு ஒரு தொழிலை வைத்திருக்க வேண்டும். அதுவே சுயகௌரவம்.

நிரந்தர தொழிலுடன் நாடகத்திலும் நடிக்கலாம். அப்படியானவர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கௌரவமாக வாழ முடியும். என்னைப் பொறுத்தவரையிலும் கூட நான் எப்போதும் ஒரு நிரந்தர தொழிலுடன் தான் நாடகங்களில் நடித்து வருகின்றேன் என சந்திரசேகரன் தெரிவித்தார்.

நீண்டகாலம் நாடகங்களில் நடித்து அங்கீகாரம் பெற்ற முதிய கலைஞர்களுக்கு ஓய்வூதிய வசதி உண்டா என்று கேட்டபோது, டவர் பவுண்டேசனால் ஓரிரு தமிழ் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுவதாக அறிந்துள்ளேன் என்றார்.

தமிழ் நாடகத் தயாரிப்புகள் மேம்பட வேண்டுமானால் என்ன செய்யலாம் என்று கருதுகிறீர்கள்?

''தமிழ் நாடகப் படைப்புகளை மேம்படுத்த வேண்டும் என முன் வருபவர்களில் சிலர் தங்களை மேம்படுத்த வேண்டும் என்றே கருத்தில் கொள்கிறார்கள். தமது சிற்சில தேவைகளைப் பூர்த்தி செய்ய இதனைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. உண்மையாக கலைத்துறை மேம்படப் பாடுபட்டால் தமிழ் நடிப்புத் துறை மெருகு பெறும் என்பது எனது நம்பிக்கை.

சகலகலா வல்லவரான அமரர் லடிஸ் வீரமணி ஒரு தலைசிறந்த நாடக கலைஞன். அவரைப் போன்ற ஒரு சிறந்த கலைஞர்தான் ரி. எஸ். பிச்சையப்பா. அவருடன் நான் நடித்த போது அவர் கூறியது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

'தம்பி நாங்கள் நடிப்புக் கலையில் ஏற்கனவே பெயரெடுத்தவராய் இருக்கிறோம். எனவே எங்களது நடிப்பில் யாரும் குறைகூற மாட்டார்கள். ஆனால் இளைஞர்களாகிய நீங்கள் எங்களுடன் நடிக்கும் போது எந்த எங்களிலும் பார்க்க திறமையாக நடிக்கிறீர்கள் என்ற பெயரைப் பெறப் பாடுபட வேண்டும்' என்று சொல்வார். அந்தக் கூற்றை எப்போதும் நான் நினைத்துக் கொள்வேன்'' என்றார்.

**நேர்முகம் : சரண்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நிதித்துறையில் புதிய அத்தியாயம் படைக்கும் CDB யைச் சேர்ந்த நாம், எமது வாடிக்கையாளர்களை அன்பர்கள், நண்பர்கள், உறவுகளாக மதிக்கிறோம். இதனால் உங்கள் காருண்யத்தை நன்கு அறிந்து உங்கள் அருகில் வந்தே எமது நிதிச்சேவையை புரிவதில் பெருமை கொள்கிறோம்.

- குத்தகை வசதி
- நிலையான வைப்பு
- அடகுச்சேவை
- வெளிநாட்டு நாணய மாற்றுச்சேவை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிடட்,
தலைமையகம்: இல.18, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொ.பே: 0117 388388 www.cdb.lk

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைந்து போகும் தமிழர் பாரம்பரியங்கள்

**திருமதி எஸ். வி. சூரிய பிரதீபா**

இரு மனங்கள் சங்கமமாகும் திருமணம் ஒவ்வொருவர் வாழ்விலும் மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. இம்மங்கல விழா மூலம் இருமனங்கள் மாத்திரமல்லாமல் இரு குடும்பங்களும் இணைகின்றன. தமிழர் பாரம்பரியங்களில் ஒன்றான திருமண விழாவில் மணப்பெண்ணுக்கு முக்கிய இடம் உள்ளது. தற்கால மணப்பெண்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நாளில் இருந்து அழகு நிலையங்களுக்கு செல்வதற்கு ஒருபோதும் மறப்பதில்லை. ஒரு பெண் உச்சி முதல் உள்ளங்கால் வரை தன்னை அழகுபடுத்திக் கொள்வது தவறல்ல. ஆனால் தமிழர் பாரம்பரியத்துடன் கூடிய முறையில் அம்மணப்பெண்ணைகளை அலங்கரிக்கிறார்களா? இக் கேள்வி எம்மனங்களில் தோன்றியதற்கு ஒரு காரணம் உண்டு. இன்று நாம் செல்லும் பெரும்பாலான தமிழர் திருமணங்களில் மணப்பெண்கள் வடஇந்தியப் பாணியிலே அலங்கரிக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. இக்கேள்விக்கான பதிலை கலைக்கேசரி வாசகர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் வலுப்பெற்றதற்கு நீங்கள் எமக்கு அனுப்பிய கடிதங்களும் காரணமாக அமைந்தன.

உங்களிடம் வரும் மணப்பெண்களை தமிழர் பாரம்பரியத்துடன் கூடிய முறையில் அலங்கரிக்கிறீர்களா? என பிரபல அழகுக்கலை நிபுணரான திருமதி எஸ். வி. சூரியபிரதிபாவிடம் கலைக்கேசரி சார்பாக வினாவினோம்.

தமிழர் திருமணம் என்பது தமிழர் கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்தது. அது மாத்திரமல்லாமல் பெரும்பாலான தமிழர் திருமணங்கள் இந்து கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை. தலைமுறைகள் பலவற்றைக் கடந்தாலும் இன்றும் உயிர்ப்புடன் இருப்பவை. தமிழர்களின் தலைமுறைகளைப் பார்த்தால் அவர்கள் மன்னர் வழி வந்தவர்களாகவும் செல்வச் செழிப்பு மிக்கவர் களாகவும் இருந்துள்ளார்கள். அது மாத்திரமல்லாமல் தமிழர் வாழ்வில் 'தாய்மாமன்' என்ற உறவு முறை முக்கிய இடத்தைப் பெறுகிறது.

பண்டைய காலங்களில் பூப்புனித நீராட்டு விழாவில் பெண்ணுக்கு தாய் மாமன் 'பட்டம்' கட்டினார் என்றும் நாம் அறிகிறோம். இன்றைய கால பூப்புனித விழாக்களிலும் தாய் மாமன் செய்யும் சடங்குகளுக்கு முக்கிய இடம் இருப்பதையும் நாம் காணுகிறோம். மேலும் திருமண விழாவில் 'பட்டம்' கட்டுதல் நிகழ்வும் நடைமுறையில் இருந்துள்ளது. இப்பட்டம் கட்டுதல் என்பது தாய்மாமன் பெண்ணுக்கு வழங்கும் கௌரவமாக அந்நாட்களில் கருதப்பட்டது. ஆனால் இப்பட்டம் கட்டுதல் என்பது தற்காலத்தில் தமிழர் தம் பிரிவில் ஒரு சிலர் மாத்திரம் கைக்கொள்ளும் நடைமுறையாக மாறி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணை அரசியாகப் பாவித்து பட்டம் கட்டும் முறை மரபு வழி உருமாறி 'உச்சிப்' பட்டமாக தற்போது மாறியுள்ளது. எனவே எங்களின் கௌரவமாக நாம் கருதும் உச்சிப்பட்டத்தை மணப்பெண்கள் கட்டாயமாக அணிய வேண்டும். மேலும் திருமணங்கள் என்பது பெரும்பாலும் சிவன், பார்வதி, விஷ்ணு, சூரியன், சந்திரன், அக்னி, தேவர் போன்றோர் சாட்சியாக நடைபெறுகிறது என நம்புவது நம் மரபாகும். இதை உணர்த்து வதற்குத்தான் சந்திர பிறை, சூரியன் ஆகியவற்றை மணப்பெண்கள் அணிய வேண்டும்.

இல்லறம் எனும் நல்லறம் தொடங்கும் இனிய நாளில் மணப்பெண்ண்ண முத்து, வைரம், வைடூரியம், பவளம் போன்ற நவமணிகள் கொண்டு லக்ஷ்மிக்கு ஒப்பாக அலங்கரித்து, நிறைந்த மங்கலத்துடன் மணவறைக்கு அனுப்ப வேண்டும். இதுதான் தமிழர் பாரம்பரியமாகும். இதற்காகத்தான் நாம் ஆண்டாண்டு காலமாக சிமிக்கி, மயிர் மாட்டி, மிலாக்கு, மூக்குத்தி, அட்டியல், பதக்கம், காசுமாலை, கைவங்கி, கைவளையல், மோதிரம், ஒட்டியாணம், மாட்டல், கொலுசு, முத்துச்சங்கிலி போன்ற ஆபரணங்களை அணிகின்கிறோம்.

ஒரு பாரம்பரியத்துடன் கூடிய பௌத்த திருமணத்தில் மணப்பெண்ணானவள் பௌத்த மரபுடன் கூடிய ஆடை அணிகலன்களையும் குறிப்பாக ஏழு பதக்கத்தையும் அணிவதற்கு மறப்பதில்லை. இவ்வாறே கிறிஸ்தவ, முஸ்லிம் திருமணங்களிலும் மணப்பெண்கள் தம் பாரம்பரிய நடை முறைகளை மிகவிருப்புடன் கைக்கொள்கிறார்கள். தமிழர் திருமணங்களில் குறிப்பாக இந்துத் திருமணங்களில் ஏனைய கலாசாரங்களின் தாக்கங்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன. நம்மவர்களின் வசதி வாய்ப்புக்கள் கூடும்போது, அவர்கள் தம்கலாசாரத்தை மறக்கின்ற அல்லது கைவிடுகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இது வேதனைக்குரிய விடயமாகும் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உங்களிடம் வரும் மணப்பெண்களை நீங்கள் எவ்வாறு வழி நடத்துகிறீர்கள்? என நாம் கேட்டோம்.

என்னிடம் வரும் மணப்பெண்களின் அழகை மெருகூட்டி, திருமணநாளில் கலாசாரம் குலையாமல் அதேநேரத்தில் கவர்ச்சி இல்லாமல் அவர்களை அழகுபடுத்துகிறோம். அவர்களின் தலை முதல் பாதம் வரை நாம் அதிக சிரத்தை எடுக்கிறோம். மேலும் திருமணத்தின் போது மணப்பெண் முதலில் கட்டுகின்ற புடவைக்கு அவர்கள் விரும்புகின்ற முறையில் அவர்களைத் தயார்படுத்துகிறோம். முகூர்த்த நேரத்தில் மணப்பெண்ணானவள் கால்களிலும் கைகளிலும் மருதாணி இட்டு, உச்சிப்பட்டம், சூரியன், சந்திரபிறை, மாட்டல், சிமிக்கி, மயிர்மாட்டி, சங்கிலி அட்டியல், பதக்கம், கை வங்கி, கை வளையல், மோதிரம், காசுமாலை, ஒட்டியாணம், கொலுசு, ராக்கொடி ஆகிய அணிகலங்களை அணிந்து, கூறைப் பட்டு உடுத்தி சடைநாகம், குஞ்சம், பூ ஆகியவற்றைக் கொண்டு அலங்கரிக்கப்பட வேண்டும் என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி, அவ்வாறே நாம் அலங்கரிக்கிறோம் என பதில் தந்தார் திருமதி எஸ். வி. சூரிய பிரதீபா.

காலங்கள் உருண்டோடும் போது நாகரீகம் என்ற பெயரில் பாரம்பரியங்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். எங்களின் அடையாளங்கள் தொலைந்து போகின்றன. இவ்வாறான ஒரு சூழ் நிலையில் திருமதி சூரிய பிரதீபா போன்றோரின் சேவைகள் தொடர வேண்டும்.

**தொகுப்பு: உமா பிரகாஷ்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பண்பாடு:

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா






### ஆடை அணிகலன்கள்

19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உடை மற்றம் அணிகலன்கள் பற்றிய விபரங்களைக் கண்டுகொள்ள எமக்கு உதவுபவை இலக்கியங்களும் மிஷனரிமாரின் குறிப்புக்களும், அக்காலத்திலே எடுக்கப்பட்ட புகைப்படங்களும் முதியவர்கள் தரும் வாய்வழிச் செய்திகளுமேயாகும். அக்காலத்து உடை மற்றும் அணிகலன் வகைகளை ஆண்களுக்குரியவை. பெண்களுக்குரியவை என இரண்டாகப் பகுத்து நோக்கலாம்.

### ஆண்களின் உடையும் அணிகலன்களும்

யாழ்ப்பாணத்து வேளாளர்களின் உடையைப் பற்றிய பல்டேயஸ் பின்வருமாறு குறிப்பிடுவர்:

"........ வேளாளர் சீலையை இடுப்பிற் கட்டிக் கால்களுக் கூடாக இழுத்தச் சொருகிக் கொள்ளுவார்கள். (அதாவது தாறு பாய்ச்சிக் கட்டுதல்) காலிற் செருப்புத் தொடுப்பார்கள். மேற்சொல்லிய அரைச்சீலையிலே மடிவிட்டு அதிலே வெற்றிலை பாக்கும் தேவையான போது பாவிப்பதற்குக் கொஞ்சம் கடதாசியும் (ஓலைச் சுவடியாக இருக்க வேண்டும்) வைத்துக் கொள்வார்கள். இடையிலேயே ஒரு வெள்ளி கட்டிய உறைக்குள்ளே ஒரு கத்தி தொங்க விட்டுக் கொள்வார்கள். (வில்லுக் கத்தியாக இருக்க வேண்டும்) இதனோடு ஓர் வெள்ளி கட்டிய எழுத்தாணியும் வைத்திருப்பதுண்டு."

பல்டேயஸ் இங்கு வெள்ளாளர்கள் என்று குறிப்பிடுவது சுதேச கிராம அதிகாரிகளை எனக் கருதலாம். வெள்ளான சமூகத்தினரே யாழ்ப்பாண அரசர் காலம் முதல் கிராமத் தலைமைக் காரர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்டேயஸ் குறிப்பிடும் சேலையிலே 'மடிவிட்டு'க் கட்டும் மரபு மிக அண்மைக் காலம் வரை யாழ்ப்பாணத்திலே காணப்பட்டது. ஆண், பெண் இருபாலாரும் 'மடி விட்டு'க் கட்டி அதிலே தமக்குத் தேவையான சில பொருட்களை (பணம் உட்பட) பத்திரமாக வைத்திருப்பர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உடுப்பிலே விடும் 'மடி பற்றி' மரபுத் தொடர்களும், பழமொழிகளும் நாட்டுப் பாடல்களும் யாழ்ப்பாணத்திலே வழங்கி வருவதை இன்று அவதானிக்கலாம்.

உ+ம் : மடியிலே கை வைக்கின்றார். மடியிலே கட்டி வளர்த்தல், அடிமடியைத் தேடுதல், மடிப்பிச்சை முதலானவை.

PUBLIC LIBRARY
JAFFNA

பெரும்பாலான ஆண்கள் வேட்டி சால்வை முதலியவற்றையே அணிந்தனர். சால்வையைச் 'சவுக்கம்' என அழைக்கும் வழக்காறும் இருந்தது. வேட்டியிலும் எட்டு முழ வேட்டி நான்கு முழ வேட்டி என இரண்டு வகை வேட்டிகள் பயன் படுத்தப்பட்டன. பொதுவாகத் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக இவை விளங்கின. 'உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம்' என்ற நீதிப்பாடல் நாம் அறியாதது அல்ல.

அக்காலத்தில் ஒருவரின் உடையைக் கொண்டு அவரின் சாதி, சமூக அந்தஸ்து முதலானவற்றைக் கண்டு கொள்ளலாம். வேட்டியை உடுக்கும் முறைமையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், சால்வை என்னும் மேலாடையை அணிய அனுமதிக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்திலே யாழ்ப்பாணத்தில் தாழ்ந்தப்பட்ட வகுப்பிலுள்ளோர் தங்கள் உடைகளில் மாற்றங்களைக் கொண்டு வர முற்பட்ட போது உயர் சாதியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திற் கொமாண்டோராகப் பதவி வகித்த சுவாடக்குறூன் வேலாளரல்லாத மற்றைய சாதியினர் சிலருக்கும் உத்தியோகங்களைக் கொடுத்தான். வேறு சாதியினர் உத்தியோக உடை தரிப்பதை வேளாளர் விரும்பவில்லை. யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இடம்பெறும் பின்வரும் பகுதி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் உடை பற்றியெழுந்த பிரச்சினையை அறிய உதவுகின்றது.

''எளிய சாதிகள் தத்தம் உடைநடைகளை மாற்றத் தொடங்கியதைப் பற்றி அவன் (சுவாடக்குறூன்) பின்வருமாறு யாழ்ப்பாண அரசியற் சங்கத்தாருக்கு எழுதியிருக்கிறான்:

கீழ்சாதிகள் தங்கள் உடை முதலியவைகளைப் பற்றிய ஒழுங்குகளை அனுசரிக்கும்படி செய்ய வேண்டும். இதிற் சில ஒழுங்கீனங்கள் உண்டாகி இருக்கிறதாகக் கேள்வி. இவர்கள் சரியான மாதிரிச் சீலை கட்டிக் கொள்ளுகிறார்கள் இல்லை. தலை மயிரை வெட்டாமலும், காதிற் பொன்கம்பிகள் போடாமலும் திரிகிறார்கள். இதனால் இவர்களை யாரென்று தெரியாமற் போகிறதென்றும் இது தங்களுக்கு ஒரு அவமானமென்றும் சாதியாளரான 'கொனாறாடர்ஸ்' (இவர்கள் மேல் சாதியினர் போலும்) முறைப்படுகிறார்கள். இவ்விஷயமாய் இலங்கைத் தேசாதிபதியாகிய லோறன்ஸ்பில் கவணரால் 1686 ஆம் திகதி ஆவணி மாதம் 18 ஆம் திகித ஓர் 'பிளக்காற்' கட்டளை பிறப்பிக்கப்பட்டது.''

சமூக மேலாதிக்கமுடையவர்களே
வேட்டி, சால்வை, தலைப்பாகை
(இதில் பல ரகம்) அணிய
அனுமதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலனித்துவ அரசு சுதேசப் பிரபுக்களுக்கு அல்லது முதலியார்களுக்கென வரையறுக்கப்பட்ட சீருடைகளைப் பற்றிய விபரத்தினை உத்தியோகபூர்வமாவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

படித்த மத்திய தர வர்க்கத்தினர் வேட்டியுடன் சேட், கோட் முதலியவற்றை அணிந்தனர். படிப்பின் மூலம் தம் அந்தஸ்தினை உயர்த்திக் கொண்டவர்கள், காலனித்துவ நிர்வாகப் பணியில் இணைந்த சுதேசிகள் வேட்டி அல்லது நீளக் காற்சட்டை, சேட், கோட் முதலியவற்றுடன் தலைப்பாகையும் அணிந்தனர். காலனித்துவ பிரபுத்துவப் பாரம்பரியத்திற்கும் சுதேச மேலாண்மைப் பாரம்பரியத்திற்கும் அமைதி காணும் வகையிலும் உடைகள் பயன்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்துச் சுதேசிகள் மிஷனரிமார் கொடுத்த ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்தினால் விதேசிகள் ஆவதைப் பற்றி 1847 ஆம் ஆண்டு மானிப்பாயில் வைத்தியப் பணியாற்றிய டாக்டர் கிறீன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''வேட்டி... காற்சட்டையாகவும் சால்வை... மேற் சட்டையாகவும் தலைப்பாகை... தொப்பியாகவும், தாவர போசனம்... மாமிச போசனமாகவும், மண்குடிசை... கல்வீடாகவும் மாற்றம் அடைகின்றன என்றே எண்ணுகின்றேன். கிறிஸ்தவர்கள் ஆகாமல் தேசியத்தை இழப்பவர்களையே நான் காண்கின்றேன்.''

டாக்டர் கிறீனின் கவலையெல்லாம் கிறிஸ்தவத்தை உண்மையாக உள்வாங்காமல், வெளித்தோற்றத்திலே ஐரோப்பியப் பண்பாட்டுக்கு மாறுகிறார்கள் என்பதாகவே அமைகின்றது. ஆனால் இக்கூற்றின் உள்ளீடாக அமைவது யாழ்ப்பாணச் சுதேசிகளின் பண்பாட்டு அடையாளமாக வேட்டி, சால்வை, தலைப்பாகை முதலியனவே கருதப்பட்டன என்பதாகும்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே ஆண்களும் கொண்டை (குடுமி) வைத்திருந்தனர். மிக அண்மைக் காலம் வரை கிராமப் புறங்களிலே கொண்டை கட்டிய முதியவர்களைக் காணக் கூடியதாக இருந்தது. அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் கொண்டை கட்டியிருப்பதைக் காலனித்தவ அரசு விரும்பவில்லை.''

19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஆண்கள் கொண்டை அல்லது குடுமியை அகற்றும் சங்கம் ஒன்று நிறுவிச் செயற்பட்டார்கள் என்பது சுவாரசியமான செய்தியாகும். யாழ்ப்பாணத்திலே (இலங்கையிலும் தான்) புகைப்படக் கலையை முதன் முதலாக அறிமுகப்படுத்திய கென்றி மாட்டின் என்பவரே இச்சங்கத்தின் தலைவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கென்றி மாட்டினின் வரலாற்றை எழுதியவர் அவர் குடுமி அகற்றும் கழகத்தினை நிறுவியமை பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

''ஐம்பத் தெட்டி லழகிய நகரிடை [1858]
பம்மிய ஆடவர் பலரையு மழைத்துச்
சபையொன்று கூட்டிச் சான்றோனாமவர்
ஆண்பாலார்கள் அழகுறு பெண்கள் போல்
கொண்டை வளர்த்துக் குடுமி கட்டுதல்
அழகல வென்று ஐரோப்பியர் போல்
கிறீல்விடும் வழக்கைக் கேடற வைத்தனர்''

ஐரோப்பியரின் நடையுடைகளை யாழ்ப்பாணத்தவர்கள் பிரக்ஞைபூர்வமாகவே பின்பற்றினர் என்பதற்கு மேற்காட்டிய பகுதி சான்றாக அமைகின்றது.

வளரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்சய திருதியை

'தங்கம்' எனும் அரியவகை உலோகத்தின்மேல் ஆண், பெண் எனும் இருபாலாரும் அளவு கடந்த ஆசைகொண்டிருந்தாலும் பெண்களுக்கு என்னவோ தங்கத்தின் மீதான மோகம் அதிகமாகவே இருக்கிறது. அண்மைக் காலமாக அப்பெண்கள் சிறப்புடன் கொண்டாடும் ஒரு நாளாக 'அட்சய திருதியை'' மாறிவருகிறது என்பதை யாருமே மறுக்க முடியாது.

'அட்சய திருதியை' எனும் சிறப்புமிக்க நாள் இம்மாதம் 16 ஆம் திகதி வருவதாக ஜோதிட வல்லுனர்கள் கூறுகிறார்கள். அமாவாசை தினத்துக்குப் பின்னர் வரும் வளர்பிறையில் மூன்றாவது பிறை தோன்றும் நாளே திருதியை என சிறப்பாக அழைக்கப்படுகிறது. இந்துக்களின் தமிழ்ப் புதுவருடம் சித்திரை முதல் பங்குனி வரை 12 மாதங்களைக் கொண்ட வருடமெனக் கொள்வது எம்முடைய மரபாகும். இப்பன்னிரண்டு மாதங்களில் சித்திரை மாதத்துக்கு தனிச்சிறப்பு உண்டு. திருமாலின் அவதாரமான 'பரசுராமன்' இந்நன்நாளில் பிறந்தார் என சமய இலக்கியங்கள் ஊடாக நாம் அறிகிறோம். அந்த வகையில் சித்திரை மாதத்தில் வருகின்ற திருதியை சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

தற்காலத்தில் அட்சய திருதியை தினத்தன்று தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை வாங்கினால் வாழ்க்கையில் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பதுடன் வாங்குகின்ற பொருள் பல்கிப்பெருகும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. 'அட்சயம்' எனும் சொல்லுக்கு குறையாத, நிறைந்த ஆகிய பொருள்களைக் கொள்ளமுடியும். அதனாலே அள்ள அள்ள குறையாத பாத்திரத்தை 'அட்சய பாத்திரம்' என சிறப்பாக அழைத்தார்கள்.

அட்சய திருதியை தினம் தங்கம் வாங்குவதற்கு மாத்திரம் உகந்த நாள் அல்ல என்பது பெரியோர்களின் கருத்தாகும். அந்த நன்நாளில் சகல நல்ல விடயங்களையும் ஆரம்பிக்கலாம். இதனால் அவை பல்கிப்பெருகுவதோடு நல்ல பலன்களைக் கொடுக்கும் என்பது நம்பிக்கையாகும். தமிழர்கள் தங்கம் வாங்குவதை சிறந்த சேமிப்பு முறையாக காலங்காலமாக கைக்கொள்கிறார்கள். இதனால் அட்சய திருதியை எனும் நல்ல நாளை தங்கம் வாங்குவதற்கு உரிய நல்ல நாளாக மாத்திரம் பார்க்கிறார்கள்.

தங்கம் விலையில் அடிக்கடி மாற்றம் இருந்தாலும் அட்சய திருதியை தினத்தில் நகை வாங்கினால் வீட்டிற்குச் செல்வம் வந்து குவியும் என்ற நம்பிக்கை காரணமாகவும் பல தங்க நகை வியாபாரிகள் அட்சய திருதியைக்கு பல சிறப்பு சலுகைத் திட்டங்களை அறிவிப்பதுடன் புதிதாக வடிவமைக்கப்பட்ட பல நகைகளையும் அறிமுகப்படுத்துவதாலும் இந்த நாளில் நகை வாங்குபவர்களின் கூட்டம் அலை மோதுவதுடன், வருடத்திற்கு வருடம் விற்பனையும் அதிகரித்து வருகிறது.

இதுவரை காலமும் எமது பாரப்பரியத்தில் இடம் பிடிக்காமல் சமீப காலமாக முக்கிய இடம் பிடிக்கின்ற அட்சய திருதியை எனும் சுப மங்கள நாளில் நல்ல செயல்கள் பலவற்றை செய்வதுடன் சிறந்த துறைகளில் முதலீடு செய்து நாமும் நலம் பெறுவோம்.

-அம்மு






## அக்ஷய திருதியை

## 16.05.2010

**மே மாதம் 12ஆம் திகதிக்கு முன்**

நகைப்பெறுமதியில் 5% இனை முற்பணமாக செலுத்தி உங்களுக்கான நகைகளை ஓடர் செய்து விஷேட தங்க நாணயத்திற்கு பதிவு செய்து அக்ஷய திருதியை தினத்தில் எடுத்துச் செல்லுங்கள்.



22 கரட் திருமணசெட் முழு நகைகளையும் ஓடர் செய்பவர்களுக்கு விஷேட சலுகையாக கொடிக்கு மட்டும் செய்கூலி சேதாரமின்றி 22கரட் தங்க விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

New
Saravanas
JEWELLERS (PVT) LTD
46,Sea Street, Colombo - 11
T.P - 0112 43 45 46 Web - www.sornam.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன்

மலையகத்தின் தலைவாசலாக விளங்கும் மாத்தளை மாநகரில் வீற்றிருந்து அருள்சுரக்கிறது ஸ்ரீ முத்து மாரியம்மன் திருக்கோவில். கொழும்பிலிருந்து 90 மைல் தொலை தூரத்தில், கண்டியிலிருந்து 16 மைல் தொலைதூரத்தில், அருவிகள் கொட்டும் அழகுமலைக் குன்றுகளுக்கு கிழக்கேயும், மகாவலிகங்கையின் தீர்த்தக் கரைக்கு மேற்கிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

### ஆலய வரலாறு

அடர்ந்த காட்டுக்கு மத்தியில் பண்ணகாமம் என்று அழைக்கப்பட்ட இடத்தில் சிறிய மடம் ஒன்றிருந்தது. நெடுந்தூரம் கால்நடையாக வருபவர்களும், மாட்டு வண்டியில் பயணம் செய்பவர்களும் இம்மடத்தில் தங்கி, சமைத்து உணவருந்தி, மாடுகளுக்கு தண்ணீர் கொடுத்து, ஓய்வெடுத்து செல்வது வழக்கம். இங்கு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சிகை அலங்காரம் செய்யும் ஒருவரின் கனவில் அன்னை பராசக்தியான முத்துமாரியம்மன் தோன்றி, தன் உருவத்தை வெளிப்படுத்தி, அருகிலுள்ள வில்வமரத்தடியில் தன்னை பூஜிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அன்றிலிருந்து அம்மரத்தடியில் முத்துமாரியம்மன் சிலை வைத்து விளக்கேற்றி, அன்னையைத் தரிசித்தார்கள். மடத்தில் தங்கியிருந்த விஸ்வபிரம்ம குலத்தைச் சேர்ந்த ஆச்சாரி ஒருவர் நிரந்தரமாக மடத்தில் தங்கியிருந்து, வழிபாடுகளை நடத்தி வந்ததுடன், மடத்தில் தங்கிச் செல்லும் பயணிகளுக்கும் உதவிகள் செய்து வந்தார்.

சிவகங்கையைச் சேர்ந்த கருப்பண்ணன்சாமி என்பவர் அன்னையின் சிலைக்குமேல் கூரை அமைத்து சிறிய கொட்டிலாக ஆலயத்தை அமைத்தார். அம்மனிடம் முன் வைக்கும் வேண்டுதல்கள் பலிப்பதை உணர்ந்த பக்தர்கள் அம்மனுக்கு தாராளமாக காணிக்கைகள், நன்கொடைகள் வழங்கி ஆலயத்தை சிறிதுசிறிதாகப் பெருப்பித்தார்கள். 1850 களில் சிறுகுடிலாக இருந்த ஆலயம் இன்று, 108 உயர இராஜ கோபுரத்தைக் கொண்டு, பஞ்ச தேர்கள் கொண்டு உலகப் பிரசித்திபெற்ற ஆலயமாகத் திகழ்கின்றது.

1958 ஆம் ஆண்டில் மிமகப் பழைமையான கட்டிடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு மூலஸ்தான கோபுரம் அமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. 1968 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிர்மாணிக் கப்பட்டது. 1971 இல் நடராஜர் சபைக் கோவில் கட்டப்பட்டு கும் பாபிஷேகம் செய்யப்பட்டது. 1973 இல் மேற்கு திசை பக்கமாக இருக்கும் இராஜ கோபுரம் தமிழ்நாடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் ஸ்தபதியின் கைவண்ணத்தினால் நிர்மா ணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதே ஆண்டு மேற்கு வாசல் மணிக்கோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1992 ஆம் ஆண்டு வசந்த மண்டபம் திருத்தியமைக்கப்பட்டு புதிய விமானம் கட்டப்பட்டதுடன், தீர்தக் கேணியும் நிர்மானிக் கப்பட்டது.

பயணிகள் தங்கிச் சென்ற மடம், 1947 இல் மகாவலி கங்கையில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கினால் மடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும் பகுதி அழிந்துபோனது. ஆச்சாரி மடம் என்று அழைக்கப்பட்ட இம்மடத்தடியில் ரதங்களுக்கு பூஜைகள் செய்வது, அதாவது ரதங்கள் ஆலயத்திலிருந்து பிரதான வீதிக்கு வருகையில் ஆலய வெளிவாசலில் பட்டுச் சாத்தி பூசைகள் செய்யப்படுகிறது. இந்த வழக்கம் இப்போதும் பின்பற்றப் படுகிறது. தேர் வெளிவீதி வருவதற்கு முன், விஸ்வ பிரம்ம குலத்தவர்கள் பட்டுச் சாத்திவழிபாடு செய்வதுடன், தேர்களுக்கு கட்டை கொடுத்து நெறிப்படுத்வார்கள். விஸ்வ பிரம்ம குலத்தவர்களுக்கு காளாஞ்சி பிரசாதம் கொடுத்து அழைப்பு விடுப்பதும் அந்த நாள் முதல் இந்த நாள்வரை வழக்கத்தில் இருந்து வருகின்றது.

மேலும், கருப்பண்ணன்சாமி வைகாசி விசாகத் திருவிழாவை அதிவிசேட திருவிழாக நடத்தி வந்தார். இத்திருவிழா இப்போதும் அவர்களது குடும்ப உபயமாக நடத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் வழிபாடு தொடக்கப்பட்ட வில்வ மரம், தலவிருட்சமாகத் திகழ்ந்தது. தற்போது இந்த மரத்தைச் சுற்றி கம்பிவேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

சிறுகுடிலாக இருந்த கோவிலை சுப்பாப்பிள்ளை என்பவர் திருப்பணி புரிந்ததுடன், அருகிலுள்ள நிலங்களை வாங்கி 1852 இல் மானியம் செய்து வைத்தார். இக்காலப் பகுதியில் பூசாரிமார்களே ஆலயத்தில் பூஜைகளை செய்துள்ளனர். பின்னர் பிராமணர்கள் அமர்த்தப்பட்டு பூஜை வழிபாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாமாங்கத் தீர்த்தம் (12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வருவது) ஆலயத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சுடுகங்கை என்ற இடத்தில் மகாவலி கங்கையின் கரையில் நடைபெற்று வந்தது. இப்போது ஆலய வளாகத்திலேயே பெரிய தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

ஆரம்பத்தில் இவ்வாலயத்தில் உயிர்ப்பலியிடுதல் நடை பெற்று வந்துள்ளது. மகோற்சவத்தின் போது ரதம் வெளிவீதி செல்வதற்கு முன் பலிகொடுத்து பூசை நடைபெறும். காலப்போக்கில் இந்நடைமுறை மாற்றியமைக்கப்பட்டு, சாம்பல் பூசனி வெட்டி பலி பூசை நடாத்தப்படுகின்றது.

1963 ஆம் ஆண்டளவில் வேதமுறைப்படி விஸ்தரிக்கப்பட்ட ஆலயத்தின் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஸ்டை செய்யப்பட்டு ,மூலஸ்தானம் விஸ்தரிக்கப்பட்டு, அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம் என பல மண்டபங்கள் அமைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் வருடாந்த திருவிழாக்கள் மிக எளிமையாகவே நடைபெற்றன. காலப்போக்கில் சாதாரண உள்வீதித் திருவிழாக்களை சப்பறம் கட்டி, சுவாமிகளை அலங்கரித்து நடத்தி வந்தார்கள். 1934 ஆம் ஆண்டளவில் கட்டுத்தேர்கள் கட்டி அலங்கரித்து, விநாயகர் தேர், சிவனம்பாள் தேர், முருகன் தேர் என முத்தேர் பவனி நடைபெற்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்தபதி தம்பித்துரை என்பவரது கைவண்ணத்தில் நிர்மாணிக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு மாத்தளை மாநகரில் பஞ்சரதங்கள் வெள்ளோட்டம் விடப்பட்டன. இந்த ரதங்கள் 1983 ஆம் ஆண்டு ஜீலைக் கலவரத்தின் போது எரித்து சாம்பலாக் கப்பட்டது. பஞ்ச ரதங்களுடன் சேர்த்து ஆலய அலுவலகம், கல்யாண மண்டபம், ஏனைய கட்டிடங்கள், தளபாடங்கள், வீடுகள் என அனைத்தும் எரித்து அழிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு பஞ்சரத திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வெள்ளோட்டப் பெருவிழா நடைபெற்றது.

### வழிபாட்டு முறை

ஆரம்ப காலம் முதல் இனமத வேறுபாடின்றி சகல மக்களையும் வரவேற்கும் பண்பு காலாகாலமாக இத்தேவஸ்தானத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பிற மதத்தவர்களும் தாம் விரும்பியவாறு அன்னையை தரிசித்து பயன் பெறுகின்றனர். அத்தோடு ஆலயத்தில் காலநேரம் தவறாது ஐந்துகால பூஜைகளும், நித்திய கிரியைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்படுகின்றது. யாருடைய வருகையையும் எதிர்பாராது குறித்த நேரத்தில் பூஜைகளை ஆரம்பித்து சிறப்பாக செய்து முடிப்பது ஒரு மரபாக பேணப்பட்டு வருகிறது.

பஞ்சாங்கத்தின்படி இவ்வாலயத்தில் 12 மாதங்களும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மாதம்தோறும் பௌர்ணமி தினத்தன்று சக்ராயந்திர பூசையும், சுமங்கலி தீப பூசையும் நடைபெறுகிறது. ஆனால் மகத்துவமும் சிறப்பும் மிக்கதாக மாசி மகோற்சவம் திகழ்கிறது. கொடி ஏற்றம் ஆரம்பித்து 26 நாட்கள் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறும். இக்காலத்தில் தினமும் பகல், இரவு உள்வீதி திருவிழாக்களும், அம்பிகைக்கு 108 சங்காபிஷேகமும், 108 அஸ்டோத்திரமும், பகல் அன்னதானமும் நடத்தப்படுகிறது. இறுதி நாளன்று பஞ்சரத பவனி பக்திப் பரவசத்துடன் நடத்தப்படுகிறது. இத்தேர்த் திருவிழாவைக் கண்டுகளிக்க நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் யாத்திதரை செய்வர். பஞ்சரத விழாவிற்கு முதல்நாள் சப்பறத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகிறது. தீர்த்தோற்சவம், பூங்காவனம் ஆகிய திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறும்.

உற்சவக் காலங்களில் நித்திய பூஜைகள் கிரியைகள் போன்றவற்றின் முன்னறிவித்தல்கள் நேரகாலத்துடன் அடியார்களது நன்மைக்காக முன்கூட்டியே அறிவிக்கப் படுவதால் சிரமமின்றி பூஜைகளில் பங்குகொள்ளவும் அன்னையின் அருளாசி பெறுவதற்கும் வாய்ப்புக்கள் அமையப் பெற்றுள்ளன. இவ்வாறு செயலாற்றுவது இவ்வாலயத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

### இராஜகோபுர திருப்பணி

இத் தேவஸ்தானத்தில் நீண்டகாலமாக அறங்காவலராப் பதவியை வகித்த அமரர் குமாரசாமி அவர்களும், அமரர் மாரிமுத்து செட்டியார் அவர்களும் இவ்வாலயத்தை சிறந்த முறையில் நிர்வகித்த பெருமைக்குரியவர்கள். மாரிமுத்து செட்டியார் காலத்தில் தான் இராஜ கோபுரத் திருப்பணி நடைபெற்றது.

கோபுரம் இல்லாத ஊருக்கு மகத்துவம் இல்லை. மாத்தளையின் எல்லைக்கு வரும் போது ஆலயத்தினுடைய தரிசனம் அடியவர்களுக்க கிடைக்க வேண்டும் என்ற நீண்ட கால கனவின் பிரதிபலிப்பே இலங்கையில் அதிகூடிய உயர மான கோபுரமாக, 108 அடி நவதள, நவகலச ராஜகோபுர திருப்பணி ஆகும். 1979 ஆம் ஆண்டளவில் அப்போதைய நிர்வாகம் வடக்கு வீதிப்பக்க வாசல் திறக்கப்பட்டு சிறியளவிலான கோபுரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை. அந்தப் பகுதி பாரிய நீரோடையையும் பள்ளத்தாக்கையும் கொண்டிருந்தது. அப்பகுதியில் இராஜகோபுரம் அமையும் என்றோ வெளிவீதி அமைக்க முடியும் என்றோ எவரும் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

இந்த பள்ளம் மண்நிரப்பப்பட்டு, சமப்படுத்தப்பட்டு வெளிவீதி அமைக்கப்பட்டதுடன் வானுயர்ந்த 108 அடி உயர இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. கோபுர கும்பாபிஷேகம் 11-12-2005 செய்யப்பட்டது.

1960 ஆம் ஆண்டு முதலாவது மஹா கும்பாபிஷேகமும், 1974 ஆம் ஆண்டில் இரண்டாவது மஹா கும்பாபிஷேகமும், 1989 ஆம் ஆண்டில் மூன்றாவது கும்பாபிஷேகமும், நான்காவது கும்பாபிஷேகம் 2002 ஆண்டிலும் நடைபெற்றன.

அத்துடன் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தினூடாக சமய வழிபாட்டுடன், கல்விப்பணியுடன் கலைகளையும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். அதில் முக்கியமாக காமன் கூத்து என்கின்ற கலையை மிக பயபக்தியோடு வளர்த்து வந்தார்கள். காமன் கூத்து அம்பிகையின் பதியில் வருடந்தோறும் முன்பு நடாத்தப்பட்டு வந்ததாக அறிய முடிகிறது. இந்து ஆலயங்களில் அறநெறிப் பாட சாலை உருவாகுவதற்கு வழிகாட்டியாக மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் திகழ்ந்துள்ளது.

-கலைச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொன்று விடு

உன்
வார்த்தைகளில் மட்டும்
சுகம் காணும்
எனக்கு
திடீரென
நீ எப்போதாவது
பிரசவிக்கும் அக்கினி
வார்த்தைகள் என்னைக்
கொன்று விடுகின்றன

எத்தனை
இதயங்களை நான்
விலகிப் போவென
விட்டிருப்பேன்
நீ எட்டி உதைத்தாலும்
திருந்த மறுக்கிறது
என் குருட்டு இதயம்

நான்
உன்னிடம்
எந்த எதிர்பார்ப்பும்
இல்லாது இருப்பவன்
இன்று
ஒரு விண்ணப்பம்
செய்கிறேன்

உன்
உயிருள்ள வரை
உன் அன்பு மட்டும் வேண்டும்
எனக்கு

என்
விண்ணப்பத்தின் பதவி
காலம்
முடியும் போது
தூக்கி எறியப்படுமானால்
இன்றே
என்னை கொன்று விடு
நான்
உன் நினைவுடனேயே
உயிர் விடுகிறேன்

## தொழிலாளர் வாழ்க்கை

தேயிலை தோட்டமதில்
தேய்ந்திடும் கூட்டமடா
தொழிலாளர் நாங்களெல்லாம்


ஓய்ந்திடும் வேளையிலும்
ஓயாமல் வேலை செய்தும்
ஒன்றுமில்லை எமக்கிங்கு

வயது வந்த மகனொருவன்
பருவம் வந்த மகளொருத்தி
மனைவியுடன் நானும்
உறங்கிடுவோம் ஓர் அறையில்

என்ன இது வாழ்க்கையடா
ஏன் இந்த வாழ்க்கையடா
எண்ணத் தோன்றுது
சில நேரம்

வெட்கம் ஒரு புறம்
வேதனை மறு புறம்
என்ன செய்வது
ஏழையாய்
பிறந்து விட்டோமே!

**எம்.நேசமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான சைவ உணவுகளை வழங்குவதில்
உங்கள் மனதை கவர்ந்த!!!

PUBLIC LIBRARY
JAFFNA

S

# Saraswathie

FAMILY RESTAURANT

(Fully Air-Contioned)

தரமான Vegeterian தென்னிந்திய உணவு
வகைகளை
தயாரித்து வழங்கும் பிரபல்யமான
ஒரே உணவகம்.







No: 29 Upatissa Road,
Bamabalapitiya , Colombo-04
Tel: 0112 591 568
(Behind the Marine drive “Keells Super Market)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறையும் உண்மைகள்

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள பெரு நாடு இயற்கை அழகின் சொர்க்கமாகத் திகழ்கிறது. இங்குள்ள அண்டிஸ் மலைத்தொடரின் உச்சியில் மச்சு பிச்சு என்ற விசித்திரமான, பண்டைய நகரம் அமைந்திருக்கிறது. 14 ஆம் நூற்றாண்டில் நடை பெற்ற பல வரலாற்றுச் சம்பவங்களின் பின்னணியில், சிலிர்ப்பும், வியப்பும், அதிர்ச்சியும், சோகமும் கலந்து பல உண்மைகள் இந்த மலையுச்சி நகரில் உறங்கிக் கிடக்கின்றன. தொலைந்துபோன நகரம் என வர்ணிக்கப்படும் இந்நகரம், ஏழு உலக அதிசயங்களில் ஒன்று என்ற பெருமையை பெற்றுள்ளது.

கஸ்கோ நகரிலிருந்து சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில், கடல் மட்டத்திலிருந்து 2400 மீற்றர் (7875 அடி) உயரத்தில், செங்குத்தான மலைத்தொடரின் உச்சியில், அடர் காட்டில், அருவிகளின் ஆரவாரத்தில், கற்பனை செய்ய முடியாத அழகின் உச்சத்தில் மச்சு பிச்சு நகர் அமைந்துள்ளது. இந்நகரம் இன்கா நாகரீக மக்களின் கட்டிடக்கலைக்குச் சான்றாகவும், அவர்களுடைய உச்ச ரசனைக்கு எடுத்துக் காட்டாகவும் திகழ்கின்றது.

பச்சாக்குட்டி இன்கா யுபான்கி (Pachacuti Inca Yupanqui) என்ற இன்கா மன்னரின் ஆட்சிக்காலத்தில், அதாவது 1460 இல் இந்த நகரம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இப்பொழுது இருக்குமளவிற்கு தொழில்நுட்ப வசதிகள் எதுவும் இல்லாத பொழுது, மக்களின் உழைப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மலை உச்சியில் ஒரு நகரம் அமைப்பதென்பது அதிசயமானதே!!

அடர்ந்த காட்டுக்குள்ளே யாரும் எளிதில் அடைய முடியாத இடத்தில், அமைக்கப்பட்டுள்ள இந்நகரத்தின் அமைப்புகள், கற்களிலான வடிவங்கள் என்பன இறை வழிபாட்டிற்கான இடமாக இருந்திருக்கலாம் என்ற ஐயத்தையும் எழுப்புகின்றது.


தேயிலைத் தோட்டங்களில் பயிர்விளைவதற்கு படிப்படியாக அமைக்கப்பட்டிருப்பதைப் போல, மலைச்சரிவில் பலவகையான உணவுப்பயிர் உற்பத்தி, சரியான நீர்ப்பாசன நிர்வாக நுண்ணறிவு கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் வெள்ளத்தால் கட்டடங்கள் அடித்துச் செல்லாமல் இருக்கும் படியாக வடிகால்களையும், விவசாயத்திற்குத் தேவையான நீர் ஆதாரங்களையும் உருவாக்கியிருப்பது வியப்பளிக்கிறது.


இத்தனை ஆண்டு கால இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி, இன்னும் பளபளக்கும் கற்களைக் கொண்டு சோகம் நிரம்பிய கம்பீரத்துடன் இருப்பதே, பண்டைக்கால மனிதர்களின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு.

இத்தனை ஆயிரக்கணக்கான கற்களை எப்படி இந்த உச்சிக்கு கொண்டு வந்தார்கள் என்பது வியப்பின் எல்லைகளுக்கு நம்மை கொண்டு செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்கே இன்டிகுவாடனா எனும் ஒரு கல் இருந்தது. இதில் நிறைய இறந்த ஆத்மாக்கள் இருந்ததாகவும், இந்தக் கல்லில் நெற்றியை வைத்துத் தேய்த்தால் ஆவி உலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் நம்பிக்கை இருந்தது. கடந்த 2000 ஆண்டு ஒரு படப்பிடிப்புக் குழுவினரின் கிரேன் இக்கல்லின் மீது விழுந்ததால் கல் உடைந்து விட்டது.

இந்நகர் இன்கா மன்னனின் கோட்டையாக இருந்திருக்கலாம் எனவும், சுமார் ஆயிரம் பேர் இந்த அரண்மனை நகரில் வாழ்ந்திருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

பெரு நாட்டின் மீது ஸ்பானிய படைகள் தாக்குதல் நடத்தியதால், தப்பி ஓடிய இன்கா மக்கள் கஸ்கா நகரை விட்டு, அடர் காடுகள், பள்ளத்தாக்குகளில் தஞ்சம் புகுந்தனர். கஸ்கா ஸ்பானியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டது. காட்டுக்குள் தங்கிய இன்கா மக்களை நெருங்க முடியாமல் ஸ்பானியப் படை விலகி விட்டது. ஆனால் கானகத்திற்குள் நுழைந்த இன்கா மக்கள் தங்களுக்கென ஒரு பெரிய நகரை நிர்மாணித்தனர். வில்கபாம்பா அந்த நகருக்குப் பெயரிட்டனர்.

நகரை நிர்மாணித்த இன்கா மக்கள் தங்களுடைய நிம்மதியான வாழ்க்கையைக் கெடுத்த ஸ்பானியர்களை அடிக்கடி தாக்கிக் கொண்டே இருந்தனர். தன்னுடைய நாட்டை மீட்க நினைத்த இன்கா மக்களின் தாகமே அது. ஸ்பானியர்களும் திரும்பித் தாக்கிக் கொண்டே இருந்தார்கள். சுமார் 36 ஆண்டுகள் இந்தச் சண்டை விட்டு விட்டு நடந்தது. ஸ்பானியர்கள் கடைசியில் 1572 இல் மாபெரும் கொடூரத் தாக்குதலை நிகழ்த்தினார்கள். வயது, பால் வேறுபாடு எதுவுமின்றி கொன்று குவித்தார்கள். இன்கா மக்கள் அனைவருமே படுகொலை செய்யப்பட்டனர். இன்கா மக்களின் கடைசி மன்னன் துப்பாக் அமாரு சிறை பிடிக்கப்பட்டான். மன்னனைச் சிறைப்பிடித்த ஸ்பானியர்கள் அவரை, கஸ்கோ நகருக்குக் கொண்டு சென்று பிளாசா டி ஆர்மாஸ் என்னுமிடத்தில் வைத்துப் படுகொலை செய்தனர்.

இன்கா மக்களின் வியர்வையில் உருவான வில்காபாம்பா நகர் பாழடைந்து, கானகத்தின் மௌனத்துக்குள் தன்னைக் கரைத்துக் கொண்டு, ஓர் இனம் அழிந்த வரலாற்றின் கறுப்புக் கண்ணீர் துளியாய், பல நூற்றாண்டுகளாக அமைதியாய் இருந்தது.

இன்கா மக்களின் கதைகளிலும், அவர்களுடைய கலாசார வாழ்க்கை முறையிலும் ஆர்வம் கொண்ட யேல் பல்கலைக்கழக பேராசிரியர் ஹிராம் பிங்காம் 1911ஆம் ஆண்டு தன்னுடன் சிலரை அழைத்துக் கொண்டு கஸ்கோ நகரைத்தாண்டிக் காட்டுக்குள் பயணமானார். இவர்களின் பயணம் ஆரம்பித்த சில நாட்களிலேயே இன்கா மக்களின் நகர் இடிபாடுகள் ஒன்றைக் கண்டனர். அதற்கு பட்டாலக்டா என்று பெயரிட்டனர். தொடர்ந்து ஒருவாரம் நடந்த அவர்கள் மண்டோர்பம்பா என்னுமிடத்தில் தங்கினர். அங்கே சில மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். அங்கிருந்து தங்கள் பயணம் குறித்து பேசிக்கொண்டிருந்த போது, எதேச்சையாக ஒருவர் சொன்ன செய்தியைக் கேட்டு விருட்டென எழுந்தார் பிங்காம். இங்கிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் ஆர்ப்பாட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் வில்கோனாட்டா அருவியின் மறுபக்கம் மலையின் உச்சியில் சில கல் வீடுகள் உள்ளன என்பதே அந்த செய்தி.

அப்போது மழைக்காலமாக இருந்ததால் கூட வந்தவர்களில் ஒருவரைத் தவிர எவரும் உயிரைப் பணயம் வைக்கும் பயணத்துக்கு விரும்பவில்லை. பிங்காம் துணிந்தார். அந்த நபரையும் அழைத்துக் கொண்டு பயணமானார். அவர்கள் அந்த இடத்தை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் அடைந்தனர்.

மேலே சென்று பார்த்த பிங்காம் வியப்பின் உச்சிக்குச் சென்றார். இது தான்..... இது தான் நான் தேடிய இடம் என குதித்தார். அங்கே பளபளக்கும் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட அற்புதமான நகரே இருந்தது. இதுவே இன்றைய மச்சு பிச்சு ! 'இன்கா மக்களின் தொலைந்த நகரம்' என அதை அவர் அழைத்தார். மரங்களுக்கும் பாசிகளுக்கும் இடிபாடுகளுக்கும் இடையே சத்தமில்லாமல் கிடந்தது அந்த சரித்திரம்.

பிங்காம் தனது யேல் பல்கலைக்கழகத்தை உதவிக்காக அணுகினார். பல்கலைக்கழகமும் பிங்காமுக்கு உதவ முன்வந்தது. அடுத்த ஆண்டில் பிங்காம் தேவையான உதவிகளுடன் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு மீண்டும் வந்து, அந்த நகரை அதன் தன்மை கெடாமல் சுத்தம் செய்யத் துவங்கினார். அந்த இடத்தைச் சுத்தம் செய்து முடிக்க மூன்று ஆண்டுகள் சென்றன. இங்கிருந்து 173 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 150 பெண்களுடையவை. சுமார் ஆயிரம் பேர் வசித்திருக்கக் கூடிய இடத்திலிருந்து வெறும் 173 எலும்புக்கூடுகள் மட்டுமே கிடைத்திருப்பது மேலும் பல கற்பனைகளுக்கு வழி வகுக்கிறது. மற்றவர்கள் பள்ளத்தாக்குகளில் எறியப்பட்டிருக்கலாம். அல்லது வேறு எங்கேனும் புதைக்கப்பட்டிருக்கலாம். அல்லது வெளியேறியிருக்கலாம் என்பது அவற்றில் ஒன்று.

மச்சுப் பிச்சு இரண்டு பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது மக்கள் வாழும் இடம்; மற்றையது பயிர்ச் செய்கை இடம். மக்கள் வாழும் பகுதி 'U' வடிவத்தைக் கொண்டு, ஐந்து பகுதிகளைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. இவற்றில் பிரதான நுழைவாயில், இரண்டு பிரதான கட்டிட வளாகங்கள், கற்கள் பதிக்கப்பட்ட வீதிகள், படிக்கட்டுகள் (3000) உள்ளன. இவற்றைவிட 'இன்டிகுவாட்டானா' என்ற சூரியனுக்குக் கட்டப்பட்ட ஒரு கோயில், மூன்று சாரளக் கோவில், பாதுகாவலர் அரண், வானியல் மணிக்கூடு, அரசனின் அரண்மனை, கைத்தொழில் குடிசைகள், மக்கள் குடியிருப்புகள் ஆகியவை காணப்படுகின்றன. இன்கா மக்கள் தமக்குத் தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்திருந்ததுடன் போராயுதங்கள் மற்றும் கட்டிடநிர்மாணம், வீட்டு பாவனைப்பொருட்கள் அனைத்து உபகரணங்களையும் உற்பத்தி செய்திருந்தனர்.


இங்கு கண்டெடுக்கப்பட்ட பல பொருட்களை ஆராய்ச்சிக்கென அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார் பிங்காம். அங்கிருந்து தங்கம், வெள்ளி எதுவும் கிடைக்கவில்லை எனவும், வெண்கலம், மரம் மற்றும் வேறு சில உலோகங்களாலான 521 பொருட்களைத் தான் கண்டெடுத்ததாக பிங்காம் தெரிவித்தார். ஆனால், யாரும் அணுகாத, ஒரு பெரும் சாம்ராஜ்யம் நடந்திருக்கக் கூடிய வாய்ப்புடைய இந்த இடத்தில் மிக விலையுயர்ந்த பொருட்கள் ஏராளம் கிடைத்திருக்கக் கூடும் எனவும், அவை பிங்காம் மூலம் பெரு நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என்பதும் பலரின் நம்பிக்கையாக உள்ளது.


மச்சு பிச்சு தான் வில்காபாம்பா என்று நினைத்து தான் அனைத்தையும் செய்து கொண்டிருந்தார் பிங்காம். ஆனால் உண்மையில் அது வில்காபாம்பா இல்லை. வில்காபாம்பா 1964 ஆம் ஆண்டு ஜீன் சாவோய் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இந்த இடத்தை பிங்காம் 1909 ஆம் ஆண்டே கண்டார். ஆனால் இது ஏதோ முக்கியத்துவமற்ற ஒரு இடம் என நினைத்து அசட்டையாய் விட்டு விட்டார் !

1913 ஆம் ஆண்டு மச்சு பிச்சுவுக்கு ரயில் பாதை அமைக்கும் பணி ஆரம்பமானது. அது 35 ஆண்டுகளுக்குப் பின் மச்சு பிச்சுவைச் சென்றடைந்தது.

1981 ஆம் ஆண்டு மச்சு பிச்சுவைச் சுற்றி சுமார் 325 சதுர கிலோமீட்டர்களை பெரு அரசு வரலாற்று இடமாக அறிவித்தது. அதன் பின்னர் இது ஒரு சுற்றுலாப் பயணிகளின் ஒரு முக்கிய இடமாக மாற்றப்பட்டது. 1983 முதல் யுனெஸ்கோ அமைப்பின் கலாசார சிறப்புமிக்க இடங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டது.


வில்காபாம்பாவைத் தேடிப்போன பிங்காம் மச்சு பிச்சுவைக் கண்டுபிடித்தார். மச்சு பிச்சு என்பது என்ன? அது ஏன் கட்டப்பட்டது? போன்ற விவரங்கள் ஏதும் இல்லாமல் மர்மத்தின் குழந்தையாய் கிடக்கிறது இந்நகர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உருளைக்கிழங்கு, கச்சான், கோப்பி, பச்சைமிளகாய், தக்காளி ஆகிய பயிர்களின் தோற்றத்துடன் இங்காக்களின் நாகரிகம் தொடர்புடையது. புராதனக் கோட்டைச் சுவர்களில் அல்லது கோவில் மதில் சுவர்களில் கற்களை அறுத்து ஒட்டும் ஓர் அற்புதக் கலை இங்கா நாகரிக அழிவுடன் மறைந்துவிட்டது. இங்கா நாகரிகத்தில் அவர்கள், ஒரு வகையான தாவரச்சாறைப் பயன்படுத்தியதாகக் கருதப்பட்டது. 'பீட்டோ' என்ற இன்காப் பழங்கதையில், (பீட்டோ என்பது ஒரு பறவை) இப்பறவை எவ்வாறு ஆன்டீஸ் மலை உச்சியில் கல்லைக்குடைத்து கூடுகட்டியது என்று விவரிக்கிறது. இந்தப் பீட்டோ பறவை ஒரு வகையான செடியின் கிளையைப் பச்சை இலைகளோடு கொத்திச் சென்று அதைக் காலாலும் சிறகாலும் கசக்கிப் பின் மூக்கால் கொத்தித் துளையிட்டுத் துளையிட்டு கருங்கல்லில் குழிகளை ஏற்படுத்தி வசிக்குமாம். இந்த நுட்பத்தைப் பயன்படுத்தியே பாறைகள் உடைக்கப்பட்டு இங்கு பயன்படுத்தப் பட்டதாகக் நம்பப்படுகிறது. அந்தத் தாவரத்தின் பெயர், ஷெஸ்வா. இன்கா மொழியில் 'ஹரக் கெஹாமா'. இந்த ஹரக் கெஹாமா தாவரத்திலிருந்து பெறப்படும் சாற்றுக்கு எப்படிப்பட்ட உலோகத்தையும், கல்லையும் கரைக்கும் ஆற்றல் உண்டு. இத்தாவரத்தின் மூலம் கற்கள் அறுக்கப்பட்டு கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் பெருமளவு உல்லாசப் பயணிகள் இங்கு முற்றுகை இடுவதும் இக்களத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. ஜனவரி, பெப்ரவரி காலப்பகுதியில்தென்அமெரிக்காவில் பெய்த கடும் மழையினால் மச்சுபிச்சுவுக்குச் செல்லும் பிரதான பாதையில் பாலம் ஒன்றை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டதால் இரண்டு மாதங்களுக்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுற்றுலாப் பயணிகளுக்கான அனுமதி ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி மீண்டும் வழக்கப்பட்டது.


மச்சுப்பிச்சுவில் நின்று சுற்றும்முற்றும் பார்க்கும்போது, இயற்கையே ஓர் அசையும் சொர்க்கமாக விழிகளுக்குள் நாட்டியாலயம் நடத்துகிறது. மச்சு பிச்சு உறையும் உண்மைகளுடன், நிறையும் எழில் கொண்டு எம்மை அதிசய மனநிலைக்கு அழைத்துச் செல்கிறது.

-பி.ஜோண்சன்

மச்சு பிச்சுவின் மர்மத்தையும், அழகையும் முழுமையாய் உணர்ந்து, ரசிப்பதற்கு இரண்டு நாட்கள் தேவை. அங்கு செல்வதற்கு மே முதல் செப்டெம்பர் மாதங்கள் சிபார்சு செய்யப்படுகின்றன. புகையிரதம், பஸ், விமானம் மற்றும் உலங்குவானூர்தி வசதிகளும் இங்கு செல்வதற்கு உண்டு. பெருவின் தலைநகர் லீமாவிலிருந்து குஸ்கோ நகர் வரை விமானத்திலும் குஸ்கோ நகரில் இருந்து ஒல்லாண்டயடம்போ என்னும் இடத்திற்கு ரயிலிலும், பின்னர் பேருந்திலும் பயணித்து அதிசய உலகைக் காண முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒளி வீசும் வெசாக் திருநாள்

தென்கிழக்காசியாவில் செல்வாக்குப் பெற்றுள்ள பௌத்தமதம், இலங்கையில் மிக முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது. இலங்கையில் பெரும்பான்மையான மக்கள், குறிப்பாக பெரும்பாலான சிங்கள மக்கள் பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். இவ்வகையில் பௌத்தக் கோட்பாடுகளைப் போதித்து மக்களுக்கு அன்பு வழி காட்டிய கௌதம புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் பெற்றதுமான தினமான வைகாசிப் பூரணை திகழ்கிறது. இத்தினம் வெசாக் என பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த வைகாசி விசாக தினம், இந்து மக்களைப் பொறுத்தவரையிலும் ஒரு புனித தினமாகும்.

மனிதகுலத்தை மீட்க வேண்டும் என்ற உயர் நோக்கத்திற்காகவே மகான்கள் பிறக்கின்றனர். உண்மை, அன்பு, எளிமை, கருணை ஆகிய உயர் குணங்கள் மகான்களின் வடிவமாகும். புத்த பெருமானும் அத்தகைய ஒருவரே! அவரது வாழ்க்கையும் இந்த அருங்குணங்களை பிரதிபலிக்கும் செய்தியாகும்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பும் சிவமும் ஒன்றென்பர் அறிவுளார்
அன்பும் சிவமும் ஒன்றென் றறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே''

என்ற மகான் திருமூலரின் திருவாக்கும் இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கத் தக்கதே.

கி. மு. 623 ஆம் வருடம் வைகாசி பூர்ணிமை தினத்தன்று நேபாள தேசத்து லும்பினி பூங்காவில் சுத்தோதன மன்னனின் மகனாக இளவரசர் சித்தார்த்தர் பிறந்தார்.

சித்தார்த்தரின் பிறப்பும், பரிநிர்வாணம் அடைதலும், இறப்பும் வைகாசி மாத பூரணை தினத்தில் நடந்தேறியது முக்கியத்துவம் பெறுகின்றது.உலகத்துக்குச் தந்த நற்செய்தியும் எவ்வாறு இருக்கும் என சங்கேதமாக அறிவிக்கும் வண்ணம், லும்பினி தேசத்து மன்னரின் மகனான இளவரசன் கௌதம சித்தார்த்தன் போதி மரத்தடியில் பிறந்தார்.

சித்தார்த்தரின் பிறப்பைக் கணித்த அறிஞர்கள் அவரது வாழ்க்கை துறவறம் பூண்டு, உலகத்திற்கு வழிகாட்டும் வாழ்க்கையாக அமையும் என மன்னனிடம் கூறினர். உலகப் பற்றை இளவரசன் துறப்பதை தவிர்க்கும் முகமாக ஆயுள் முழுவதும் உச்ச உல்லாச வாழ்க்கையை சித்தார்த்தன் அனுபவிக்க மன்னன் ஏற்பாடு செய்திருந்தான். அவரது இளம் வயதில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்றவாறு அரண்மனைகள் அமைக்கப்பட்டன. அவர் வாழ்ந்த நாளில் அரசர்களும் செல்வந்தர்களும் அவருடைய சௌக்கியத்துக்காக மிக அழகான கட்டிடங்களை கட்டப் போட்டியிட்டார்கள். ஆனால் சித்தார்த்தன் உல்லாச வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு துறவறம் பூண்டார்.

இருபத்தைந்து நூற்றாண்டுகளாக புத்தரை நினைவூட்டவும், அவரைப் போற்றும் முகமாகவும் கட்டப்பட்ட மிகச் சிறந்த நினைவுக் கட்டிடங்கள் ஆசியாக் கண்டத்தில் பல இடங்களில் பரவி உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக போகத்தில் திளைத்து வாழ்ந்த இளவரசன் சித்தார்த்தன், யசோதரை என்னும் பெண்ணை மணந்து, ராகுலன் என்னும் ஆண் குழந்தைக்குத் தந்தையாகி, ஆடம்பர வாழ்வினை மேற்கொண்டிருந்த வேளை, பிணி, மூப்பு, மரணம் ஆகிய இயற்கை நிகழ்வுகளை எதிர்பாராத விதமாகக் கண்ணுற்ற போது அவரிடம் ஏற்பட்ட அதிர்ச்சியும் சிந்தனைத் தாக்கமும் வாழ்க்கை நிலையாமை தொடர்பாக அவரிடம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து நிலையான பேரின்பத்துக்கான உண்மைத் தேடிய சித்தார்த்தர், தனது மனைவி, மக்கள், அரச போகம் ஆகியவற்றைத் துறந்து, முப்பத்தைந்து வயதில் துறவியானார். வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்ந்து வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு உண்மைகளை புத்தர் கண்டறிந்தார். மனிதர்களால் துன்பத்தைத் தவிர்க்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு ஆகியவை மனிதருக்குத் துன்பத்தைத் தருபவை. பசி, பகை, கொலை, வெகுளி, இழப்பு, மயக்கம் போன்றவையும் துன்பம் தருபவையே.

துன்பத்துக்கான காரணம் ஆசையாகும். நற்காட்சி, நல்லெண்ணம், நன்மொழி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நற்தியானம் ஆகிய எட்டு நெறிகளும் துக்கத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும். புத்தபெருமான், பிறந்ததும் ஆழ்ந்த தியானத்தின் மூலம் ஞான ஒளி பெற்றதும், இறந்ததும் வைகாசித் திங்களில் வரும் பௌர்ணமி தினத்தில் அமைந்ததால், இத்தினம் வெசாக் திருநாள் என பௌத்த மக்களால் போற்றப்படுகின்றது.


இலங்கையைப் பொறுத்தவரை வெசாக் என்றால் புத்த பெருமானின் வாழ்க்கைச் சரிதங்களைக் கூறும் படங்களைக் கொண்ட பிரமாண்டமான அழகிய பந்தல்கள் மற்றும் எங்கும் ஒளியேற்றும் வெளிச்சக் கூடுகள் என்பதைதான் முக்கியமாக எவருக்கும் ஞாபகத்துக்கு வரும். ஆனால் இவை மட்டுமே வெசாக்தின கொண்டாட்டமன்று. வெசாக் புனித தினத்தில், நற்கருமங்களையும், தான தருமங்களையும் மேற்கொள்வதால் நன்மைகள் பெருகும் என பௌத்தர்கள் நம்புகின்றனர். எனவே இப்புனித நாளில் பௌத்தர்கள், பௌத்த வணக்கத்தலங்களில் தீபங்களை ஏற்றுதல், மந்திரங்களை உச்சாணம் செய்தல், பக்தி கீதங்களைப் பாடுதல், தான சாலை அமைத்து, ஏழை எளியோர்க்கு உணவு வழங்குதல், முக்கியமாக மரக்கறி உணவுகளை வழங்குதல், மிருக வதைக்குத் தடை, மதுபான விற்பனைக்கு தடை போன்ற நற்காரியங்களைச் செய்கின்றனர்.

பௌத்தத்திலுள்ள முக்கிய பிரிவுகளான மகாயானம் சீனா, ஜப்பான், கொரியா, வியட்நாம், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. தேரவாத பௌத்தம் மியன்மார், கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, இலங்கையிலும் வஜ்ரயானம் திபேத், மங்கோலியா, ரஷ்யா, சைபீரியா, இந்தியா ஆகிய நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

- ஜெனிஷா

## அட்டைப்பட விளக்கம்:

வெசாக் தோரணங்கள், பந்தல்கள், கூடுகள் போன்ற வெசாக் கொண்டாட்ட முறைகள் சீனக் கலாசாரத்தில் இருந்து வந்தவையாகும். குறிப்பாக கோவில்கள், வீதிகள், வீடுகளில் வர்ணமயமான மின்விளக்குகள் பொருத்தி அழகுபடுத்துவார்கள். வெசாக் கூடுகளில் அவற்றின் பிரமாண்டத்தையும், பயன்படுத்தும் பொருள்களையும் கொண்டு வேறுபடுகின்றன. ஒவ்வொருவரும் தமது கலை வண்ணத்தை கைவண்ணத்தினூடாக வெளிப்படுத்துவார்கள். பொதுவாக அறுகோண, எண்கோண வெசாக் கூடுகளுக்கு வர்ண மென்கடதாசிகள் ஒட்டப்பட்டு மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு வீடுளில் தொங்கவிடப்படுகின்றன. ஆர்வம்மிக்க இளைஞர் குழு அல்லது பொது நிறுவனங்கள் பிரமாண்ட வெளிச்சக் கூடுகளை பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கின்றன. இவ்வாறு அமைக்கப்படும் கூடுகளுக்கிடையில் போட்டிவைத்து பரிசுகள் வழங்குவதும் உண்டு. இந்தவகை பிரமாண்ட கூடுகள் இரும்பு சட்டங்கள் மற்றும் முங்கில் தடிகள் கொண்டு அமைக்கப்பட்டு, வர்ண மின்குமிழ்களினால் அலங்கரிக்கப்படுகின்றன. பௌத்தமத வரலாற்றுக் கதைச் சம்பவங்களை மிக நுட்பமான முறையில் சித்தரிப்பது மரபாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுக்கி அடிக்க பாலாறு...

குற்றுயிராய்க் கிடக்கும் எமது தமிழ்ப் பாரம்பரிய, கலாசார விளையாட்டுக்களுக்கு புத்துயிரளிப்போம்.

**எட்டுக்கோடு**

எட்டுக்கோடு கெந்தி விளையாடும் சுவாரஸ்யமான விளையாட்டு. நீள் சதுரத்தை நீளப்பாடாகக் கீறி நீளப்பாடாக நடுவிலும், அகலப்பாடாக நான்காகவும் பிரித்துக் கோடு போட்டு விட்டால் தளம் தயார். எட்டுச் சதுரங்கள் கொண்ட இப்பெட்டியில் இடது பக்கம் நான்கு பெட்டிகளும், வலது பக்கம் நான்கு பெட்டிகளும் இருக்கும். விளையாட்டை இடது பக்கம் இருந்தே தொடங்க வேண்டும். இடது பக்கமாகப் போகும் போது ஐந்தாவது பெட்டி அதாவது வலது பக்கத்தின் மேற்பெட்டி வீடு. இங்கு காலாறி ஓய்வெடுக்கலாம்.

சிப்பியை இடது பக்க முதற் பெட்டியில் போட வேண்டும். போடும் போது சிப்பி கண்டிப்பாகப் பெட்டிக்குள் விழ வேண்டும். கோடுகளில் வீழ்ந்து விடக் கூடாது. ஒற்றைக்காலால் கெந்தி, அந்தச் சிப்பியை மிதிக்க வேண்டும். ஒரு கெந்தலிலேயே மிதித்து விட வேண்டும். மிதித்த சிப்பியை குனிந்து கையால் எடுத்துக் கொண்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பெட்டிகளுக்குள் கெந்தி, ஐந்தாவது பெட்டிக்குள் இரண்டு கால்களையும் வைத்து நின்று விட்டு மீண்டும் ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் கெந்தி வெளியில் போக வேண்டும்.




இதே முறையில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போட்டு இதே ஒழுங்கில் சென்று மிதித்து, எடுத்துக் கொண்டு வெளியில் போக வேண்டும். ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போடும் போது இடது பக்க மூலையில் நின்றே போட வேண்டும்.

ஏழு பெட்டிகளும் விளையாடி முடிந்தபின்னர், அடுத்த கட்டமாக சிப்பியை முதற் போலவே முதலாவது பெட்டியில் போட்டு, ஒற்றைக் காலால் கெந்தி மிதிக்க வேண்டும். ஒரு கெந்தலிலேயே மிதித்து விட வேண்டும். மிதித்த சிப்பியை குனிந்து கையால் எடுத்து, தூக்கி வைத்திருக்கும் கால் பாத விரல்களின் மேல் வைத்துக் கொண்டு கெந்த வேண்டும். கெந்தும் போது சிப்பி கீழே வீழ்ந்து விடக் கூடாது. எட்டாவது பெட்டிக்கு வந்ததும் சிப்பியை பெட்டிக்கு வெளியில் போட்டு விட்டு கெந்தி அதை மிதிக்க வேண்டும்.

அடுத்து, சிப்பியை தலையில் வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு பெட்டிகளில் நடக்க வேண்டும். ஒற்றைக்கால் முதற்பெட்டியிலும் மற்றையகால் இரண்டாவது பெட்டியிலும்.. என்று வைத்து நடக்க வேண்டும். முகம் மெதுவாக மேலே பார்த்தபடி இருக்க வேண்டும். நடக்கும் போது 'சரியோ? சரியோ?' (ரைட்ரோ , ரைட்டோ) என்று கேட்க வேண்டும். கால் விரல்கள் கோடுகளில் பட்டு விடக் கூடாது. பட்டுவிட்டால் 'பிழை' என்பார்கள். ஐந்தாவது பெட்டியில் இரண்டு கால்களையும் வைத்து நின்று கண்களைத் திறந்து பார்த்து விட்டு மீண்டும் ஆறாவது ஏழாவது பெட்டிகளைக் கடந்து எட்டாவது பெட்டிக்கு வந்ததும் தலையில் உள்ள சிப்பியை கண்களை மூடிய படி நின்று தலையாலேயே வெளியில் வீழ்த்தி விட்டு கண்களைத் திறக்க வேண்டும். பின் கெந்தி மிதிக்க வேண்டும்.

அடுத்து, சரியாகச் சிப்பியில் மிதித்து விட்டால், சிப்பியை கையில் எடுத்து எட்டுக்கோட்டுக்கு புறமுதுகு காட்டி நின்று கொண்டு, சிப்பியை தலைக்கு மேலால் எட்டுக்கோட்டுக்குள் எறிய வேண்டும். சிப்பி கோடுகளிலோ, வெளியிலோ,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்தாவது பெட்டிக்குள்ளோ விழக் கூடாது. மூன்று சந்தர்ப்பங்கள் தரப்படும். சிப்பி எந்தப் பெட்டிக்குள் விழுகிறதோ அந்தப் பெட்டி உங்களுக்குச் சொந்தம். அது உங்கள் பழம். நீங்கள் அதற்குள் காலாறிப் போகலாம். மற்றவர்கள் அதைக் கடந்துதான் போகலாம். அவர்கள் அதற்குள் கால் வைக்க முடியாது. அடுத்த பழத்துக்கு மீண்டும் முதலிலிருந்து விளையாட வேண்டும்.

இரண்டு பேருக்கு அடுத்தடுத்த பெட்டிகளில் பழம் வந்து விட்டால் மற்றவர்கள் எப்படியாவது பாய்ந்து இரண்டு பெட்டிகளையும் கடக்க வேண்டும். (சிலர் அருகில் துணைப் பெட்டிபோட்டுக் கொள்வார்கள்) யார் கூடிய பழங்கள் எடுக்கிறாரோ அவர் வென்றவர் ஆகிறார்..


இதே போல ஆறுகோடு என்ற விளையாட்டும் உண்டு. ஆறு கோட்டில் ஓட்டுத் துண்டைக் கையில் எடுக்காமல் கெந்தியபடி, ஒவ்வொரு பெட்டியாகக் காலால் தட்டி மிதித்துக் கொண்டு போக வேண்டும்

## கிட்டிப்புள்

கிட்டிப்புள்ளிலிருந்துதான் மட்டைப்பந்து என்று தமிழில் சொல்லப்படும் கிரிக்கெட் உருவானது என்று பெருமைப்படும் அதேவேளை, இந்த விளையாட்டு அநேகமாக ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே இன்று காணப்படுகின்றது.

'கிட்டிப்புள்' விளையாட்டு சில இடங்களில் 'கிட்டிக்கொட்டன்' என்றும் அழைக்கப்படுகிறது. மரங்களுக்கு கீழும், வீதிகளின் ஒழுங்கைகளிலும், வெறும் வளவுகளிலும் ஊர்சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விளையாடுவார்கள்.

தரையில் குச்சியினால் நீளவாக்கில் சிறிய பள்ளம் தோண்டி, அதன்மீது புள்ளை வைத்துக் குச்சியினால் வேகமாகக் கிளப்பித் தள்ளிவிடும்போது, புள் தள்ளித் தூர விழும். எதிரே விளையாடுகிறவர் ஓடிப்போய் புள்ளை எடுத்துக் குழியை நோக்கி வீசுவார்.. குழியிலிருந்து ஓரடி தள்ளி கிட்டியை வைத்துவிட வேண்டும். புள் விழுந்த இடத்திலிருந்து கிட்டியை இலக்குப்பார்த்து வீச வேண்டும் புள் கிட்டியில் பட்டுவிட்டால் விளையாடுகிறவர் தோற்றவராவர். அப்படிப்படாவிட்டால், அவர் குழிக்கு முன்னே வந்து, எதிராளியால் வீசப்பட்ட புள்ளை எடுத்துத் தனது கையில் வைத்திருக்கும் கிட்டியினால் ஓங்கி அடிப்பார். புள் விண்கூவிக் கொண்டு காற்றில் பறக்கும். இவ்வாறு பாய்ந்து வரும் புள்ளை எதிராளி பிடித்துவிட்டால் விளையாடுகிறவரின் ஆட்டம் முடிந்துவிடும். இல்லாவிடில் புள் விழுந்த இடத்திலிருந்து குழிவரை கிட்டியினால் அளந்து புள்ளிகளைச் சேர்த்துக் கொள்வார்கள்.



புள் விழுந்த இடத்திலிருந்து எறியும் போது அதைத் திருப்பி அடிப்பதும் அதற்கு 'மறுத்தான்' கேட்பதுமாக அந்த விளையாட்டு தொடரும். இதில் 'மறுத்தான்' என்பது, மறுத்தான் எனக் கேட்டு, புள் திரும்ப வீசப்படும்போது புள்ளை அடித்தால், அடித்தவர் தன் புள்ளிக்கணக்கை பத்து மடங்கால் பெருக்கி எடுத்து கூட்டிகொள்ளலாம். அப்படியே அந்தக் கணக்கு கூடிக்கூடி ஒருகுறிப்பிட்ட கணக்கை தாண்டி விட்டால் அதை 'கிளம்பி' என்று சொல்வார்கள். பின்னர் ஆட்டமிழந்தாலும் இன்னொருமுறை ஆட முடியும். மறுத்தான் அடிக்கப்படும்போது பிடி எடுக்கப்பட்டால் அந்த குழுவிலுள்ள அனைவரையுமே ஆட்டமிழக்கசெய்யும். இந்த விளையாட்டில் கணக்கு பார்க்கிற விசயம் முக்கியம். கணக்கை கூட்டிச் சொல்லும்போது தடுமாறிவிட்டால் அதை எதிர்தரப்பினர் கூழ் ஆக்கி விடுவார்கள். அதன் பின் திரும்ப தன் கணக்கை ஆரம்பிக்கவேண்டும்.

'கிட்டிப்புள்' இடங்களுக்கு இடம் சில வேறு முறைகளில் விளையாடப்படுகிறது. அதாவது 'கிளம்பி' எனப்படும் நிலையைத்தாண்டிய பின் புள்ளை கையில் தூக்கி நுனிப்புள்ளில் பிடித்தவாறு கிட்டியினால் அடிக்கப்படும். அடிப்பதற்கு மூவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, அது யாரிடமும் பிடி கொடுக்கப்படாமல் அடிக்கப்படுமானால் அந்த இடத்திலுருந்து மூச்சு விடாமலே பாடிக்கொண்டோ அல்லது கூவிக்கொண்டோ ஓடி வர வேண்டும்.

ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடி சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கியடி பாலாறு பாலாறு பாலாறு

என்று சொல்லியபடியோ அல்லது 'கூகூகூ ஊஊஊஊஊஊஊ' அந்த புள் சென்ற இடத்திலுருந்து ஓடியபடி வரவேண்டும். எதிர்த்தரப்பினர் எதை செய்யச்சொல்லி கேட்பார்களோ அதை செய்யவேண்டும். இவ்வாறாக மட்டக்களப்பு கிராமங்களில் கிட்டிபுள் விளையாடப்படுகிறது.

- மிருனாளினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைமை பேணும் கோட்டை நகரம்



இலங்கையின் தென் மேற்கு முனையில் அமைந்திருக்கும் காலி நகரம். 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன் கிம்கதித்த என அழைக்கப்பட்டது. அப்போது காலி பிரதான துறைமுகமாக விளங்கியது. டச்சு காலனித்துவ ஆட்சியின்போது காலி உச்ச அபிவிருத்தியைக் கண்டது.

இங்குள்ள பிரதான நதி ஜின்கங்கையாகும். இது ஜிந்தோட்டவில் கடலுடன் கலக்கிறது. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட கடற்கோளினால் (சுனாமி) காலி நகரில் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

கடலுக்குள் பாறைகள் இயற்கை அரணாக அமைய ஐரோப்பியர் கட்டிய கோட்டைக்கு காலி ஒரு சிறந்த உதாரணமாகும். இதில் ஐரோப்பியக் கட்டடக்கலையும் தெற்காசிய மரபுகளும் இணைந்துஉள்ளன. காலிக் கோட்டையை பாதுகாக்கப்பட வேண்டிய உலக புராதன இடமாக யுனெஸ்கோ 1988 ஆம் ஆண்டு அங்கிகரித்துள்ளது. இக்கோட்டை இலங்கையின் பெரும்பாலான கோட்டைகள் போன்று கடலும் நிலமும் உள்ள சிறிய குடாப் பகுதியில் கட்டப்பட்டிருக்கிறது. கோட்டைக்கு அருகில் கடலில் பெரும் பாறைகள் உள்ளன.


காலியில் உள்ள வேறு முக்கியமான இடங்களாக, புனித மரியாள் பேராலயம், சிவன் கோவில், அமன்கல்ல என்னும் வரலாற்று ரீதியான உல்லாச ஹோட்டல் ஆகியன விளங்குகின்றன.

தென்னிலங்கையில் பிரதான நகரமாக விளங்கும் இந்நகரில் சுமார் ஒரு இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இவர்களில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவும் சிறுபான்மையாக முஸ்லிம்களும் மிகச் சிறிய எண்ணிக்கையில் தமிழர்களும் வசிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொழும்பில் இருந்து இந்நகரை இணைத்து மாத்தறை வரை கடலோரப் புகையிரதப் பாதை காணப்படுகிறது. சர்வதேச கிரிக்கட் மைதானமும் நகரின் மத்தியில் உள்ளது. காலி பழைமையை பேணிப் போற்றும் அதேவேளை உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியாகவும் சர்வதேச ரீதியில் புகழ் பெற்று விளங்குகின்றது.

காலிக் கோட்டைக்கு கிழக்குப் பக்கத்தில் றுமஸ்ஸலகந்த என்ற மிகப் பெரிய மலை காணப்படுகிறது. இராமாயணத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களுடன் இம்மலை தொடர்புடையது என உள்ளூர் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

கி. பி. 1400 ஆம் ஆண்டிற்கு முன்பே இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டது. எனவே காலி வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்த பிரதான துறை முகமாக விளங்கியிருக்கலாம். தார்ஷிஸின் (Tarshish) பழைமையான துறைமுகமாக காலி விளங்கியதென்றும் அங்கிருந்து சொலமன் அரசன் யானைத்தந்தம் மயில்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பெற்றான் எனவும் ஜேம்ஸ் எமர்ஸன் ரெனேன்ற் கூறுகிறார்.

நாட்டில் மேற்கு நாட்டவர்கள் ஆட்சிசெய்வதற்கு முன்பே காலி பிரபலமான துறைமுகமாக விளங்கியது. காலி துறைமுகத்தினூடாக பாரசீகர்கள், அராபியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர், மலாயர், இந்தியர்கள், சீனர்கள் வியாபாரத்தை மேற்கொண்டு வந்தார்கள். சீன அட்மிரல் செங் கி இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்ததைக் குறிக்க 1411 ஆம் ஆண்டில் காலியில் மூன்று மொழிகளில் ஒரு கல்வெட்டு உருவாக்கப்பட்டிருந்தது. இதில் சீன, தமிழ், பாரசீக மொழிகள் இடம்பெற்றுள்ளன. காலியின் ''நவீன'' சரித்திரம் 1505 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுகிறது. அவ்வேளை ஒரு புயலின் காரணமாக லொறென்கோ மெய்டாவின் தலைமையின் கீழ் போர்த்துக்கேயர் கப்பல் ஒன்று காலியை வந்து சேர்ந்தது. ஆனால் காலி மக்கள் போர்த்துக்கேயரை அங்கு பிரவேசிக்க விடாமல் தடுத்தார்கள். எனவே போர்த்துக்கேயர் பலாத்காரமாக உட்பிரவேசித்தார்கள்.

1640இல் போர்த்துக்கேயர், டச்சு கிழக்கு இந்திக் கம்பனியாரிடம் சரணடைய வேண்டியதாயிற்று. டச்சுக்காரர்கள் தற்போதைய கோட்டையை 1663 இல் திருத்திக் கட்டினார்கள். அவர்கள் அரண் போன்ற சுவரைக் கட்டுவதற்கு கிரனைட் கற்களைப் பாவித்தார்கள். அத்துடன் மூன்று புறஅரண்களையும் கட்டினர். அவை சூரியன், சந்திரன், நட்சத்திரம் என அழைக்கப்படுகின்றன.

1796 இல் டச்சுக்காரரிடம் இருந்து பிரிட்டிஷார் ஆட்சியைக் கைப்பற்றிய பின் அவர்கள் கோட்டையில் மாற்றங்கள் எதுவும் செய்யாமல் அப்படியே பாதுகாத்தனர். அத்துடன் அதனை காலியின் நிர்வாக மையமாக வைத்துக் கொண்டனர்.

இந்நகரம் பல் சமய, பல்கலாசார, பல்லின மக்கள் வாழ்கின்ற இடமாக விளங்குகின்றது. இங்கு றுகுணு பல்கலைக்கழகத்தின் இரு பீடங்கள் உள்ளன. வைத்திய பீடம் கரப்பிட்டியில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிக் கோட்டை முதலில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. பின்னர் 17 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களினால் திருத்திக்கட்டப்பட்டது. நானூறு ஆண்டுகளுக்குப் பின்னும், இலங்கை அரசு மீள்கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து அது புதிது போன்றும் பளிச் சென்றும் தோன்றுகிறது. இன்று இலங்கை அரசும் கோட்டையின் உள்ளே சொத்துக்களைச் வைத்திருக்கும் பல டச்சுக்காரர்களும் இதனை உலகின் நவீன அதிசயமாக ஆக்குவதற்கு எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

இன்று காலியில் உள்ள டச்சுப் பிரஜைகள், இதனை ஒரு சுதந்திர துறைமுகமாகவும் சுதந்திர வர்த்தக வலயமாகவும் ஆக்க முயற்சி செய்கின்றனர்.

காலியின் பாதுகாப்பு அரண் என்று கூறப்படுகின்ற டச்சு கோட்டை சுனாமியின் போது எதுவித அழிவுக்கும் ஆளாக வில்லை. ஆனால் சுனாமியின்போது காலி நகரம் அழிவைக் கண்டது. இங்குள்ள கோட்டைக்குள் சோனகக் குடும்பங்கள், சிங்களவர், டச்சுக்காரர், ஆங்கிலேயேர், போர்த்துக்கேயர், ஜெர்மனியர்கள் வாழ்கிறார்கள். இந்தக் கோட்டையின் வரலாறு தொடர்பாக மேலும் பல தகவல்கள் பார்வையாளர் நிலையத்திலும் கோட்டைக்குள்ளே உள்ள டச்சுக் கலை நூதனசாலையிலும் கிடைக்கும்.

கோட்டைக்குள்ளே வாழ்கின்ற சோனக குடும்பங்களான நூர்தீன் காஸிமின் குடும்பம் மற்றும் பாத்திமா கொப்டன் அடமின் குடும்பம் ஆகியவை ஒவ்வொரு நாளும் அங்கு விஜயம் செய்யும் உல்லாசப் பயணிகள் மற்றும் பிள்ளைகளுக்கு கதை சொல்லும் நிலையம் ஒன்றை நடத்துகிறர்கள். டச்சுக் கோட்டைக்குள் தேவாலய வீதியில் உள்ள டச்சு காலனித்துவ கட்டிடத்தில் ஒரு நூதனசாலை உள்ளது. அது கலாசார நூதனசாலையாகும். இக்கலைத் தகவல்கள் தென் மாகாணத்தின் கலை, கலாசாரத்தையும் பிரதிபலிக்கின்றன.

போர்த்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரர்கள் கொழும்பை கைப்பற்றுவதற்கு முன் காலிதான் அவர்களது தலைமையகமாக இருந்தது. கொழும்பு கோட்டையைப் போலல்லாது காலிக் கோட்டை அழிக்கப்படாமல் இருந்தது மட்டுமல்ல உலகில் 17 ஆம் நூற்றாண்டின் காலனித்துவ கோட்டை அமைப்பின் மிகச் சிறந்த பராமரிப்புக்கு உதாணமாக உள்ளது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் கோட்டைக்கு வெளியே உள்ள புதிய காலி நகரத்தில் பிரதிபலிக்கின்றது. கோட்டை உண்மையில் ஒரு சுவர் அமைக்கப்பட்ட நகரமாகும். நீண்ட சதுர பாணியிலான வீதிகளும் டச்சு காலனித்துவ பாணியில் முக்கோண வடிவச் சுவர் மற்றும் விறாந்தைகள்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்ட தாழ்ந்த வீடுகளும் உள்ளன.பழைய காலி நகரில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம் வியாபாரிகளின் வழித்தோன்றல்களாவர். இவர்கள் டச்சுக்காரர்களின் வீடுகளில்தான் வசிக்கின்றார்கள். ஆனால் அக்காலத்தில் டச்சுக்காரரின் வர்த்தக ஏகபோகத்தினை மீறி சிறு சிறு வியாபாரங்களை இந்த முஸ்லிம்கள் மேற்கொண்டதினால் அவர்களால் ஒதுக்கப்பட்டவர்கள் என்பது வரலாறாகும்.

இந்த முஸ்லிம்கள் அவர்களது வீடுகளைத் தமது விருப்பம் போல் மாற்றி முன்னே வராந்தாவை தமது பெண்களை வெளியில் இருந்து பார்த்தால் தெரியாதிருக்குமாறு மர வேலைப்பாடுகள் செய்ததன் மூலம் மறைத்துக் கொண்டார்கள்.

சமீபத்தில் இவ் வீடுகளில் மேலும் மாற்றம் செய்வது அனுமதிக்கப்படவில்லை. சில திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. கைப்பணிக் கடைகளுடன் தனிப்பட்ட நூதனசாலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப பிரிட்டிஷார் காலத்தின் சில கட்டிடங்களும் 20 ஆம் நூற்றாண்டு கால வெளிச்ச வீடும் இங்கிருக்கின்றன.

1588 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் கோட்டை அமைத்தல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் போர்த்துக்கேயரால் விட்டுச் செல்லப்பட்டது என அடையாளங்களாக எதுவுமில்லை. சூரியோதயத்தின் போதும் குளிர் காற்று வீசும் வேளை நகரைச் சுற்றி நடந்து செல்லும் போது தடித்த சுவர்களின் பகுதிகளும் ஒருபுறத்தில் சிவப்பு ஓடுவேய்ந்த கூரைகளுடன் கூடிய வீடுகளுடன் காணக் கூடிய காட்சிகளே.

1640 ஆண்டு டச்சுக்காரர் கொஸ்ரர் என்பவரின் கீழ் 2500 பேர் கொண்ட படையுடன் போர்த்துக்கேயரிடம் இருந்த கோட்டையைக் கைப்பற்றினார். 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை கோட்டை அமைப்பு சேவை தொடர்ந்தது. அத்துடன் மனிதக் கழிவுகளை மிகவேகமாக தண்ணீரினால் அடித்துச் செல்லப்பட்டு கடலுக்குள் அதனைத் தள்ளிவிடக் கூடியதான விஸ்தாரமான ஒரு முறையையும் அவர்கள் கட்டி வைத்தார்கள்.

குடாவின் மறுபகுதியில் ஒரு மலை உள்ளது. தூரத்தில் காலி நகரின் காட்சியை இங்கிருந்து பார்க்கலாம். மலையின் உச்சியில் இலங்கையின்மிக அழகான காலனித்துவ இல்லங்களில் ஒன்றான குளோ சென் பேர்க் ஹோட்டல் உள்ளது. சிவப்பு ஓட்டினால் வேயப்பட்ட கூரையுடன் பதித்த கட்டிடமான இவ் வீட்டின் உள்ளே மரத்திலான அமைப்புகளே உள்ளன. பழைய தளபாடங்கள் விறாந்தையில் வைக்கப்பட்டிருக்கின்றன. குடாவைப் பார்த்தவாறு ரோஸ் மலர்த் தோட்டம் உள்ளது. நீரின் குறுக்காக காலியின் சுவர்கள் இருப்பதுடன் அவற்றின் பின்னால் கோட்டையின் அனைத்து முக்கிய கட்டிடங்களையும் காணக் கூடியதாக உள்ளது.

- கங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் உங்களுக்கு எப்படி?

| | | | |
|---|---|---|---|
| இடபம் | : சூரியன்,புதன்,வெள்ளி | கன்னி | : சனி |
| மிதுனம் | : கேது | தனு | : இராகு |
| கர்க்கடகம் | : செவ்வாய் | கும்பம் | : வியாழன் |

*சந்திரன், தேய்பிறை கேட்டை தொடங்கி சகல இராசிகளிலும் இந்த மாதம் சஞ்சாரம் செய்வர்*
*(01.05.2010 தொடக்கம் 31.05.2010 வரை)*

**- ஜோதிடமாமணி எஸ். தெய்வநாயகம்**



**மேடம்**

இம்மாதம் பல விதத்திலும் நன்மைகளைத் தரக்கூடிய மாதமாக அமைந்திடும். செய்தொழில்கள் யாவும் திருப்திகரமாக அமையக் கூடிய விதத்தில் கிரக நிலைகள் உள்ளன. பண வரவுகள் சீராக இருப்பதுடன் எதிர்பார்க்கும் கருமங்கள் வெற்றிகரமாக முடிவுறும். குரு, சனி, பார்வைகளால் எதிர்பாராத நன்மைகளையும் பெறக்கூடியதாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். உத்தியோகத்தர்கள் பலவிதத்திலும் நன்மையடைவர்.



**இடபம்**

வைகாசி மாதம் வசதி வாய்ப்புகளை தரும் மாதமாக அமைவு பெறும். தொழில் நிலையில் முன்னேற்றம், எதிர்பார்த்த பண வரவுகளின் வருகையும் மனமகிழ்ச்சி தரும். குரு,சனி,இராகு கேது பார்வைகள் அனுகூலமாக அமைவதால், எதிலும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்து மன நிம்மதியைத் தரும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகளும் இடமாற்றங்களும் வந்து சேரும்.



**மிதுனம்**

மிதுன இராசியினை மிளிர வைக்கும் மாதமிது. கருமங்கள் யாவும் வெற்றிகரமாக முடிவுறுவதுடன் பண வரவுகளும் சீராக அமைந்து திருப்தியைக் கொடுக்கும். புதிய முயற்சிகளால் சிலர் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த கருமங்கள் யாவும் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் நீங்கும். பதவிகளில் ஏற்பட்டிருந்த இழுபறிகள் விலகும். மிதுன இராசியினரின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் மாதமிது.



**கடகம்**

கடந்த மாதத்தில் பட்ட கஷ்டங்கள் நீங்கிட வாய்ப்புண்டு. தொழில் ரீதியாக இருந்து வந்த இடையூறுகள் விலகும். எதிர் பார்த்த பண வரவுகள் தாமதமாகிக் கிடைக்கும். வெளியூர் பிரயாணங்களால் சிலர் சிரமங்களை எதிர்கொள்ள வாய்ப்புண்டு. குடும்பத்தில் பிள்ளைகளால் சிலருக்கு மனக் கஷ்டங்கள் ஏற்பட்டு மறையும். உத்தியோகத்தர்களுக்கு இருந்து வந்த மனக் குழப்பங்கள் மறையும். குரு-சனி பார்வையினால் சிலர் அடிக்கடி கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடும். கர்க்கடக இராசியினருக்கு சிறிது மனக்கஷ்டங்களை கொடுக்கும் மாதமாக வைகாசி மாதம் அமையும்.



**சிங்கம்**

வைகாசி மாதம் வசதிகளை ஏற்படுத்தும். தொழில் நிலைகளில் ஏற்பட்டிருந்த இடையூறுகளும் கஷ்டங்களும் நீங்கும். புதிய முயற்சிகளில் ஏற்பட்டிருந்த இழுபறிகள் நீங்கும். பண வரவுகள் உரியவகையில் கிடைத்திடும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த பல கருமங்கள் நிறைவேறி மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். உத்தியோகத்தர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்வது நல்லது. குரு- சனி, பார்வைகள் திருப்திதரக்கூடியதாக அமையாது. சிங்க இராசியினருக்கு சிக்கல்களை தீர்க்கும் மாதமிது.



**கன்னி**

உத்தாத்துப் பின் முக்கால்,அத்தம்,சித்திரையின் முன்னறையில் பிறந்தவர்கள், கஷ்டங்களிலிருந்து விடுபட வைகாசி மாதம் வழி சமைக்கும். தொழில் நிலைகள் சீராக அமைந்து பண வரவுகளும் சிறப்புடன் காணப்படும். நீண்ட நாள் எதிர்பார்த்த கருமங்கள் நிறை வேறும். குடும்பத்தில் எதிர்கொண்ட மனக் கவலைகள் மறைவது டன் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்களும் நடந்தேறும். உத்தியோகத்தர்களது பதவிகளில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகி உயர்ச்சியுண்டாகும். குரு- சனி, இராகு கேது பார்வைகள் அனுகூலமாக உள்ளதால் நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. கன்னி இராசியினருக்கு கவலைகள் குறையும் மாதமாக அமையும்.



**துலாம்**

இம்மாதம் துன்பங்களை நீக்கிட வழி சமைக்கும் மாதமாக அமைந்திடும். தொழில் நிலையில் ஏற்பட்டிருந்த இடையூறுகள் நீங்கி முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பண விடயங்களில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்த்த கருமங்கள் நடந்தேற வாய்ப்புண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடிய நன்மையடையக் கூடிய வாய்ப்புண்டாகும். துலா இராசியினரை துன்பத்தில் ஆழ்த்தாத மாதமாக வைகாசி மாதம் அமைந்திடும்.



**விருச்சிகம்**

மனதிற்கினிய மாதமாக அமைந்திடும். தொழில் நிலைகளில் ஏற்பட்டிருந்த மனக் கஷ்டங்கள் நீங்கி முயற்சிகளில் வெற்றி கிடைத்திடும். எதிர்பார்த்த பண வரவுகளில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகிடும். புதிய முயற்சிகளால் நன்மைகள் உண்டாகும். குடும்பத்தில் எதிர்பார்த்த கருமங்கள் வெற்றியுடன் முடிவுறுவதுடன் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்களுக்கு இருந்து வந்த தொல்லைகள் மறைந்திடும். விருட்சிகம் இராசியினருக்கு விடிவு தரும் மாதமாக அமையும்.



**தனு**

வைகாசி மாதத்தில் வளங்களைப் பெற்றிடும் வாய்ப்புண்டு. தொழில் நிலையில் ஏற்பட்டிருந்த கஷ்டங்களும் தொல்லைகளும் விலகிடும். பண வரவுகளில் எதிர்கொண்ட கஷ்டங்கள் விலகும். காரியாலயங்களில் வீண் தடைகள் ஏற்பட்டாலும் சமாளிக்கும் திறனுண்டாகும். நீண்ட நாள் எதிர்பார்த்த கருமமொன்று இம்மாதம் முடிவுற்று மனமகிழ்ச்சி தரும். குடும்பத்தில் மன மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். பிள்ளைகளால் சிலர் மனக் குழப்பமடைவர். தனு இராசியினரை தளரவிடாத மாதமிது.



**மகரம்**

இம்மாதம் மனச் சுமையை குறைக்கும் மாதமாகும். குரு- சனி, இராகு கேது மாற்றங்கள் இடையிடையே சிக்கல்களை தோற்று விக்கும். தொழில் நிலைகளில் மிகவும் சாதுரியமாக நடக்காவிட்டால் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையுண்டாகும். பண விடயங்கள் சீராக அமையாவிட்டாலும் அவ்வப்போது பணம் வந்து சேரும். குடும்பத்தில் எதிர்பாராத மனக் கஷ்டங்கள் ஏற்பட்டு மறையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பொறுமையுடன் நடந்து கொண்டால் நன்மையுண்டாகும். மகர இராசியினருக்கு மனக் குழப்பங்களை தரும் மாதமாக அமைவு பெறும்.



**கும்பம்**

இந்தராசியினர் கூடிய கவனத்துடன் இருக்க வேண்டிய மா தமாகும். தொழில் நிலைகளில் மந்த நிலையை உருவாக்கும். பண விடயங்கள் சீராக நடைபெறாது. இடையிடை பணக் கஷ்டங்களை உருவாக்கும். புதிய முயற்சிகளினால் செலவுகள் கூடுதலாக அமையும். குடும்பத்தில் மனக் குறைகள் ஏற்படும். திட்டமிட்ட சில சுப கருமங்களில் தடை ஏற்படும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த பல விடயங்களில் தாமதங்கள் ஏற்படும். கும்ப இராசியினர் மாதக்கடைசியிலிருந்து கூடிய நன்மை பெறுவர்.



**மீனம்**

இம்மாதம் நன்மையும் தீமையும் கலந்த மாதமாக அமையும். தொழில் நிலைகளில் இடையிடை சில பிரச்சினைகள் தோன்றி மனக் குழப்பம் தரும். பண விடயங்கள் சீராக அமையாவிட்டாலும் அவ்வப்போது பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக் குழப்பங்கள் விலகும். சுப கருமங்களில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மிகவும் விழிப்புடன் நடந்து கொள்வது நன்மை தரும். மேலதிகாரிகளால் சிலர் தொல்லையடைய வாய்ப்புண்டு. மீன இராசியினருக்கு குரு சனி பகவானால் ஓரளவு நன்மைகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்நீரால் எரியும் தீபம்

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் அற்புதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



கி. பி 171ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 193ஆம் ஆண்டு வரை அனுராதபுர நகரத்தில் இருந்து ஆட்சி புரிந்த கஜபாகு என்ற மன்னனால் கண்ணகி அம்மன் வழிபாடு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக 'இராஜாவளி' என்ற சிங்கள நூல் எடுத்துரைக்கிறது. கஜபாகு மன்னனின் ஆட்சி காலத்தில் சேரமன்னன் செங்குட்டுவன் தனது தலைநகராக விளங்கிய வஞ்சியில் இமயமலையில் இருந்து கொண்டுவந்த கல்லில் இருந்து கண்ணகிக்கு சிலை செய்து கோவில் அமைத்து பெருவிழா எடுத்தான் எனவும் அறிய முடிகிறது. கிபி 178ஆம் ஆண்டில் நடந்த அவ்விழாவிற்கு செங்குட்டுவனின் அழைப்பையேற்று அவன் நண்பனாகிய கஜபாகு இங்கிருந்து அங்கு சென்று விழாவில் கலந்து கொண்டான்.

இவ்விழாவில் பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியனும், சோழ அரசன் பெருநற்கிள்ளியும், கொங்குதேச அரசன் இளங்கோ அடிகளும் மற்றும் மகத தேச மன்னரும் கலந்துகொண்டாதாக துரை ஜெயநாதன் அவர்கள் 'ஆதி திராவிடரும் அழிந்துபோன சங்கங்களும்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.


விழாவில் கலந்துகொண்ட கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வமான கண்ணகியின் அற்புதங்களைக் கண்டு வியந்தது மாத்திரமல்லாமல் செங்குட்டுவனைப்போல் கண்ணகியை நித்தியபூசை செய்து வலம் வந்து தன் நாட்டிலும் எழுந்தருளி அருள்புரிய வேண்டும் என்று கண்ணகியை உள்ளம் உருகப் பிரார்த்தித்தான். அவன் விரும்பியபடி எல்லாம் நடக்குமென கண்ணகியிடம் ஆசி கேட்டு கஜபாகுவின் உள்ளம் நெகிழ்ந்ததுடன் கண்ணகி மேல் கூடிய நம்பிக்கை கொண்டான் எனவும் நாம் அறிய முடிகிறது. அதற்கமைய இலங்கையில் கண்ணகி வழிபாட்டினை பரப்ப தன் விருப்பத்தை செங்குட்டுவனிடம் கஜபாகு தெரிவித்தான். செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும் ஒரு காற்சிலம்பையும் சந்தனமரப் பேழையில் வைத்து கஜபாகுவிடம் பரிசாக கையளித்தான் என வரலாறு கூறுகிறது.

கஜபாகு மன்னன் கண்ணகி விக்கிரகத்துடன் இலங்கைக்குத் திரும்பும்போது தன்னுடன் பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பல்குடிமக்களையும் அழைத்து வந்தான். பழங்காலத்தில் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட மாதகலுக்கு அருகேயுள்ள சம்புகோள துறைமுகத்தில்தான் அவன் கண்ணகி சிலையுடன் வந்திறங்கினான். யானை மேல் சிலையை வைத்து பல யானைகள் பின்னே வர ஊர்வலமாய் பல இடங்களுக்கு அக்கண்ணகி சிலையை எடுத்துச்சென்றான். ஊர்வலம் நின்ற இடமெல்லாம் கண்ணகி வழிபாடு தோன்றிற்று என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கஜபாகு மன்னனால் யாழ்ப்பாணத்தில் அங்கணாகடவை என்ற இடத்தில் முதலாவது கண்ணகி அம்மன் கோவில் ஸ்தாபிக்கப்பட்டது. 'அங்கணா' என்பது அம்மனை குறிக்கும் ஒரு சொல்லாகும். ஆனாலும் அக்கண்ணகி கோவிலும் அம்மன் சிலையும் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் யானையால் சிதைக்கப்பட்டதாக நாம் அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நூல் ஆசிரியர் 'முத்ததம்பி' அவர்களின் 'யாழ்ப்பாண சரித்திரம்' என்ற புத்தகத்தில் முதற் கண்ணகி அம்மன் கோவில் நாவற்குளியில் உள்ள வேளம்பாடியில் தோன்றியதென குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் எங்கு முதலில் கண்ணகி அம்மனுக்கு கோவில் தோன்றியதென்பதற்கு தக்க ஆதாரங்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

இன்றும் இளவாலை, மண்டதீவு, பளை, வீமன்காமம், தெல்லிப்பளை, மாசியப்பிட்டி, கச்சாய், பருத்தித்துறை, புலோலி, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள கோவில்கள் மூலம் யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்த பல கண்ணகி அம்மன் கோவில்கள் நாளடைவில் நாக அம்பாள், இராஜேஸ்வரி அம்பாள், முத்துமாரி அம்பாள் என்ற பெயரில் வணங்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

### காரணப்பெயர்

முல்லைத்தீவில் உள்ள பிரசித்தம்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் கஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட பத்தாவது கண்ணகி ஆலயம் என்பது ஒரு சாராருடைய கருத்தாகும். கண்ணகி மதுரையை எரித்த பின்னர் ஈழத்தின் பல இடங்களுக்கும் சென்று பத்தாவது தலமான வற்றாப்பளையை அடைந்தாள் என்பது இன்னொரு சாராருடைய கருத்தாகும்.

'பளை' எனறால் தங்குமிடம் என பொருள் கொள்ள முடியும். எது எப்படி என்றாலும் கண்ணகியம்மாள் வந்து அமர்ந்த இடமாகிய பத்தாம்பளை என்பது மருவி பேச்சுவழக்கில் வற்றாப்பளையாயிற்று என்பது வரலாறு ஆகும்.

### அமைவிடம்

முல்லைத்தீவு பிரதான வீதியில் இருந்து கிட்டத்தட்ட 3 கிலோ மீற்றர் தூரம் உள்ளே நந்திக்கடல் அருகே அழகிய திருக்கோவிலில் இருந்து தம் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள் 'வற்றாப்பளை கண்ணகி அம்மன்' என்பது பலருடைய நம்பிக்கையாகும். மூலமூர்த்தியாக கண்ணகியம்பாள் வீற்றிருக்க, விநாயகர், நாகதம்பிரான் முதலான மூர்த்திகள் பரிவாரத்தில் உள்ளனர்.

### செவிவழியான மரபுக்கதை

முன்னொரு காலத்தில் முல்லைத்தீவு நந்திக்கடல் ஓரத்தில் உள்ள பரந்த நிலப்பரப்பில் சில ஆட்டிடையர் குல சிறுவர்கள் ஒரு முதுமை நிரம்பிய அம்மையைக் கண்டனர். அந்த அம்மையார் தனக்குத் தங்குவதற்கு ஒரு குடிசை வேண்டும் என இடையர் குல சிறுவர்களிடம் கேட்டதற்கு இணங்க அவர்கள் ஒரு சிறு குடில் அமைத்துக் கொடுத்ததுடன் பொங்கலும் செய்து கொடுத்தார்கள். மாலை மயங்கும் பொழுதில் அச்சிறுவர்கள் குடிசைக்குள் விளக்கு எரிப்பதற்கு எண்ணெய் இல்லையே என மனம் வருந்த கடல் நீரில் திரி வைத்து விளக்கு எரியுங்கள் என்று அம்மூதாட்டி கூறினார். இதன் காரணத்தாலே கடல் நீர் எடுத்து அதன் மூலம் விளக்கு எரிக்கும் பாரம்பரியம் அன்று தொடங்கியது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

அது மாத்திரம் அல்லாமல் அம்மூதாட்டி அந்த சிறுவர்களை பார்த்து தனக்குப் பேன் பார்த்துவிடும்படி கூறினார். அவர் தலை முடியை வகுந்த சிறுவர்கள் தலையெல்லாம் கண்களாக இருக்கக்கண்டு பயந்து அலற 'நான் ஒரு வைகாசித்திங்கள் வருவேன்' என்று கூறி அம்மூதாட்டி மறைந்தார். சிறுவர்கள் ஊருக்குள் ஓடிச்சென்று ஊர் மக்களிடம் விடயத்தைச்சொல்ல ஊரே திரண்டுவந்து வணங்கி கண்ணகி அம்மன் கோவிலைக் கட்டினார்கள் என்பது செவி வழிக் கதையாகும்.

### வைகாசி விசாகப்பொங்கல்

கண்ணகி அம்மன் அங்கு தரித்த தினமான வைகாசியில் பௌர்ணமி தினத்தன்று அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபடுவார்கள். ஆதிகாலத்தில் அம்மன் காட்சி கொடுத்த ஆடு மேய்க்கும் பரம்பரையில் வந்தவர்கள் இன்றும் இக்கோவில் பூசை வழிபாடுகளில் பிரதான பங்கு வகிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிப் பொங்கலுக்கு ஒரு கிழமைக்கு முன்னர் கோவில் பூசகர், கோவில் நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் ஆகியோர் ஒரு பித்தளைக் குடத்தை எடுத்துக் கொண்டு மேளதாளத்துடன் சிலாவத்தை என்னும் கடற்கரைக்குச் சென்று குடத்தில் தண்ணீர் எடுப்பது காலங்காலமாக கைக்கொள்ளப்படும் மரபாகும். கடல் அலை பொங்கி வரும்போது குடத்தை சரித்து நீரை ஒரே தடவையில் மொண்டு அள்ள வேண்டும். பின்னர் அக்குடத்து நீரை முள்ளியவளையில் உள்ள 'காத்த விநாயகர்' ஆலயத்தில் வைப்பார்கள்.

வைகாசி பொங்கல் தினத்தன்று இக்குடத்து நீரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுக்கு கொண்டு சென்று மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் அம்மனுக்கு பயபக்தியோடு விளக்கு ஏற்றி வழிபடுவார்கள்.

வைகாசி தினத்தன்று பொங்கல் நடுச்சாமம் 12 மணிக்கு ஆரம்பமாகும். பிராமணர்கள் மந்திரங்களை ஒலிக்க கட்டாடி உடையார் (நூல் கட்டி ஆடுபவர் - கட்டாடி உடையார்) என வழங்கப்படும் ஒருவர் பொங்கல் பானையை மடியில் வைத்து அதை வழுந்து சுற்றி மாவிலைகளையும் கட்டி அப்பானையை அடுப்பில் வைப்பார்.

அந்த சந்தர்ப்பதில் அக்கட்டாடி உடையாருக்கு தெய்வ சக்தியின் அருளாலே 'உரு' வருவதுடன் அடியவர்கள் கொடுக்கும் அரிசியை ஒவ்வொரு திசைக்குமாக வானத்தை நோக்கி உயர வீசுவார். அவர் அவ்வாறு அரிசியை வீசுவது அம்மனின் தோழிகளைச் சென்றடையும் எனவும் நம்பப்படுவதுடன் எறிந்த அரிசி மண்ணிலோ அல்லது பக்தர்களின் தலையிலோ விழுவதில்லை. இதுவும் அம்மனின் அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

### தல விருட்சம்

திருக்குறளில் மென்மைக்கு உதாரணமாகக் கூறப்படும் மலர் அனிச்சம் மலராகும். வற்றாப்பளை அம்மன் கோவில் மூலஸ்தானத்தின் அருகில் அனிச்ச மரம் என்று ஒரு மரம் உண்டு. அந்த மரத்துக்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் ஒரு அதிகாரி 'உங்கள் அம்மனுக்கு அற்புதம் செய்ய முடியுமா?' என்று பரிகாசம் செய்தாராம். ஒரு முறை அவ்வதிகாரி அகம்பாவத்துடன் குதிரையில் கோவிலைத் தாண்டி செல்லும்போது இந்த அனிச்சம் மரம் பயங்கரமாக குரைத்ததுடன் அனிச்சம் காய்கள் பயங்கர காற்றுடன் அந்த அதிகாரி மேலே வீசி எறியப்பட்டனவாம். அந்த போர்த்துக்கேய அதிகாரி இந்த தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தரையில் விழுந்தாராம். இதற்கு பிறகு அந்த அனிச்சம் மரம் இன்று வரையில் பூப்பதும் இல்லையாம். காய்ப்பதும் இல்லையாம். இதுவும் அம்பாளின் அற்புதமாக கருதப்படுகிறது.

### வழிபாட்டு நம்பிக்கை

பத்தினித் தெய்வமான கண்ணகியின் காற்சிலம்பிற்கு சின்னம்மை, பெரியம்மை, சின்னமுத்து, கூவக்கட்டு, குக்கல் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் அதிசயமான சக்தியுண்டு என்பது மக்களின் பொதுவான நம்பிக்கையாகும். அதற்காக கண்ணகி அம்மன் வழிபாட்டு முறையில் மரபு வழியாக கோவில்களில் காவடி, பால் காவடி, பறவைக்காவடி, தீ மிதித்தல், கற்பூரச்சட்டி போன்ற நேர்த்தி முறைகள் மக்களால் நம்பிக்கையுடன் காலங்காலமாக மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பத்தினித் தெய்வமான கண்ணகி அம்மன் தனது பத்தாம் பளையான வற்றாப்பளையில் இருந்துகொண்டு தன்னை பக்தியுடன் வழிபடும் அடியவர்களுக்கு சிற்றாடை இடை உடுத்தி சின்னஞ்சிறு பெண்போல காட்சி தருகிறாள்.

-உமா பிரகாஷ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'இலக்கியம் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும்'

**பிரபல எழுத்தாளர் ப. ஆப்டீன்**

''என் படைப்பிலக்கிய முயற்சிக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியவர் 'நந்தி' அவர்கள். அவர் தந்த ஊக்குவிப்பு எனது மனதில் சுடர் விட்டுக் கொண்டிருந்த இலக்கிய ஆர்வத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தையும் புதியதொரு சமூகப் பார்வையையும் தந்தது'' என்று நன்றியுடன் நினைவு கூரியவர் நாவலப்பிட்டி தந்த பிரபல எழுத்தாளர் ப.ஆப்டீன்.

நிறையவே சிறுகதைகளையும், நாவல் ஒன்றையும் படைத்தவர். சிறுகதைகளுக்கு பரிசுகளையும் பெற்றிருக்கிறார். 1960 களில் எழுத ஆரம்பித்த ஆப்டீன் அவர்கள் தொடர்ந்தும் எழுதுபவராகவே இருக்கிறார்.

'இரவின் இராகங்கள்' என்ற அவரது சிறுகதைத் தொகுப்பு நூல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக 1987இல் வெளியானது. இந் நூல் தமிழ்நாடு, என். சி. பி. எச். சில் மறுபதிப்பும் கண்டது. 'நாம் பயணித்த புகைவண்டி' என்னும் சிறுகதைத் தொகுப்பு 2003 இல் வெளியாகியது. 1999 இல் 'கருக் கொண்ட மேகங்கள்' என்ற நாவல் வெளிவந்தது. இந்த நாவல் யாழ். இலக்கிய வட்டம் இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினைப் பெற்றது. 'மலையூற்றுக்கள்' என்ற தலைப்பில் குறுநாவல் ஒன்றும் படைத்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளிலும் இவரது மூன்று சிறுகதைகள் பரிசில்களைப் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆற்றல் மிக்க எழுத்தாளரை சந்தித்த போது, அவரது ஆரம்பகால எழுத்து முயற்சி, இலக்கிய சிந்தனைகளை அறிய முடிந்தது.

கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் 6ம் வகுப்பில் கல்வி கற்கும்வேளை, தமது ஆசிரியர் சி. சிவப்பிரகாசம், சிறுகதை எழுதத் தூண்டியதும் தாம் எழுதிய சிறுகதையை அவர் நன்று எனப் பாராட்டியமை தமக்குப் பெரும் தூண்டுதலாக இருந்தது எனவும் அவர் குறிப்பிடுகிறார். ''கம்பளை ஸாஹிராவை விட்டு விலகி நாவலப்பிட்டி புனித மேரிஸ் கல்லூரியில் கல்வி கற்கும் நிலை ஏற்பட்டது.

எனது வீடு அமரர் நா. முத்தையாவின் ஆத்மஜோதி நிலையத்துக்கு அருகில் அமைந்திருந்ததும் நான் செய்த அதிர்ஷ்டம்தான். அவர் மூலமாக தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளைச் சந்திக்கவும் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் அவர்களது உரைகளைக் கேட்கவும் கிடைத்த சந்தர்ப்பங்கள் என்னைப் பொறுத்தவரை அருமையானவை. இவை என் சிந்தனையைத் தூண்டின. அத்தோடு பாடசாலை மட்ட, வட்டார, மாகாண மட்டக் கட்டுரைப் போட்டியிலும் பரிசுகள் கிடைத்தமை எழுத்தார்வத்தைத் தூண்டியது.

எனவே சிறுகதைகளை எழுதும் முயற்சிகளில் ஈடுபட்டேன். நாவலப்பிட்டி இளம் எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டமை, எழுத்தாளர் பலரது நட்புக்கு வித்திட்டது. ஆக்க இலக்கியத் துறையில் ஒரு பக்குவமும் தெளிவானதோர் கண்ணோட்டமும் ஏற்பட்டது. மலையக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலைகள் எனக்குள் ஒரு பாதிப்பை ஏற்படுத்தின. அதையிட்டு நான் ஆழ்ந்து சிந்தித்தேன். எழுத்தாளர் நந்தியின் நட்பு எனக்குப் பெரும் பயன் அளித்தது.

**தேடல் முயற்சி, ஆய்வு முயற்சி எல்லாம் இன்றைய காலகட்டத்தில் மிகவும் சுருங்கி விட்டன. மொழி வளம் தேய்ந்து விட்டதன் காரணமாக முந்நூறு சொற்களைக் கொண்ட ஒரு கட்டுரையைக் கூட எழுத மாணவர்கள் சிரமப்படுகின்றார்கள். ஆகவே மாணவர்களுக்கு பொதுவான வாசிப்புப் பழக்கம் அவசியமானது.**

பின்னர் நான் தொழில் ரீதியாகச் செல்லும் இடங்களில் உழைக்கும் மக்களது பிரச்சினைகள் என் கருத்தைக் கவர்ந்தன. அவையே என் புனை கதைகளுக்குத் தொனிப்பொருளாயின'' என்றார்.

தமது முதல் சிறுகதை அச்சில் வெளிவருவதற்கு உதவிய பத்திரிகை ஆசிரியர் அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களையும் ப.ஆப்டீன் நன்றியோடு நினைவு கூருகிறார். ''எனது முதலாவது சிறுகதை 1962 ஆம் ஆண்டு எஸ்.டி. சிவநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தமிழின்பம்' இதழில் வெளிவந்தது. அவர் எழுதுவதற்கு தந்த ஊக்கமும் உற்சாகமும் அபரிமிதமானது'' எனக் குறிப்பிடுகின்றார். இந்தக் கதையை ''புதுப்பட்டி கிராமத்துக்கு கடைசி டிக்கட்'' என்ற தலைப்பில் பின்னர் ஞாயிறு வீரகேசரி பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருமானத்திற்காகவோ, பொழுது போக்கிற்காகவோ அல்லாமல் ஒரு புனிதமான இலட்சிய மனோபாவத்துடன் எழுத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்பவர்களே ஈழத்து எழுத்தாளர்கள்.**

*ஆப்டீன் அவர்களிடம் அவரது 'கருக்கொண்ட மேகங்கள்' நாவலைப் பற்றிக் கேட்டபோது, ''நான் தொழில் தேடி பல முயற்சிகளை மேற்கொண்ட பின்னர் அநுராதபுர மாவட்டத்தில், கஷ்டப் பிரதேசப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக நியமனம் கிடைத்தது. ஐந்து வருட காலம் இந்த மாவட்டத்திலே சுற்றிச் சுற்றிப் பணி புரியும் போது மூவின மக்களோடும் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கால ஓட்டத்தில் இவர்களது பிரச்சினைகள் என் மனதைப் பாதித்தன. இவற்றைப் பகைப்புலமாக வைத்தே 'கருக்கொண்ட மேகங்கள்' என்ற எனது முதலாவது நாவலை உருவாக்கினேன். இலக்கியத்தினூடாக கணிசமான அளவு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்'' என அவர் கூறினார்.*

*2002 ஆம் ஆண்டு இவருக்கு கலாசார அமைச்சு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது. 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22, 23, 24 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ப. ஆப்டீனும் கௌரவிக்கப்பட்டார். இவரிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:*

**''இலங்கையின் சிறுகதை வளர்ச்சி பற்றி குறிப்பாக முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறித்து கூற முடியுமா...?''**

*பொதுவாக நம் நாட்டில் சிறுகதை இலக்கியம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. எமது முன்னோடி எழுத்தாளர்கள் தரமான, தனித்துவமான கதைகளைப் படைத்து வெற்றி பெற்றுள்ளனர்.*

*அந்த முன்னோடி எழுத்தாளர்கள் தொடக்கம் இன்றைய இளம் தலைமுறையினர் வரைக்கும் இலட்சியத்திற்காகவும் கொள்கைக்காகவுமே எழுதுகின்றனர்.*

*வருமானத்திற்காகவோ பொழுது போக்கிற்காகவோ அல்லாமல் ஒரு புனிதமான இலட்சிய மனோபாவத்துடன் எழுத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்பவர்களே ஈழத்து எழுத்தாளர்கள். அவர்களுடைய எழுத்துக்களில் மண் வாசனையை நுகரலாம். வாசகனுக்கு ஒரு காத்திரமான செய்தி பதிவு செய்யப்பட்டு, காலகட்டங்களை பிரதிபலிப்பனவாகவும் அவை அமையும்.*

*இன்னும் சொல்லப் போனால் தேசிய ஒருமைப்பாட்டு இலக்கியம், இனஒருமைப்பாட்டு இலக்கியம், மக்கள் இலக்கியம் .... இப்படியாக எமது நாட்டின் எழுத்துத் துறையின் தனிச் சிறப்பு அது!*

*'நாட்டின் முஸ்லிம் எழுத்தாளர்கள்' எனத் தனித்து எடுத்துப் பார்த்தாலும் தேசிய ஒருமைப்பாட்டு, இன ஒருமைப்பாட்டு இலட்சியங்களும் குறிக்கோள்களும்தான் அவர்களுடைய எழுத்துக்களில் பொதிந்து கிடக்கின்றன. இதனால் இனம், மதம், கலாசாரம் போன்றவற்றின் மீது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டி, பிரதேசத்தின் தனித்துவங்களைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களைப் படைப்பவர்களாகத் தோன்றுகின்றனர்.*


**நீங்கள் ஓர் ஆசிரியர். படைப்பிலக்கியத்துடன் கட்டுரை வரைவதிலும் மிக நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறீர்கள். அந்தக் கட்டுரைகள் எந்தமொழியில் ஆனவை? அவை மாணவர்களுக்கு எவ்விதம் பயன்படக் கூடியதாக உள்ளன?**

*நீண்ட காலமாக அவ்வப்போது தேவை நிமித்தம், தமிழ் மொழி மூலமே கட்டுரைகள் எழுதியுள்ளேன். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்துள்ளேன். இலக்கியவாதிகளை எழுத்துலகிற்கு ஞாபகப்படுத்தும் கட்டுரைகள், நூல் அறிமுகக் கட்டுரைகள், இலக்கியம் சார்ந்த கண்ணோட்டங்கள், வளரும் எழுத்தாளர்களின் திறமைகளை அறிமுகப்படுத்தும் கட்டுரைகள், நேர்காணல்கள், நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய கருத்துரைகள் சில சஞ்சிகைகளின் அட்டைப்பட அறிமுகக் கட்டுரைகள், ஓரிரு இலக்கிய நூல்களுக்கு அணிந்துரைகள்.. என்று எனது கட்டுரை முயற்சிகள் தொடர்கின்றன.*

*அண்மையில் ''விண்ணியல் விஞ்ஞானத்தில் ஓர் இலட்சியத் தாரகை...'' என்ற தலைப்பில் இந்திய விண்வெளி விஞ்ஞானி கல்பனா சாவ்லாவைப் பற்றி, ஒரு தொடர் கட்டுரை எழுதும் வாய்ப்புக் கிட்டியது. வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் விண்வெளி ஆய்வை மேற்கொள்வதற்காக கல்பனா சாவ்லா பட்டகஷ்ட நஷ்டங்களையும் போராட்டங்களையும் மாணவர்கள் அறிய வேண்டும் என்னும் நோக்கத்திற்காகவே இக்கட்டுரைத் தொடரை எழுதியிருந்தேன்.*

**''மலையூற்றுக்கள்'' என்னும் தலைப்பில் ஒரு குறுநாவலையும் படைத்திருக்கிறீர்கள். இந்த நாவல் எதைப் பற்றிக் கூறுகிறது? அதன் செய்தி என்ன?**

*சுருக்கமாகச் சொல்லப் போனால் பெருந்தோட்ட கூலித் தொழிலாளர்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளை வெளிக்கொணரும் குறுநாவல் இது. பீற்றர் கங்காணியார் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஓர் உண்மை பாத்திரம். நேர்மையான முறையில் ஒரு காதல் கல்யாணத்தை நிறைவேற்றி வைத்தவர். காலப் போக்கில் அந்த இளம் பெண்ணின் முதற் பிரசவம், அவள் கொழுந்து ஆய்ந்து கொண்டிருக்கும்போது மானாக் காட்டில் இடம்பெற்றது. அவள்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து விடுகிறாள். கொஞ்ச காலத்திற்கு முன் அவள் கணவனும் விபத்தில் உயிர் நீத்தவன்.


அநாதையாக விடப்பட்ட குழந்தையை கொஞ்ச நாட்கள் வளர்த்து, ஒரு கத்தோலிக்க அநாதை இல்லத்தில் சேர்த்து விடுகிறான் பீற்றர். குழந்தை வளர்ந்து கல்வி கற்று, ஒரு நல்ல பிரஜையாகத் திகழ்கின்றது. காலஓட்டத்தில் தனது சுயசரிதை குறித்து துருவி ஆராய்கிறது. பிறகு அவளும் வாழ்க்கையில் ஒரு இலட்சியத் திருப்பத்தை ஏற்படுத்தி, வளரும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குத் தொண்டு செய்யத் தீர்மானித்தாள். தானும் ஒரு கன்னியாஸ்திரியாகப் பயிற்சி பெற்றுக் கொண்டாள். அதிர்ஷ்டவசமாக அவளுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்த போது மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். தனது ஆசிரிய நியமனத்தை மானாக்காடு தோட்டப் பாடசாலைக்கே மாற்றம் பெற்றுக் கொண்டு ஆசிரியப் பணியை ஆரம்பித்தாள்.

**இளம் எழுத்தாளர்கள், சிறுகதை, கவிதை எழுதிய வேகத்துடன் சஞ்சிகைகளுக்கோ பத்திரிகைகளுக்கோ அனுப்பி விடாமல், பல தடவைகள் திருப்பி எழுதி, மெருகேற்ற வேண்டும். பின்னர் நல்ல படைப்பாளியிடம் காட்டி செம்மைப்படுத்திக் கொள்வது நல்லது. படைப்பின் தரமும் உயரும்.**

''அனுபவமும் ஆற்றலும் மிக்க மூத்த எழுத்தாளராகிய தாங்கள், வளரும் எழுத்தாளர்களுக்கு வழங்கக் கூடிய அறிவுரை என்ன?''


வளரும் இளம் எழுத்தாளர்கள், ஒரு சிறுகதையையோ, கவிதையையோ எழுதிய வேகத்துடன் சஞ்சிகைகளுக்கோ பத்திரிகைகளுக்கோ அனுப்பி விடாமல், ஓரிரு வாரங்கள் ஊறப் போட்டு பின்னர் திருப்பி எழுதி, மெருகேற்ற வேண்டும். பின்னர் ஒரு நல்ல படைப்பாளியிடம் காட்டி செம்மைப்படுத்திக் கொள்வது நல்லது. படைப்பின் தரமும் உயரும்.

தாம் விரும்பி எடுத்துக் கொண்ட இலக்கியத் துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். எடுத்துக் கொண்ட துறையில் ஒரு தெளிவான கண்ணோட்டம் இருந்தாக வேண்டும்.




அடிக்கடி இலக்கிய நண்பர்கள் சந்திப்பை ஏற்படுத்தி இலக்கியம் தொடர்பான விடயங்கள் குறித்து சம்பாசிக்க வேண்டும். தமிழ் மற்றும் பிற மொழிகளில் வெளியாகிய ஆக்கங்கள் தொடர்பான விமர்சனக் கருத்தும், பரிமாறல்களும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்.

''இளம் மட்டத்தினர் மத்தியில் இலக்கியம் தொடர்பான வாசிப்பை ஊக்கப்படுத்துவது எவ்வாறு?''




இளைய தலைமுறை சார்ந்தோர் வாசிப்புப் பழக்கத்தில் பின்தங்கியே காணப்படுகின்றனர். கல்வி கற்கும் பாடசாலைகள் மற்றும் அங்குள்ள நூல் நிலையங்கள் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க என்ன செய்கின்றன? இது கேள்விக் குறியாகவே இன்னும் தொக்கி நிற்கிறது.

பாடசாலையில் வகுப்பறைக் கல்வி முடிந்ததும், 'ரியூஷன்' வகுப்புகளுக்குச் செல்லும் கட்டாயம், விடுமுறை தினங்கள் என அவ்வப்போது கிடைக்கும் ஓய்வு நேரங்களில் ஏராளமான பொழுதுபோக்குகள்... அவற்றுள் தொலைக்காட்சி பார்ப்பது முக்கிய இடத்தை வகிக்கிறது என்பது கண்கூடு.

இலக்கியம் சார்ந்த நல்ல நூல்களை படித்து கிரகிக்க வேண்டும் என்னும் நோக்கமும் ஆர்வமும் சிறிதளவேனும் இல்லை. அப்படியே ஒரு தேவை ஏற்பட்டாலும் கணனியின் விசையை அழுத்தினால் விடயங்கள் வரிசையாக வந்து குவிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

தேடல் முயற்சி, ஆய்வு முயற்சி எல்லாம் மிகவும் சுருங்கி விட்டன. மொழி வளம் தேய்ந்து விட்டதன் காரணமாக முந்நூறு சொற்களைக் கொண்ட ஒரு கட்டுரையை எழுத மாணவர்கள் சிரமப்படுகின்றனர். இலக்கியத் தேடல்கள் எல்லாம் இலகுவான முறையில் கிடைக்க வழிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இலக்கியங்களை ஊன்றிப் படித்து, சுவைத்து, அனுபவிக்கக் கூடிய அந்த இலக்கிய ரசனையை எப்படி எதிர்பார்க்க முடியும். மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்த மொழிப்பற்றும் இலக்கிய பற்றும் என்னவாயிற்று?

மாணவர்கள் அல்லது இலக்கிய ஆர்வலர்கள் பாடசாலை நூல் நிலையங்களை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொது நூலகங்களில் அங்கத்தவராக இணைந்து வாசிப்புப் பழக்கத்தை வளம்படுத்த வேண்டும்.

இலக்கிய நண்பர்கள் ஒன்றிணைந்து நவீன இலக்கியம் சார்ந்த நூல்களையும் சஞ்சிகைகளையும் வாங்கிப் பரிமாறிக் கொண்டு வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கலாம்.


பாடசாலைகளில் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கத் திட்டங்கள் வகுத்து செயற்படலாம்.

**நேர்முகம் : அன்னலட்சுமி இராஜதுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகின் உச்சியில் ஒரு முத்து

# பொற்ரலா மாளிகை

உலகத்தின் முகடு என வர்ணிக்கப்படும் திபெத் நாட்டின் தனிச்சிறப்பும், ஈர்ப்பு ஆற்றல் வாய்ந்த நகரமாகவும் விளங்கும் லாசா நகரில், பிரசித்தி பெற்ற இடமாக விளங்குவது பொற்ரலா மாளிகை (Potala Palace) ஆகும். கடல் மட்டத்திலிருந்து 3700 மீற்றர் உயரமான ஹெங்சான் மலை மீது அமைந்திருக்கும் இம்மாளிகை, 1300 ஆண்டுகால பண்பாட்டுச் சிதிலங்கள் மற்றும் மதப் பாரம்பரியம் ஆகியவற்றை உள்ளடக்கி ஈர்ப்பு சக்தியின் ஊற்றாக விளங்குகின்றது.



ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சொங்ஸ்தான் கம்போ என்ற மன்னன் சீன வம்சத்தின் இளவரசி வென்செங் உடன் திருமணம் செய்வதற்காகப் பொற்ரலா மாளிகையைக் கட்டினான். மலைச் சரிவில் கட்டப்பட்ட இக்கம்பீரமான கட்டடம், உலக உச்சியின் முத்து என அழைக்கப்படுகின்றது. திபெத் கட்டடக்கலையின் தலைசிறந்த சின்னம் இது. சீனாவின் புகழ்பெற்ற பண்டைக் காலக் கட்டடங்களில் ஒன்றாகவும் இது திகழ்கின்றது.

மலை மீது அமைந்துள்ள இந்த அழகானதும் பழைமை மிக்கதுமான மாளிகை பல நூற்றாண்டுக் காலமாக திபெத் நாட்டின் மதத்தலைவர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் இருந்த தலாய் லாமாக்கள் வாசம் செய்யும் மாளிகையாக விளங்கி வந்துள்ளது. அத்துடன் இங்கு அரச நிர்வாகப் பீடங்கள் மற்றும் வரலாற்றுப் பழைமை வாய்ந்த உருவச்சிலைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



கண்கவர் சுவர் ஓவியங்கள் மற்றும் பல அரிய பழைமை வாய்ந்த பொருட்கள் இந்த மாளிகையில் அடங்கியிருக்கின்றன.


இம்மாளிகையின் சரித்திரச் சிறப்பு, பழைமைச் சிறப்பு, கட்டடச் சிறப்பு, கலாசாரச் சிறப்பு, இயற்கை லாவண்யச் சூழல் போன்ற பல்வேறு காரணங்களையும் கருத்தில் கொண்டு யுனெஸ்கோ, இம்மாளிகையை பாதுகாக்கப்பட வேண்டிய உலக புராதன இடமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

போற்ரலா மாளிகையானது மிகவும் பெரியது. அதைச் சுற்றிலும் அரண்களாக மூன்று நகரச் சுவர்கள் கட்டப்பட்டன. உள்ளே 909 அறைகள் உள்ளன. திபெத் நீண்ட காலப் போரில் சிக்கியதால் போற்ரலா மாளிகை படிப்படியாக பயன்படாமல் இருந்தது.

கி.பி. 1645 ஆம் ஆண்டில் ஐந்தாவது தலாய் லாமாவின் கட்டளைக்கிணங்க, போற்ரலா மாளிகையின் சீரமைப்புப் பணிகள் தொடங்கின. அதன் முக்கிய கட்டுமானப் பணி சுமார் 50 ஆண்டு காலம் நீடித்தது. பின்னர், படிப்படியாக விரிவாக்கப்படுவதற்குச் சுமார் 300 ஆண்டுகள் சென்றன. பதின்மூன்றாவது தலாய் லாமாவின் காலப்பகுதியில்தான் தற்போதுள்ள பிரமாண்டத்தையும் நிர்மாணத்தையும் அடைந்தது. போற்ரலா மாளிக்கை 117 மீட்டர் உயரத்தையும் 360 மீற்றர் அகலத்தையும் கொண்டு 1,30,000 சதுர மீற்றர்கள் (அண்ணளவாக 32 ஏக்கர்கள்) நிலப்பகுதியை உள்ளடக்கி அமைந்துள்ளது. இக்கட்டடத்தின் கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய மூலப் பொருட்கள் கல்லும் மரக்குற்றிகளும் ஆகும். இம்மாளிகையின் சுவர்களனைத்தும் கருங்கற்களால் கட்டப்பட்டன. மிகவும் தடிப்பமான இடத்தின் அகலம் 05 மீட்டர். அத்துடன், அதிக மாடிகளுடன் கூடிய இப்பண்டைக் காலக் கட்டடத்தை இடி தாக்காமல் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனால், கடந்த பல நூறு ஆண்டுகளில் இடி இடித்த போதிலும், நில நடுக்கம் நிகழ்ந்த போதிலும் போற்ரலா மாளிகை பாதிக்கப்படவில்லை.

போற்ரலா மாளிக்கையின் கிழக்கு பகுதியில் தலாய் லாமா வசிக்கும் மாளிகை அமைந்துள்ளது. அவருடைய படுக்கை அறை மிகவும் உயரமான இடத்தில், தினம்தோறும் சூரிய ஒளி படும் வகையில் இருக்கின்றது. கட்டிடத்தின் உள்ளே பெரிய தூண்கள், தராய்கள், உத்திரங்களை தாங்கி நிற்கின்றன. மேலே கூரைப் பகுதி, கீழே தரைப்பகுதி யாவும் மிக நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டிருப்பட்டுள்ளன. சபா மண்டபங்கள் மற்றும் அறைகளின் மத்தியில் விசாலமான ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் வெளிச்சம், சூரிய ஒளி, காற்று ஆகியன உட்புகக் கூடியதாக உள்ளன. குறுகிய நடை பாதைகளில் சூரிய வெளிச்சம் படக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் சூரிய ஒளி மாளிகை என்று இது அழைக்கப்படுகின்றது.

மேற்குப் பகுதியில் வெள்ளை மாளிகை அமைந்துள்ளது. ஏழு மாடிகளைக் கொண்ட இந்த மாளிகை 1645 நிர்மாணிக்கப்பட்டதாகும். கட்டிடம் சூரியன் மறையும் திசையை எதிர்நோக்கியவாறு உள்ளது. அத்துடன் சுவர்கள் அகலமாகவும் உறுதி வாய்ந்ததாகவும் கட்டப்பட்டுள்ளன. காற்றோட்டத்துக்கு பல குறுகிய துவாரங்கள் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. நான்காவது மாடியிலுள்ள பிரதான மண்டபம் இந்தக் கட்டடத்தொகுதியில் உள்ள மண்டபங்களில் மிகவும் பெரியதாகும். இது 717 சதுர மீற்றர்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் மிகமுக்கியமான அரசியல் மற்றும் சமய நிகழ்வுகள் நடைபெறும். இம் மண்டபம் சுமார் 6 மீட்டர் உயரமுடைய 48 பெரிய தூண்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாளிகையில் மரங்களில் செதுக்கப்பட்ட புத்தர் உருவச் சிலைகளும் சிங்கம், யானை உள்ளிட்ட பல்வகை விலங்குகளின் உருவச்சிலைகளும் அதிக அளவில் உள்ளன. ஏனைய தளங்களின் தூண்கள், சுவர்கள் யாவற்றிலும் செதுக்கல் வேலை, ஓவியங்கள் ஆகியவற்றின் மூலம் மிகச் சிறந்த கலைப் படைப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









இலங்கையில் இருந்து கொண்டு செல்லப்பட்ட சந்தன மரத்தில் உருவாக்கப்பட்ட அவலோகிதேஸ்வரவின் உருவச்சிலை ஏழாம் நூற்றாண்டில் மாளிகையை நிர்மாணித்த அரசனான கம்போவின் தியான பாதுகாவலராக விளங்குகின்றது. அத்துடன் மன்னன், மகாராணி, இளவரசன் மற்றும் அமைச்சர்களின் களி மண்ணிலான உருவச்சிலைகளும் காணப்படுகின்றன.

அத்துடன் வெள்ளி, பித்தளை, தங்கத்திலான ஏராளமான உருவச்சிலைகள் அங்குள்ளன. இந்த உலோகங்கள் இந்தியா, நேபாளம், சீனா ஆகிய நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டவை. திபெத்தியப் பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட உருவச்சிலைகளும் அங்குள்ளன.

ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த உருவச்சிலைகள் பின்னர், ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்ததுடன் அவர்களும் தத்தம் ஆட்சிக் காலத்தில் பெறுமதிமிக்க பொருட்களை வாங்கிச் சேர்த்திருக்கின்றனர். இவை திபெத்திய பாணி கலைத்துவ குணாம்சங்களையும் வேலைப்பாட்டு நேர்த்தியையும் கொண்டவையாகவும் விளங்குகின்றன. இவ்விதமாக அரிய வேலைப்பாடுகளுடன் கூடிய தங்க, வெள்ளி, பித்தளை உருவச்சிலைகள் பொறாலா மாளிகையின் வணக்க மண்டபங்களில் வழிபாட்டுக்குரிய உருவச் சிலைகளாக விளங்குகின்றன.

மத்திய பகுதியிலுள்ள சிவப்புமாளிகை புத்த மத அனுஸ்டான மண்டபமும் தலாய்லாமாக்களின் நினைவுச் சடங்குகளைக் கொண்ட கோபுரங்களும் காணப்படுகின்றன. மேலும், பல கட்டடங்கள் வேறுபட்ட காலங்களில் கட்டப்பட்ட போதிலும், மலை மற்றும் நில அமைப்பிற்கு ஏற்ப உரிய முறையில் கட்டப்பட்டதால் அவை மிகவும் உறுதியுடன், கம்பீரமாகக் காணப்படுகின்றன.

இதில், ஐந்தாவது தலாய்லாமா ஞூஸாசியாசுவின் நினைவுக்கோபுரம் குறிப்பிடத்தக்கது. சுமார் 15 மீட்டர் உயரமுடைய இக்கோபுரத்தின் அடிப்பகுதி சதுர வடிவமுடையது. உச்சி வட்ட வடிவமானது. இது, மேல் பகுதி, நடுப்பகுதி மற்றும் கீழ்ப்பகுதிகளைக் கொண்டது. இக்கோபுரத்தின் நடுப்பகுதியில், நறு மணம் வீசும் பொருட்கள், செந்நிற மலர்கள் முதலியவற்றுடன், ஐந்தாவது தலாய்லாமாவின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் தங்கத் தகடுகளால் வேயப்பட்டுள்ளது. மொத்தம் 3724 கிலோகிராம் தங்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பல வகைப்பட்ட 15,000 க்கும் மேற்பட்ட மதிப்புமிக்க வைரங்கள், மாணிக்கங்கள் மற்றும் முத்து, பவழங்கள் ஆகியவை பதிக்கப்பட்டுள்ளன. கோபுரத்தில் புத்தமதக் கருவிகளும், பலி பாண்டங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டில் போற்லா மாளிகை கட்டப்பட்ட போதும் அதற்குப் பின்பு விரிவாக்கப்பட்ட போதும் திபெத் நாட்டின் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஓவியர்கள், நுட்பமான அழகான சுவர் ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். பெரிய மற்றும் சிறிய மண்டபங்கள் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் சுவர் ஓவியங்களைக் காணலாம். இந்த ஓவியங்கள் வெவ்வேறு கருப்பொருட்களைச் சித்திரிக்கின்றன. இவற்றில் வரலாற்று நாயகர்கள், வரலாற்றுக் கதைகள், புத்த மதக் கதைகள் ஆகியவற்றை எடுத்துக்கூறும் ஓவியங்களும், கட்டடக்கலை, பழக்க வழக்கம், பண்பாடு, உடல் பயிற்சி, பொழுதுபோக்கு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன. தவிர 17 ஆவது நூற்றாண்டுக்குப் பிந்திய சுமார் 10 ஆயிரம் ஓவியச் சுருள்களும் ஏராளமான கற் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், மண் சிற்பங்கள் உள்ளிட்ட கலைப்பொருட்களும் சில வரலாற்றுத் தொல் பொருட்களும் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன. அன்றி, திபெத் கம்பளி, புத்த மதப் பதாகை, பீங்கான், மணிக்கல் முதலிய திபெத் பாரம்பரிய கலைப் பொருட்கள் அதிக அளவில் உள்ளன. அவை உயர்ந்த கலை மதிப்புடையவை. இரும்பை உருக்குவது, ஓவியம், செதுக்கும் கலை ஆகியவை உலக புகழ்பெற்றவை. தொழில் நுட்ப வல்லுநர்களின் உயர் நிலைத் தொழில் நுட்பத்தையும், சிறந்த திபெத் இனக் கட்டக் கலையையும் இது வெளிப்படுத்தியுள்ளது. 1961 ஆம் ஆண்டு, சீன அரசு போற்ரலா மாளிகையை தேசிய தொல்பொருள் பாதுகாப்பு இடமாக பிரகடனப்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் இதனை சீரமைக்கும் பணியையும் செய்து வருகின்றது.

ஆதிகாலத்தில் புத்தரின் போதனைகளை உள்ளடக்கிய மத நூல்கள் பண்டைய இந்திய மொழிகளில் ஓலைச் சுவடிகளில் எழுதப் பெற்றன. இவை பல மொழி பெயர்ப்பாளர்களாலும் அறிஞர்களாலும் திபெத்துக்குக் கொண்டு வரப்பட்டன. ஐந்தாவது தலாய்லாமா இவற்றிற்கு கொடுத்த ஊக்கத்தின் பயனாக இவை சிறப்பாக எழுதப்பட்டு பொற்ரலா மாளிகையின் நூல் நிலையங்களில் இவை பாதுகாக்கப்படுகின்றன. இவை தவிர புத்தரின் போதனைகள் குறித்த நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் பேணப்படுகின்றன.

பண்டைய இந்தியாவில் புத்தர் பரிநிர்வாணம் அடைந்தபோது புத்தரின் ஞாபகச் சின்னங்களை வைப்பதற்கென ஒரு தூபி கட்டப்பட்டது. பின்னர் இந்தத் தூபி கட்டும் வழக்கம் படிப்படியாக திபெத் நாட்டுக்கும் பரவி பின்னர் புனித அவதாரங்களின் ஆத்மா அல்லது உள்ளத்தைக் கொண்டிருப்பது என தூபிகளை அமைப்பது மரபாகி விட்டது. சமாதானத்தைக் கொண்டு அசுர சக்திகளை நசுக்கவும் தூபிகள் கட்டப்பட்டன. பொற்ரலா மாளிகையில் ஐந்தாவது தலாய்லாமாவில் இருந்து பதின்மூன்றாவது தலாய்லாமா வரையான காலப்பகுதியில் எட்டு கோபுர தூபிகள் உள்ளன.

இந்த பண்டைக்கால மாளிகைக்கச் செல்வோர் இனம்புரியாத ஒரு ஈர்ப்புசக்தியால் கவரப்பட்டு, மனச்சாந்தி கிடைப்பதாக நம்புகின்றார்கள். இங்கு நாளொன்றுக்கு 2400 வரையிலான உல்லாசப்பிரயாணிகள் விஜயம் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- டினோஷன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பரதத்தின் புனிதத்தை நாம் பேண வேண்டும்"

நாட்டிய கலாசிகாமணி சுபாஷினி பத்மநாதன்

பரதநாட்டியம் ஆன்மிகத்துடன் இணைந்த ஒன்றாக விளங்குகின்றது. அந்தப் புனிதக் கலையை நடனக் கலைஞர்களாகிய நாம் பேணிக்காத்து அதனை நம் வருங்கால சந்ததியிடம் கையளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் எனத் தெரிவிப்பவர் நாட்டிய கலாசிகாமணி சுபாஷினி பத்மநாதன்.

விமலோதயா கலாசார பரதநாட்டிய கேந்திரா என்னும் நடனப் பள்ளியை 1991ஆம் ஆண்டு ஆரம்பித்து நடத்தி வருகின்ற இந்நடன ஆசிரியை கொழும்பு இந்திய கலாசார நிலையத்திலும் கடந்த 13 வருடங்களாக பரதநாட்டியத்தைக் கற்பித்து வருபவர்.

இவர் பரதக் கலைஞராகவும் பரதநாட்டிய ஆசிரியராகவும் மட்டுமன்றி பரதநாட்டியத்தில் பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதி வெளியிட்டிருப்பவர் என்பது விசேடமாகக் குறிப்பிடத் தக்கது. தவிரவும் இவரது பரதநாட்டியம் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகளும் மற்றும் பரதநாட்டியம் குறித்த அவதானிப்புகளும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகளாக பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இக்கலைஞரை நாம் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது பரதம் குறித்தும் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாட முடிந்தது.

முதலில் இவரது பரதநாட்டியத் துறை பிரவேசம் குறித்து கேட்டபோது அவர் தெரிவித்த விபரங்கள் இவை:

யாழ்ப்பாணம் எனது பிறந்த ஊர். எனக்கு இண்டரை வயதாக இருக்கும் போதே எனது தாயார் என்னை திரிபுரசுந்தரி யோகானந்தம் அவர்களது நடன வகுப்பில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார். காரணம் என் தாயாருக்கு அக்கலையில் இருந்த ஆர்வம் தான். அந்த ஆர்வம் என்னையும் அதில் ஈடுபாடு கொள்ள வைத்தது. பாடசாலைக்குப் போகுமுன்னரே நடன வகுப்புக்குப் போய் வந்தேன்.

சுண்டுக்குளி பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வி கற்ற நான் பின் இந்தியா சென்று பஞ்சாப் அரசினர் பெண்கள் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். அதே காலப்பகுதியில் புகழ்பெற்ற நடன ஆசிரியர் வழுவூர் இராமையா பிள்ளையின், வலுவூரார் கலாசார பரதநாட்டிய நிலையத்தில் ஏழு வருடங்கள் குருகுலத்தில் தங்கி நாட்டியம் பயின்று டிப்ளோமாப் பட்டம் பெற்றேன். 'நாட்டிய கலாசிகாமணி' என்ற பட்டத்தையும் எனது குரு எனக்கு வழங்கினார்.

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அரசியல் விஞ்ஞானம் கற்று எம்.ஏ. பட்டம் பெற்றதுடன் வழுவூராரின் நடன நிலையத்தில் இருந்து நடன நிகழ்ச்சியையும் கற்பித்தலையும் செய்தேன்.

சட்டம் கற்க வேண்டும் என்ற விருப்பத்தில் நாடு திரும்பினேன். எனினும் நாட்டின் ஸ்திரமற்ற சூழ்நிலை காரணமாக அதனைக் கற்க முடியவில்லை. எனவே, 1991ஆம் ஆண்டு எனது நடனப் பள்ளியை நிறுவி மாணவர்களுக்கு கற்பிக்க ஆரம்பித்தேன்.

உங்கள் கற்பித்தல் அனுபவம் எப்படி என்ற வினாவுக்கு பதில் தரும்போது சுபாஷினி பின்கண்டவாறு கூறினார்.

1991ஆம் ஆண்டு விமலோதயாவை ஆரம்பித்து பிள்ளைகளுக்கு கற்பித்து வருகிறேன். இத்தனை வருடங்களில் ஆயிரம் பிள்ளைகள் என்னிடம் நடனம் பயின்றிருக்கிறார்கள். உண்மையில் இது பெரும் செலவுக்குரிய ஒரு வேலைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிள்ளைகளும் அரங்கேற்றம் செய்திருக்கிறார்கள் என்று கூற முடியாது. ஆனால், அவர்கள் ஆசிரியர்களாக கற்பிக்கக் கூடிய அளவுக்கு நான் அவர்களை பயிற்றுவித்து அனுப்புகிறேன்.

பெற்றோரின் ஆர்வம் காரணமாக பல பிள்ளைகள் பரதநாட்டியம் கற்று வருகிறார்கள். பலர் தமது ஆர்வத்தின் பேரில் வருகிறார்கள். பலருக்கு நடன அரங்கேற்றம் செய்து வைத்திருக்கிறேன். அரங்கேற்றம் ஒரு பெரும் செலவுக்குரிய விடயமாகத் தான் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

என்னிடம் பல சிங்களப் பிள்ளைகளும் கற்க வருகிறார்கள். பரதநாட்டியத்தை நன்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் அபரிமிதமாகவே இருக்கிறது. அத்துடன் அவர்களிடம் குரு பக்தியும் நிறையவே இருக்கிறது. தமிழ்ப் பாடல்களை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும் என நான் அவர்களிடம் வலியுறுத்துகிறேன். தமிழ் மாணவர்களை விடவும் இவர்கள் இக்கலையில் காட்டும் ஆர்வமும் பக்தியும் குறிப்பிட்டுக் கூறும் படியாகவே இருக்கிறது.

ஒரு மாணவி அரங்கேற்றம் செய்வதாக இருந்தால், அவருக்கு பன்னிரண்டு வகுப்புகளை தனியாகவே வைத்து சொல்லிக் கொடுத்துப் பயிற்றுவிக்கிறேன். பெற்றோர் வந்து வகுப்பில் இருப்பதைக் கூட நான் அனுமதிப்பதில்லை. மாணவியிடம் தனியான, சிறந்த கவனத்தை செலுத்த வேண்டும் என்பது எனது அவாவாகும்.

அதே போன்று கொழும்பு இந்திய கலாசார நிலையத்திலும் கடந்த 13 வருடங்களாகக் கற்பித்து வருகிறேன். சுமார் நூறு மாணவர்கள் இங்கு என்னிடம் கற்றிருக்கிறார்கள் எனக் கூறினார்.

பரதநாட்டியம் குறித்து சில ஆராய்ச்சி நூல்களையும் எழுதி வெளியிட்ட ஆசிரியராகவும் விளங்குகிறார்கள். தற்போதும் எழுதுகிறீர்கள். மேலும் இத்துறையில் படிப்பை மேற்கொண்டீர்களா? என்னென்ன நூல்களை எழுதி இருக்கிறீர்கள்? எனக் கேட்டதற்கு,

பரதநாட்டியத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, நூல் களை எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. எனவே, நான் ஆய்வுகளை மேற்கொண்டேன். எனக்கு இது விடயத்தில் உதவி ஏதும் கிடைக்கவில்லை. உதவக் கூடியவராக எவரும் இருக்கவில்லை. எனினும், நான் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் ஐந்து நூல்களை எழுதியிருக்கிறேன். நாட்டியக் கலை, அருங்கலை நாட்டியக்கலை, நுண்கலை நடனக் கலை, பைங்கலை பரதக்கலை, Bharatha Natyam a basic study ஆகிய நூல்களை எழுதியிருக்கிறேன்.



மேலும் Philosphy of Dance, ஆன்மீக ஆடற்கலை ஆகிய நூல்களை எழுத எண்ணம் கொண்டிருக்கிறேன்.

மற்றையது சமீப காலத்தில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பரதநாட்டியத்தில் மாஸ் ரேர்ஸ் டிப்ளோமா, மாஸ்ரேர்ஸ் இன் பைன் ஆர்ட்ஸ் பட்டங்களையும் பெற்றுள்ளேன் என்றும் குறிப்பிட்ட இந்நடன ஆசிரியை, பரத நாட்டியம் புனிதமான கலையாக வளர வேண்டும். அதற்கு நடன ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் சமூகமும் உட்பட கட்டுப்பாட்டுடன் கட்டாயமாக வழிநடத்த வேண்டும் என வலியுறுத்திக் கூறினார்.

இலங்கையில் நாட்டியக் கலை வளர்ச்சியும் அதன் பாங்கும் குறித்து இந்த நடன கலைஞரிடம் வினவிய போது அவர் மிக விபரமான ஒரு கருத்தை எம்முன் வைத்தார். அதனை பின்னர் தருகின்றோம்.

- நேர்காணல்: லக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்திய வம்சாவழி மக்கள் மகா சபை (GOPIO)யின் 10 வது மகாநாடு தென்னாப்பிரிக்க டர்பன் நகரில் இலங்கேணி ஹோட்டல் மண்டபத்தில் (Elangeni Hotel) மார்ச் மாதம் 28 - 31ம் திகதி வரை மிக சிறப்பாக நடைபெற்றது. நிறைவு நாள் நிகழ்ச்சியும் விருந்துபசாரமும் டர்பன் சர்வதேச மாகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாகாநாட்டிற்கு பல்வேறு நாடுகளிலிருந்து பேராளர்கள் வந்திருந்தனர். கலைஞர்கள் உட்பட இலங்கை குழுவில் 22 பேர் இருந்தனர்.

28ம் திகதி நடைபெற்ற தொடக்க விழாவில் பிரதம அதிதியாக முதுபெரும் தலைவர் கலாநிதி அகமட் கத்ராடா (Ahmada Mohammed Kathrada) வந்திருந்தார். இளவரசர் மங்காசுத்து புத்தலேசி (Mangosuthu Buthelezi) மற்றும் மத்திய அமைச்சர்களான ராதா கிருஷ்ண படையாச்சி, எப்ராஹிம் எப்ராஹிம்' டர்பன் நகர பிரதிமேயர் லோகி நாயுடு ஆகியோர் சமூகமளித்திருந்தனர். விசேட அதிதிகளாக மொரீசியஸ் நாட்டு அமைச்சர் அணில் பச்சு (Anil Bachoo) டர்பனுக்கான இந்திய தூதுவர் அணில் சரன் (Anil Saran) ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

தென்னாபிரிக்க கோபியோ அமைப்பின் தலைவர் பேராசிரியர் தசரத் செட்டி வரவேற்பு உரை நிகழ்த்த, சர்வதேச தலைவர்களான திரு.பி பி. தேவராஜ், திரு. மகேன் உச்சன்னா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சிறப்பான பல நிகழ்ச்சிகள் தொடக்க விழாவில் இடம் பெற்றன. இலங்கையைச் சேர்ந்த திரு. கணேசன் ஈஸ்வரன், திருமதி. மருதினி கணேசன் ஆகியோரின் புதல்விகள் திலகவதி தெய்வநாயகம், மீனாட்சி தெய்வநாயகம் சிறப்பான ஒரு பரதநாட்டிய நடன நாடகத்தை அரங்கேற்றினார்கள். மறுநாள் திங்கள் 29, செவ்வாய் 30, புதன் 31 ஆகிய நாட்களில் பல அறிஞர்கள் பங்குபற்றிய 20 செயலமர்வுகள் இடம் பெற்றன.

தொடக்க விழாவின் போதும் நிறைவு நாள் விருந்துபசாரத்தின் போதும் இலங்கை பேராளர்கள் சகல பேச்சாளர்களுக்கும் பொன்னாடை போர்த்தி நினைவு சின்னங்கள் வழங்கினர்.

**TIP TOP TRAVELS & TOURS**

ADJUSTABLE SEAT | AIR CONDITIONED | TV/DVD | DAILY SERVICE

**Tel: 011 236 1144 / 236 4999 / 077 3236354**

யாழ்ப்பாணத்தில் ஆசனப்பதிவுகளுக்கு

யாழ்ப்பாண தலைமையகம்:
**R.B. BOOKING CENTRE**
இல. 15, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்,
(மரக்கறி மார்க்கட் அருகாமையில்)
Tel: 021 2227016 /
021 2228356



கிளை:
**R.B. BOOKING CENTRE**
நவீன சந்தை கீழ்தளம்
(வைரவர் கோவில் அருகாமை)
077 9849690 /
077 6103236

Our Services:

**Tip Top Guest House Holiday Bungalow**
# 23, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
Tele: 077 3236354
Comfortable rooms, Attached Bathroom,
Hot water, Full furnitures

**Tip Top Gurest House**
# 34/2, Church Road, Nuwar-Eliya.
Tele: 052 2235742
Comfortable rooms with food,
Attached Bathroom, Hot water, Heater,
Function Hall, Wedding Hall & Restaurant
24 Hrs Service

கொழும்பு - யாழ்ப்பாணம்
**Tip Top Travels**
Tour arrangement, Hotel Booking & Transport
Colombo - Jaffna

**Tip Top Travels, # 296/A1, Galle Road, Wellawatta.**
**Office Tele: 077 3236354 / 0777 520284**
(பிரயாணத்தில் மாற்றம் இருப்பின் 6 மணித்தியாலங்களுக்கு முன் அறிவிக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிரும் விளக்கு ஒற்றுமையின் சின்னம்

பல்லின மத வேறுபாட்டின் பேறாக நாலாவித கலாசார விழுமியங்களை இந்த உலக அரங்கில் காண நேர்ந்தாலும் ஒற்றுமையின் சின்னமாக விளங்குவது ஒளிதரும் விளக்கே! எந்த ஒரு நிலைப்பாட்டிலும் ஒளியின்றி எதுவும் தெளிவில்லை என்ற எண்ணக் கரு விருட்சமாக வளர்ந்திருக்கின்றது.


ஒளியையோ, விளக்கையோ விலக்கி எந்தச் செயலையும் செய்வது அரிதாகிவிட்டது. விளக்கின் அருமையும் பெரிதே. அதனாலே தான் மணிவாசகரும் ''சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே'' என்றார். பண்டைய தமிழன் கண்ட பண்பாட்டுக் கோலங்களின் சின்னம் விளக்கு. ஆதி காலத்து ஆடையணியா மனிதன் இருளைக் கண்டதும் மருளவில்லை. தாடையில் கை வைத்துக் குந்தியிருந்து அக்னி மூட்டி விலங்குகளை ஒலியெழுப்பி விரட்டி இருளையே பகலாகக் கழித்த வரலாறு ஆதி கால மனிதனின் சேதி சொல்கிறது. கல்லை உரசியும் தடியை உரசியும் அக்கினி மூட்டியவன் ''தீ வட்டி'' வரை முன்னேறினான். பின் என்ன ''அக்னி'' மனிதனின் அன்றாடத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது. இதன் முகிழ்ப்பே விளக்கு ஆகும்.

மனிதனுடன் விளக்கும் பல பரிணாமங்களைக் கண்டுள்ளது. ''விளக்கு'' எனும் சொல் பல பொருள்களைக் கொள்ளும். தெளிவாக்குவது, பிரகாசிக்கச் செய்வது, சொல்வது, ஒளிதரும் சாதனம் என்று நீளும். இதில் நாம் சிந்திக்க இருப்பது குத்து விளக்கே. நிலையான விளக்கே குத்து விளக்கு. பண்டைய தமிழன் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் அரண்மனை, ஆலயங்கள், வீதி, முன்றில் என்று எல்லா இடங்களிலும் விளக்கேற்றி மகிழ்ந்த செய்திகளை தமிழ் வரலாற்று நூல்கள் பகருகின்றன.

மண்மனை கட்டி வாழ்ந்த காலத்தில் மண்ணால் ஆக்கப்பட்ட அகல் விளக்கே'' பாவனையில் இருந்ததாக அறிய முடிகின்றது. பின்பு மனிதன் ஆராய்ந்து முன்னேற முன்னேற பல கண்டு பிடிப்புகள் உதயமாகின. நிலத்தில் நிலையாக சிலைபோல என்றும் நிலைத்திருக்கும் விளக்கை ''குத்து விளக்கு'' என்றனர். கைகளில் தூக்கிச்செல்லக் கூடிய விளக்கை கை விளக்கு என்றும் ஆலயங்கள் அரண்மனைகள், மாளிகைகளில் எந்த நேரமும் தொங்கவிடப் பட்டிருக்கும் விளக்கை ''தொங்கு விளக்கு என்றும் கூறுவர். தூக்கிச் செல்லக்கூடிய விளக்கு ''தூக்கு விளக்கு'' என்றும் எரிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள விளக்கை ''தூண்டாமணி விளக்கு'' என்றும் பிரகாசமுடன் இருப்பது ''நந்தாவிளக்கு'' என்றும் கூறப்படுகிறது. இப் பெயரில் நூல் ஒன்றும் உள்ளது.

ஆலயங்களில் பெண் உருவம் ஒன்று கரங்களில் ஏந்தி நிற்கும் விளக்கு. ''பாவை விளக்கு'' எனப்படும் வீட்டு மாடத்தில் வைத்து எரிய விடும் விளக்கு ''மாட விளக்கு''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும் விளக்கின் பேற்றை விளக்க முற்படின் சொல்லில் அடங்கா அத்தனை மகத்துவம் விளக்கிற்கு உண்டு. மணமகனின் இல்லத்தில்புகும் புதுமண மங்கை நல்லாளை என்ன கூறி வரவேற்பர்? ''இல்லத்திற்கு விளக்கேற்ற வனிதை ஒருத்தி வந்தாளே என வாயூற வரவேற்பர்.

ஞானிகள் கூற்றுப்படி விளக்கில் இலட்சுமி வாசம் செய்கின்றாள் என்பது திடமான ஐதீகம். குத்து விளக்கும் அன்றிலிருந்து இன்றுவரை பல வடிவங்களைப் பெற்று விட்டது. ஒரு முகம் இரண்டு மூன்று நான்கு, ஐந்து என்று வளர்ந்து மேலும் அலங்காரப் பொருளாகி முகங்களும் விரிவடையச் தொடங்கி விட்டன.

பழைமையின் பாவனையில் ஐந்து முகமுடைய குத்து விளக்கையே இன்றும் தமிழ்நாட்டில், ஏன் இங்கும் பார்க்க முடிகின்றது. ஐந்து எனின் மகத்துவம் அப்படி. பஞ்சலோக விளக்கு தனி மகத்துவம் பெற்றது. வைத்த இடத்திலேயே கனதியாக நிற்க வல்லது. அழகிய பெண்ணைப் பார்த்துக் குத்து விளக்கைப் போல் நிற்கிறாள் என்போமே அது போன்றதே. விளக்கு ஏற்ற எண்ணெய், திரிவேண்டாமா?





ஒளியின்றி விளக்கமில்லை. மகிழ்ச்சியில்லை. எந்தவொரு நன்மையான காரியத்தையும் தீபம் ஏற்றதலுடன் ஆரம்பிப்பது தமிழர்தம் பண்பாடாகும். விடிகாலையிலும் இருள் சூழ முன்பும் இல்லங்களில் விளக்கு ஏற்றுவதே சாலச் சிறந்தது என்பது சான்றோர் கூற்று.

பஞ்சுத் திரியே இதற்கு சிறந்தது. தாமரைத் தண்டுத் திரிஏற்றினால் வினைகழியுமாம். காய்ந்த வாழைத் தண்டுத்திரி இட்டு ஏற்றினால் தெய்வ குற்றம் நீங்கும் என்பர். வெள்ளெருக்குப் பட்டை திரி செல்வம் தரும். சிவப்புச் சேலைத்திரி திருமணத் தடை விலகும். மஞ்சள் சேலைத் திரி அம்பாள் அருள் கிடைக்கும் என்பர். நெய் விளக்கே சிறந்தது. நல்லெண்ணையும் நன்று. விநாயகருக்குத் தேங்காய் நெய். விளக்கெண்ணையும், இலுப் பெண்ணையும் பாவனையில் இருப்பினும் நெய், நல்லெண்ணை தேங்காய் எண்ணை வகைகளே சிறந்ததாகச் சொல்லப்படுகின்றது.

விடிகாலையிலும் இருள்சூழ முன் இல்லங்களில் விளக்கு ஏற்றுவதே சாலச்சிறந்ததென்பது சான்றோர் கூற்று. சுமங்கலிகளும் மற்ற மங்கையர்களும் ஆசாரசீலராய், அனுட்டான முறையில் விளக்கு ஏற்ற வேண்டியது முக்கியம் எனப்படுகின்றன. இல்லத்தில் அலங்காரப் பொருளாகி உயர்ந்த பன்முகங்களுடன் கூடிய விளக்கும் வந்துவிட்டது.

அன்பு, அறம், அருள் எனும் மூவகைத் தத்துவங்களை உணர்த்தி நிற்கும் தீபமும் விளக்கு திரி, எண்ணை என்ற மூன்றின் வேலையே. கிருத்திகை, தீபாவளி காலங்களில் வைக்கப்படும் தீப







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையின் மகத்துவமும் இதுவே. இந்து தர்ம தத்துவமே தூண்டு சுடரனைய சோதி என்பதுதானே ! தன்னையே எரித்து ஒளி வெள்ளம் பெருக்கும் விளக்கு ஆத்மீகப் பிரகாசத்திற்கும் இருள் சூழ்ந்த மனதை ஒளிபெறச் செய்வதற்கும் வழி வகுக்கின்றது.

**விளக்கில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்பது திடமான ஐதீகம் ஒளியைத் தரும் விளக்கு காலப்போக்கில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று விளங்குகின்றது.**

இது மாத்திரமா ஒளி தரும் வழி செய்திகளோ சமய தத்துவங்களின் படி ஏராளம். ஆத்திகராயினும் நாத்திகராயினும் சரி மங்கள விளக்கேற்றுதல் என்பது முக்கிய அம்சமாய்விட்டது. வீனஸ் சிலைக்கு விளக்கு ஏற்றியதும் பேராசிரியர் ஈஸ்ரீன் அவர்கள் மெழுகுதிரி ஏற்றிப் பிரார்த்தனை செய்த குறிப்புகளும் இருக்கத்தான் செய்கின்றது. எந்த விழா எனிலும் விளக்கேற்றுவது முக்கியமாக்கப்பட்டது. திசை பார்த்து விளக்கு ஏற்றும் முறையும்கூறத் தவறவில்லை. வடக்குத் திசை பொருள் வசதி, கிழக்கு துயரம் விலகும். மேற்கு கடன் விலகும். தெற்குத் திசை தவிர்க்கப்படல் வேண்டும். ஆலய மகோற்சவ காலங்களில் ஏகதீபம் பஞ்ச ஆரத்தி தீபம் சகலரும் அறிந்ததே.


அதிவிசேட அபிஷேக ஆராதனை காலங்களில் இந்துதர்ம விதிப்படி ''அஜிதாகமத்தில்'' 16 தீப வகைகளை தீப ஷோட சோபசாரம் எனக் குறிப்பிட்டு விளக்கியுள்ளனர்.


தூபம், ஏகதீபம், அலங்கார தீபம், நாக தீபம், விருஷதீபம், புருஷாமிருக தீபம், சூலதீபம், ஆமை தீபம், கஜதீபம், சிம்மதீபம், வியாக்கிர தீபம் (புலி), கொடி தீபம், மயூர தீபம், பஞ்சதட்டுடன் கும்பதீபம், நட்சத்திர தீபம், மேரு தீபம் என்பவையே ஆகும்.

இத்துடன் கோபுர வடிவில் தமிழ்நாட்டு பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த ஆலயங்களில் 108 திரியுடன் பவ்வியமாக முழு மூலஸ்தான ஒளிபரவும் அறையில் சிவாச்சாரியார் தூக்கிக் காட்டுவாரே? அதன் பெருமை மிகுதியே சோதிடத்தின்படி எவராயினும் 27 நட்சத்திரங்களில் ஒன்றில் அடங்குவர். ஒவ்வோர் நட்சத்திரமும் நான்கு பகுதிகள் கொண்டது. 27 நட்சத்திரத்தையும் நான்கால் பெருக்க கிடைப்பது 108. தீபஆரத்தி சகல தோஷ நிவர்த்தி. ஒரு சேரக் கிடைக்க வேண்டிநிற்கும் பாவனையே இதுவாகும்.

''சொல்லக விளக்கது சோதியுள்ளது. பல்லக விளக்கது பல ரும் காண்பது'' என்று எடுத்துக் கொள்வோம். 108 தீப தரிசனம் கிடைக்கின் பாவம் கழியும் என்பது ஞானிகள் கூற்று.

**- கலைமாமணி பொன். தெய்வேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய கலை, கலாசார நிகழ்வுகள்

## இலங்கையில்

**மே 08-09 :** ஆலாபனா சங்கீத சபாவின் 10வது ஆண்டு நிறைவையொட்டிய இசைவிழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறுகிறது. இந்தியாவில் இருந்து வருகை தரும் என். ரங்கநாத சர்மா (பாட்டு), மிருதங்க வித்துவான் கலைமாமணி ஸ்ரீ முஷ்ணம் ராஜா ராவ் ஆகியோருடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தரும் இசைக் கலைஞர்கள் மு.துஷ்யந்தன் (பாட்டு), த. வாகீசன் (பாட்டு), ஆர். தாரணி (பாட்டு), சுகன்யா (பாட்டு) ஆகியோரும் பங்குபற்றவுள்ளார்கள்.

## சர்வதேசத்தில்

### இந்தியா - புதுடெல்லி

**மே 06 :** Nicholina Nicholieski Performs - Epicentre Guragaon - Eka Unique Bharathanatyam.

**மே 07 :** Indian Dance - At Buckuian Arts Entrec At St. Mary's School 8 p.m.

**மே 08 :** The Attic Connaught Place - 6.30 p.m Bharathanatyam Solo.

### இந்தியா - தமிழ்நாடு

**மே 08 :** பி. பிரவீன் குமாரின் வசந்த உற்சவம் நடன விழா - மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நடைபெறும்.

**மே 09 :** நர்த்தகி நடராஜ், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தில் வசந்த உற்சவத்தில் நடனவிருந்தளிக்கிறார்.

**மே 19-26 :** மேலத்தூர், 70ஆவது வருட பாகவத மேளா நாடக மஹோற்சவம், பக்தி இசை, நாட்டியம், நடனம்.

### அமெரிக்கா -கலிபோர்னியா

**மே 16 :** அரங்கேற்றம் - Ishaani Saba Irvine CA

**மே 23 :** Nachle India 2 - Ahila Gulasekarar and the Arpana Dance Company, Ektaa Centre, Irvine, CA.

**மே 23 :** Irvine CA - Ektaa Centre வழங்கும் இந்திய மரபு நடனங்கள்
விபரங்களுக்கு : www.ektaacenter.org.

**மே 25 :** பஞ்சபூதம் - Project Rishi UCLA, Freud playhouse, Westwood, CA.

### அமெரிக்கா - சிகாகோ

**மே 10 :** சிக்காகோ 11 ஹேமா ராஜகோபாலன் அளிக்கும் நடன விருந்து
இடம்: Claudia Cassidoy Theatre, Chicago Cultural Centre,785E, Washington St,Chicago 11. 60602.

**மே 31 :** Lemont 11 - Natya Dance Theatre, Hema Rajagopalan present a world Lemont of a work bassed on the stage poets. At Hindu Temple of Greater Chicago 109151, Lemont Road, Lemont 11, 60439.

### அமெரிக்கா - அட்லான்ரா

**மே 30 :** அட்லான்ரா GA - Gargee Anantani Vasavada performes at the Hindu Temple of Atlanta.

### சிங்கப்பூர்

**மே 28 :** சூர்யா (சிங்கப்பூர்) வழங்கும் Global Festival of Indian Dance & Music - Isha இந்தியாவில் இருந்து 25 கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். இடம் : Singapore Chinese Orchestra Concert Hall or Singapore Conference Hall, 7, Shenton Way, 7.30 p.m.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள எழுத்தாளர்கள், மற்றும் கலை, இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து இலக்கியம், கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு ஆகியன குறித்த கட்டுரைகளையும், தகவல்களையும் அதனோடு தொடர்புடைய தெளிவான படங்களையும் எதிர்பார்க்கிறோம்.

- ஆசிரியர்

EDITOR, KALAIKESARI
NO.185, GRANDPASS ROAD, COLOMBO -14, SRILANKA.
email:- editor@kalaikesari.com/subscription@kalaikesari.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான வாழ்விற்கு
# மருத்துவ குணங்களடங்கிய
# மூலிகை நிவாரணி

HERBAL 100% NATURAL

Baraka®

# Black Seed Oil

## கருஞ்சீரகம்

*The All Purpose Oil "Trusted for Generations"*




**குறிப்பீடுகள்:**

- ✓ இருமல்
- ✓ மூக்கடைப்பு
- ✓ தொண்டை வலி
- ✓ முதுகு வலி
- ✓ முடி உதிருதல்
- ✓ இள நரை

சகல சுப்பர் மார்க்கட், பாமசி, ஆயுர்வேத மருத்துவ சாலை மற்றும் பரகா நேசர் சொப் முகவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

Approval Number : 02/01/PE/06/094

Bio Extracts Ads

Hotline: 0773 688 685

Manufactured by: **BIO EXTRACTS (PVT) LTD.**
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Web: www.barakaoil.com E-mail: bioext@slt.lk Fax: +94 11 2827126
Marketed by: **EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் மடல்

### அருமையான உருவநேர்த்தி உள்ளடக்கம்!

அன்புடையீர் வணக்கம்

'கலைக்கேசரி' யின் இரண்டாவது, மூன்றாவது இதழ்கள் என் கைகளுக்குக் கிட்டின. எடுத்த எடுப்பிலேயே அருமையான அட்டைப்பட வடிவமைக்கப்பட்ட உருவ நேர்த்தி மனதைக் கவர்ந்தது. வாசிக்க வாசிக்க, சஞ்சிகையின் உள்ளடக்கத்திலும் சிந்தை கொள்ளை போனது.

தூய லூசியாஸ் பேராலயம் பற்றிய கட்டுரை, கட்டிடக் கலை என்ற நோக்கில் எழுதப்பட்டுள்ளது. லூசியாளின் முன்றலில் தவழ்ந்தவளாகிய எனக்குக்கூட பல புதிய தகவல்களை அள்ளித் தருவது அக்கட்டுரை. அதே இதழில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் குறித்த இன்னொரு கட்டுரை, வழிபாட்டு மரபு என்ற கோணத்தில் அது குறித்துப் பேசுகிறது. சமநிலையான நோக்கு!

'அங்கர் வாற்' பற்றிய விரிந்த தகவல்களைச் சிறந்த முறையில் சுருக்கித் தந்திருப்பது பாராட்டுக்குரியது. உயர்தர ஆங்கில சஞ்சிகைகளில் மட்டுமே நாம் வாசிக்க முடிகின்ற இவை போன்ற பயனுள்ள விடயங்களை 'கலைக்கேசரி' கொண்டு தருவது மன மகிழ்வைத் தருகிறது. 'மறந்தவையும் மறைந்தவையும்' கட்டுரை, எமது பண்பாட்டு வேர்களை நோக்கி எம்மை இட்டுச் செல்வதாய் வளர்கிறது. ஒவ்வொரு விடயமும் தன்னளவில் முழுமை பெற்றுத் திகழ்கிறது.

சகல மட்டத்தினரையும் சென்றடைய வேண்டும் என்பதற்காகக் கலைக்கேசரி தனது குறிக்கோளிலிருந்து விலக வில்லை. வாசகர்களான எமது எதிர்பார்ப்பையும் பொய்ப்பிக்க வில்லை. உங்கள் தேடலின் ஆழமும் அகலமும் 'கலைக்கேசரி' யின் தரத்திற்கான மூலாதாரங்கள்! அனுபவமிக்க ஆசிரியர்களது பக்குவமான வழிகாட்டலும் கடின உழைப்பும் அர்ப்பணிப்புச் சிந்தையும் 'கலைக்கேசரி' யை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும்; வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள
**வசந்தி தயாபரன்**
கொழும்பு

★★★★★

### வியப்புத் தருகிறது

'கலைக்கேசரி'யின் பிரமாண்ட தோற்றம் வியக்க வைக்கிறது. சாதாரண வாசகருக்கு சஞ்சிகையின் விலை' (ரூ.200/=) சற்று அதிகமானாலும் அதற்கேற்ற கனதி சஞ்சிகையில் உள்ளது. இன்னும் சொல்வதனால் 'India Perspective' சஞ்சிகையை நினைவூட்டும் வகையில் ஆக்கங்கள் அமைந்துள்ளன. பளிச்சென்று இருந்தால் சரி!

**அன்புமணி**
மட்டக்களப்பு

### "இதுபோல் ஒரு தமிழ் இதழை முன்னர் கண்டதில்லை"

அன்புடையீர் வணக்கம்!

கடந்த இரண்டு மாத கலைக்கேசரி இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். மட்டற்ற மகிழ்ச்சி. எனது மனப்பூர்வமான நன்றி தங்களுக்கு உரித்தாகட்டும்.

இலங்கை தமிழ் இலக்கிய உலகம் இதற்கு முன் இப்படி மணத்தில், தரத்தில், குணத்தில் நிறைந்த ஓர் இதழைக் கண்டதில்லை. இது முடியுமா என நினைத்தார்கள். இவ்விதம் வெளிவர முடியுமா என எண்ணிய நீண்ட கால ஏக்கத்தை முடியும் என நிஜமாக்கிய தங்களுக்கு என் பணிவான வணக்கத்தை தெரிவிக்கிறேன்.

இதனையும் விட பெரிதாகப் பாராட்ட வார்த்தைகள் கிடைக்கவில்லை. இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். தங்களின் வெளியீட்டுக் குழுவினர் இன்னும் சிறப்பாக பணிபுரியும் திறன் உள்ளவர்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

வாழ்க ! வளர்க !! பொலிக !!!

இப்படிக்கு
**வேல் அமுதன்** *(எழுத்தாளர்)*
'மகவம்' கதைஞர் வட்ட அமைப்பாளர்
06.04.2010


★★★★

### சிறு குறையுமில்லை

அன்புடையீர் வணக்கம் ஆசீர்வாதம்

பங்குனி மாத கலைக்கேசரி இதழ் கைக்குக் கிடைத்தது. அமைப்பு, அழகு, படங்கள் பிரமாதம். சிறு குறையுமில்லை. பக்கங்கள் 66 இல் தங்கட்டும். பகுதிகள் உரிய பகுதியிலேயே தொடரட்டும். மஞ்சள், சிவப்பு, றோஸ் கலர்களையே அட்டை காணின் கவர்ச்சி கூடும். பளிச் சென்று இருந்தால் சரி. எம். எல்.வி. பலரையும் மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தது. தங்கள் பணி தொடரட்டும்!

**பொன். தெய்வேந்திரன்**
பண்டாரிக்குளம், வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Jaffna now goes global with the opening of the world's local bank.
We bring you international recognition and global access by adding Jaffna to our elaborate network of over 8,500 HSBC branch offices in more than 86 countries and territories across the world.

Providing a wide range of customised financial products and services to personal and corporate clients, we are proud to be a part of Jaffna's development.

**Call 011 4 4722 77 Click www.hsbc.lk**

HSBC
The world's local bank

*Issued by The Hongkong and Shanghai Banking Corporation Limited. Fitch rating of AAA (lka).*

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt) Ltd. at No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org